


# சங்கமம்

## கவிதைக் குவியல்

தமிழ் எழுத்தாளர் சங்கம் - ஜேர்மனி

# சங்கமம்

## கவிதைக் குவியல்

தமிழ் எழுத்தாளர் சங்கம், ஜேர்மனி

வெளியீடு
தமிழ் எழுத்தாளர் சங்கம் - ஜேர்மனி

# நூல் தரவு


| | | |
|---|---|---|
| நூல் | : | சங்கமம் |
| நூலாக்கம் | : | வ.சிவராஜா<br>க.அருந்தவராஜா<br>பொ.சிறிஜீவகன்<br>அ.புவனேந்திரன் |
| பதிப்பு | : | முதலாம் பதிப்பு 2012 |
| பதிப்புரிமை | : | தமிழ் எழுத்தாளர் சங்கம் - ஜேர்மனி |
| வெளியீடு | : | தமிழ் எழுத்தாளர் சங்கம் - ஜேர்மனி |
| அச்சுப்பதிப்பு | : | கீதா பப்ளிகேசன்,<br>கொழும்பு - 13<br>இலங்கை. |
| அட்டை வடிவமைப்பு | : | செல்வன். பு.பானுஸ்கந்தா<br>டியுஸ்பேர்க், ஜேர்மனி |
| நூல் வடிவமைப்பு | : | மேழிக்குமரன் |

| | | |
|---|---|---|
| Book Title | : | **SANGAMAM** |
| Erste Auflage | : | 2012 |
| Copyright | : | Tamilischer Schriftsteller Verein - Germany |
| Herausgeber | : | Tamilischer Schriftsteller Verein – Germany |
| Originaltextcopyright | : | Schriftstellervereinigung<br>Herr V. Sivarajah<br>Herr K.K. Arunthavarajah<br>Herr P. Srijeevaghan<br>Herr A. Puvanenthiran |
| Umschlaggestaltung | : | Herr.P.Banuskantha<br>Duisburg , Germany. |
| Druck und Bindung | : | Keethaa Publication<br>Colombo -13<br>Sri Lanka |



தொடர்புகளுக்கு/Kontakt:

**V.Sivarajah**
**Am Windhoevel – 18a**
**47249 Duisburg, Germany.**
**Tel: 0203 8073898**
**E-Mail: mann_erde_sivarajah@hotmail.com**

**K.K.Arunthavarajah**
**P.Fach. 120116**
**59485 Soest, Germany.**
**Tel: 02921 343137**
**E.Mail: arunthavarajah@gmail.com**

# அணிந்துரை

மனிதனை இவன் யார் என அடையாளப்படுத்துவன அவனது மொழியும் சமயமும் பண்பாடும்தான். இவற்றைக் கொண்டுதான் அவனது இனத்தின் தனித்துவம் நிலைக்கிறது.

வாழ்விடம் பல்வேறு காரணங்களால் மாறுபட்டாலும் அவன் வாழும் இடத்தில் தனது இனத்துக்குரிய அடையாளங்களை இழப்பானேயானால் அவன் வரலாற்றிலிருந்து தொலைந்து விடுவான்.

ஈழத்தமிழர்கள் பலர் ஈழப்போர் காரணமாகப் புலம் பெயர்ந்து உலகின் பல்வேறு நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆனால் புலம்பெயர்ந்தாலும் தம் இனத்தின் நிலைபெயராது தாம் வாழும் நாடுகளில் தம் இனத்தின் அடையாளங்களைப் பேணிவளர்த்து வருகின்றார்கள்

அதிகமான ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் ஜேர்மனியில் இருந்து தமிழ் எழுத்தாளர் சங்கத்தினர் செய்துவரும் பண்பாட்டுப் பணிகள் இதனை மெய்ப்பிக்கின்றன. அவர்களின் பணிகளுக்குச் சிகரம் வைத்தாற் போல இந்தச் "சங்கமம்" கவிதைக் குவியல் வெளிவருகின்றது.

இந்தக் 'கவிதைக் குவியலில்' பதினாறு கவிஞர்கள் சேர்ந்து எழுபத்தொரு கவிதைகளைக் குவித்திருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் "தமிழ் எழுத்தாளர் சங்கம் - ஜேர்மனி"யின் உத்தியோகத்தர்களாயும், உறுப்பினர்களாயும் இருக்கிறார்கள். இதனைக் கொண்டு இச்சங்கம் தமிழ் எழுத்தாளர் உருவாக்கப்பணியில் எவ்வளவு வெற்றி பெற்றிருக்கின்றது என்பதனையும் அதன் பெறுமானத்தையும் மட்டிடமுடிகிறது.

உள்ளத்தில் ஊற்றெடுத்துவரும் உணர்வுகளையும் அனுபவங்களையும் வெளிக் கொணர்வதற்கு கவிதை சிறந்ததோர் ஊடகம் மட்டுமல்ல, சிறந்த கலை வடிவமும் ஆகும் என்பதை இக்கவிதைக் குவியலில் காணமுடிகிறது.

இக்கவிதைக்குவியல் புலத்தில் உள்ளவர்களின் உணர்வுகளையும், புலமை மலர்ச்சிகளையும் தாயகத் (தமிழ் ஈழத்) தமிழர்களும், ஏனைய புலங்களில் உள்ளவர்களும் அறிந்து சுவைத்து மகிழ்வதற்கு நல் விருந்தாக அமைந்திருப்பது பாராட்டுக்கு உரியது.

"வாழும் இடங்களில் எல்லாம் நம் இனத்தின் வளம் பெருக்கி வாழ்க" என வாழ்த்துகின்றோம்.

வான்நோக்கிக் கிளைபரப்பி
வளர்ந்து நின்ற ஆலமரம்
தான்சாய்ந்து போனாலும்
விழுதுகளே தாங்குதல்போல்
தேனான தமிழ்ஈழம்
திசைமாறிப் போனாலும்
போனவர்கள் புலங்களிலே
விழுதுகளாய்ப் பூக்கின்றார்!

இளவாலை
தமிழ் ஈழம்

கலாபூஷணம், சைவப்புலவர்
சு.செல்லத்துரை

# எழுத்தாளர் சங்கம் மேற்கொண்ட பணிகள் சில.....

இலங்கையின் மூத்த பத்திரிகையாளரும், யாழ் ஈழநாடு, தினக்கதிர் பத்திரிகைகளின் பிரதம ஆசிரியரும், ஐம்பது வருட பத்திரிகைத்துறை அனுபவஸ்தருமான திரு.எஸ்.எம். கோபாலரட்ணம் அவர்கள் ஜேர்மனி வந்தபோது அவரை அழைத்துக் கௌரவித்துச் சிறப்பித்ததோடு, அவரால் எழுதப்பட்ட **"ஈழமண்ணில் இந்தியச்சிறை"** என்னும் நூலை 22.06.2002இல் டியுஸ்பேர்க் நகரில் அறிமுகம் செய்து, விற்பனை செய்து உதவினோம்.

இலங்கையின் மூத்த பத்திரிகையாளரும், யாழ் ஈழநாடு பத்திரிகையின் ஆசிரிய பீடத்தில் கடமை புரிந்தவரும், தற்போது பிரான்ஸ் பாரிசில் வசிப்பவருமான திரு.எஸ்.கே.காசிலிங்கம் அவர்களை கௌரவித்து, அவரால் எழுதப்பட்ட **"என்னுள் என்னோடு"** என்னும் நூலை 21.09.2002இல் டியுஸ்பேர்க் நகரில் அறிமுகம் செய்து, விற்பனை செய்து உதவினோம்.

"மண்" சஞ்சிகையின் ஆசிரியர் திரு.வ.சிவராஜா அவர்களின், பத்திரிகைத்துறையில் 25 ஆண்டு காலப்பணியை பூர்த்தி செய்தமைக்காக எழுதிய 50 சிறுகதைகளின் தொகுப்பான **"கல்லறைப்பூக்கள்"** என்னும் சிறுகதைத் தொகுப்பை 25.08.2001இல் டியுஸ்பேர்க் நகரில் வெளியீடு செய்து, விற்பனை செய்து உதவியதோடு, திரு.வ.சிவராஜா அவர்களைக் கௌரவித்துச் சிறப்பித்தோம்.

ஜேர்மனியிலிருந்து வெளிவரும் **"வெற்றிமணி"** பத்திரிகை ஆசிரியர் திரு.மு.க.சு.சிவகுமாரன் அவர்கள் கலாநிதிப் பட்டம் பெற்றமைக்காக 10.05.2003 அன்று வூப்பெற்றால் நகரில் நடாத்தப்பட்ட பாராட்டு விழாவில் நமது எழுத்தாளர் சங்கத்தினால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

இளம் கவிஞர் செல்வி.வாசுகி குணராசா அவர்களால் எழுதப்பட்ட **"விழி"** என்னும் கவிதை நூல் வெளியீட்டு விழாவினை 19.07.2003 அன்று டியுஸ்பேர்க் நகரில் நடாத்தி, அவரைக் கௌரவித்துப் பாராட்டி, நூலை விற்பனை செய்து உதவி புரிந்தோம்.

இவ்விழாவின் சிறப்பு விருந்தினராக இலங்கையின் முன்னாள் பா.உ. கலாநிதி திவ்வியநாதன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இங்கிலாந்தில் வசிப்பவரும், கவிஞரும், எழுத்தாளருமான திரு.கந்தையா இராஜமனோகரன் அவர்களின் மூன்று கவிதை நூல்களை 5.10.2003அன்று டியுஸ்பேர்க் நகரில் அறிமுகப்படுத்தி, அவரைக் கௌரவித்துப் பாராட்டியுள்ளோம். அவரது நூல்களான **"நாற்று", "தமிழிசைப் பாடல்கள்", "வானொலிக் கவிதைகள்"** ஆகியவற்றை விற்பனை செய்து உதவினோம்.

இதே விழாவில் இந்தியாவிலிருந்து வருகை தந்த உலகத் தமிழ்ப் பேரவைத் தலைவர் டாக்டர் இரா.சனார்த்தனம் அவர்களை வரவேற்று, கௌரவித்துச் சிறப்பித்ததுடன், அவரின் சில நூல்கள் அறிமுகம் செய்யப்பட்டு விற்பனை செய்து உதவினோம். இந்தியத் தமிழ் எழுத்தாளர்கள் தொடர்பான கலந்துரையாடலும் இடம்பெற்றது.

பிரான்ஸ் பாரிஸ் நகரில் வசிப்பவரும், ஏ.பி.சி. வானொலி அறிவிப்பாளரும், கவிஞருமான திரு.வண்ணை தெய்வம் அவர்களை 9.11.2003 அன்று டோர்ட்முண்ட் நகரில் கௌரவித்துச் சிறப்பித்ததுடன், அவரால் எழுதப்பட்ட **"யாழ்ப்பாணத்து மண்வாசனை"** என்னும் நூலை அறிமுகம் செய்து விற்பனை செய்து உதவினோம்.

ஜேர்மனிக் கவிஞர் திரு.அம்பலவன் புவனேந்திரன் அவர்களின் **"முடிவல்ல ஆரம்பம்"** என்னும் கவிதை நூல் வெளியீட்டு விழாவை 24.01.2004 அன்று டியுஸ்பேர்க் நகரில் நடாத்தி, அவரைக் கௌரவித்துச் சிறப்பித்து நூலை விற்பனை செய்து உதவினோம்.

ஜேர்மனிய எழுத்தாளர் திரு.சதா சிறிகாந்தா அவர்களின் **"ஆரோக்கிய வழிகாட்டி"** என்னும் மருத்துவநூல் வெளியீட்டு விழாவில் (8.02.2004) அவரைக் கௌரவித்துச் சிறப்பித்து, நூல்களை விற்பனை செய்து உதவினோம்.

ஜேர்மனிக் கவிஞர் திரு.த.சு.மணியம் அவர்களின் **"ஓர் ஆத்மாவின் இராகம்"** என்னும் கவிதை நூல் வெளியீட்டு விழா 10.04.2004 அன்று சால்ஸ்ஹவுசன் நகரில் நடைபெற்றது. அவ்விழாவில் திரு.த.சு.மணியம் அவர்களைப் பாராட்டிக் கௌரவித்து, நூலை விற்பனை செய்து உதவினோம்.

பத்து வருடங்களுக்கு முன்பு சிறுவர்களுக்கான **"சிறுவர் அமுதம்"** என்னும் சஞ்சிகையை வெளியிட்டுத் தமிழ்பணி செய்த அமரர்.சின்ன இராஜேஸ்வரன் அவர்களின் பத்தாவது ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டத்தை 19.04.2004 அன்று டியுஸ்பேர்க் நகரில் நடாத்திச் சிறப்பித்தோம்.

ஜேர்மனிக் கவிஞர் திரு.த.சு.மணியம் அவர்களின் **"ஓர் ஆத்மாவின் இராகம்"**(கவிதைநூல்), பாரிஸ் கவிஞர் திரு.வண்ணை தெய்வம் அவர்களின் **"தாயக தரிசனம்"**, பாரிஸ் கவிஞர் திரு.சரீஸ் அவர்களின் **"விடியலின் முகவரி"**(கவிதைநூல்) ஆகிய மூன்று நூல்களும் 20.06.2004 டியுஸ்பேர்க் நகரில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. நூல்கள் விற்பனை செய்து உதவப்பட்டது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக இலங்கையிலிருந்து வருகை தந்த இலங்கை கல்விஅமைச்சின் மேலதிக செயலாளரும், மூத்த எழுத்தாளருமான திரு.தில்லைநடராஜா அவர்கள் கௌரவிக்கப்பட்டுச் சிறப்பிக்கப்பட்டார். இலங்கைத் தமிழ் எழுத்தாளர்கள் பற்றியும், புகலிடத் தமிழ் எழுத்தாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள், அவற்றுக்கு இலங்கைத் தமிழ் எழுத்தாளர்கள் உதவக்கூடிய வழிகள் பற்றியும் கலந்தாலோசிக்கப்பட்டது.

16.10.2004இல் லூடன்சைட் நகரில் எழுத்தாளரும் கவிஞரும், தமிழ்மணி. சி.இராஜகருணா அவர்களின் **ஒலிஇறுவட்டு** வெளியீட்டு விழா நடைபெற்றது. இவ்விழாவில் திரு.இராசகருணா அவர்களை பாராட்டிக் கௌரவித்ததோடு, இறுவட்டுகள் விற்பனையிலும் உதவினோம்.

எழுத்தாளர் சங்கச் செயற்குழு உறுப்பினரும், சங்கீத ஆசிரியையுமான திருமதி.கலைவாணி ஏகானந்தராஜா அவர்களின் **"பெற்றோரே தெய்வங்கள்"** என்னும் ஒலி இசை இறுவட்டு வெளியீட்டு விழா 14.05.2005 இல் வீசெ நகரில் நடைபெற்றது. அவர்களைப் பாராட்டிக் கௌரவித்ததோடு, விற்பனை உதவியும் செய்தோம்.

ஜேர்மனியில் பரந்து வாழும் எழுத்தாளர்கள், கவிஞர்கள், கல்வியாளர்கள், ஊடகவியலாளர்கள் என இருபத்திநான்கு பேரின்

விபரங்களையும், அவர்கள் ஜேர்மனியில் ஆற்றிவரும் பொதுச்சேவைகளையும் எம்மோடு ஒத்துழைப்பு வழங்கியவர்களின் துணையோடு தொகுத்து **"ஜேர்மனியில் தடம் பதித்த தமிழர்கள்"** என்ற ஆவணப்பதிவு நூலை தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் வெளியீடாக 23.09.2006 இல் டியுஸ்பேர்க் நகரில் வெளியிட்டோம்.

கண்டியில் உள்ள சிந்தனை வட்டத்தின் தலைவரும், எழுத்தாளருமான திரு.புன்னியாமீன் அவர்கள் ஒரு வெளியீட்டா ளருமாவார். இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு தொகுதி 4 என்ற **புன்னியாமீன் அவர்களின் நூறாவது நூல்** புலம்பெயர்ந்த ஈழத்து எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரக்கொத்து பாகம் 1 என்று வெளிவந்தது. இவரது நூறாவது நூலினை 16.03.2007 இல் டியுஸ்பேர்க் நகரில் வெளியிட்டு வைத்தோம் என்பதும் இந்நூல் புலம்பெயர் தமிழ்பேசும் மக்களின் ஆவணப்பதிவாக வெளிவந்துள்ளது என்பதுமாக இந்நூலினை வெளியிட்டு வைத்ததில் எமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. அத்தோடு அதே ஆண்டில் இந்த நூறாவது நூல் வெளியீட்டு விழா மலர் ஒன்றினையும் வெளியிட்டு வைத்தோம்.

ஜேர்மனியில் வாழ்ந்து வரும் சிறுகதை எழுத்தாளர்களில் பதின்நான்கு எழுத்தாளர்களின் சிறுகதைகளை தொகுத்து **"நிறங்கள்"** என்ற பெயரில் டோர்ட்முண்ட் நகரில் வெளியிட்டோம். 04.07.2009இல் நடைபெற்ற இவ்வெளியீட்டு விழாவில் கலாநிதி ஆ.க.மனோகரன் (இலண்டன்) அவர்கள் எழுதிய **''இலங்கை தேசிய இனமுரண்பாடுகளும் சமாதான முன்னெடுப்புகளும்''** என்ற நூலை அறிமுகம் செய்து வைத்தோம். அத்தோடு கலைவளன் சிசு.நாகேந்திரன் (அவுஸ்திரேலியா) அவர்கள் எழுதிய **"பிறந்த மண்ணும் புகலிடமும்"** என்ற நூலையும் அறிமுகம் செய்து வைத்தோம். இவ்விழாவுக்கு பிரதம விருந்தினராக இலங்கையின் தமிழ் பத்திரிகையான வீரகேசரியின் வாரவெளியீட்டு ஆசிரியர் திரு.வ.தேவராஜ் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

ஈழத்து முற்போக்கு எழுத்தாளரான மறைந்த எஸ்.அகஸ்த்தியர் அவர்களின் **"மானிட தரிசனங்கள்" "லெனின் பாதச்சுவடுகளில்"**

ஆகிய நூல்களை 25.10.2009இல் டியுஸ்பேர்க் நகரில் அறிமுகம் செய்து வைத்தோம். எஸ்.அகஸ்தியர் அவர்களின் மகள் நவஜோதி யோகரட்ணம் (இலண்டன்) அவர்களின் அனுசரணையோடு இவ்விழா சிறப்புற நடைபெற்றது.

ஜேர்மனியில் இருந்து இருமாதங்களுக்கொருமுறை வெளிவரும் "**மண்**" சஞ்சிகையின் இருபதாவது ஆண்டுவிழா டியுஸ்பேர்க் நகரில் 17.04.2010இல் நடைபெற்றபோது அதன் ஆசிரியரும், தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவருமான திரு.வ.சிவராஜா அவர்களை பொன்னாடை போர்த்தி, வாழ்த்துப்பா வழங்கி கௌரவித்தோம்.

சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு 10.01.2011இல் கொழும்பில் நடைபெற்றது. இவ்விழாவுக்கு நிதி வழங்கி உதவினோம். எமது இரு கட்டுரைகள் விழாவில் வாசிக்கப்பட்டு, விழா மலரில் வெளியாகின. இவ்விழாவில் எமது சங்கத்தின் பிரதிநிதியாக திரு.க.பத்தகுணசீலன் அவர்கள் இம்மாநாட்டில் கலந்து சிறப்பித்தார்.

எமது சங்கத்தின் உறுப்பினரும், விஜயலக்ஷ்மி ஞாபகார்த்த சிறுவர் கழக இயக்குனருமான திரு.க.பத்தகுணசீலன் அவர்களின் முப்பதாவது ஆண்டு திருமணநாள் விழா வுப்பெற்றால் நகரில் 29.10.2011இல் நடைபெற்றபோது, திரு.திருமதி.பத்மகுணசீலன் ஜெயகுமாரி தம்பதிகளை பொன்னாடை போர்த்தி, வாழ்த்துப்பா வழங்கி கௌரவித்தோம்.

**வ.சிவராஜா**

**தலைவர்**

தமிழ் எழுத்தாளர் சங்கம் - ஜேர்மனி

# உங்களுடன் ஒருசிலநிமிடங்கள்....

வணக்கத்தோடு உங்களை வரவேற்றுக் கொள்ளுவதில் பெருமகிழ்வு கொள்கிறோம்..

செம்மொழியான தமிழ்மொழியின் தொன்மையையும் சிறப்பினையும் அழகினையும் தமிழர்களாகிய எமக்குச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. உலகின் மூத்தமொழிகளுள் ஒன்றான தமிழ்மொழியானது இலக்கண இலக்கிய நூல்களுடன் இன்னும் பொலிவுடன் பல தேசங்களில் பேசப்பட்டு வருகின்ற உலகமொழியாக விளங்குகிறதென்பது தமிழராகிய எமக்கெல்லாம் பெருமிதமும் பெருமையுமல்லவா..?

இந்தியாவின் தென்தமிழகத்தில் தமிழை வளர்ப்பதற்காக மதுரையில் முதல் இடை கடை என முச்சங்கமமைத்து இறையனாரும் அகத்தியரும் நக்கீரரும் இன்னும் ஈழத்துபூதந்தேவனார் உள்ளிட்ட 4449 புலவர்களும் கூடி ஆய்வுகள் பல செய்தனர் என்றும் அதற்குப் பிற்பட்ட காலப்பகுதில் தமிழை மேம்படுத்தினர் என்றும் ஏட்டுச்சுவடிகளும் வரலாறுகளும் சான்று பகர்கின்றன. இதனை அடிப்படையாகக் கொண்டே தமிழிலக்கிய வரலாறு வரையப்பட்டதெனலாம். சங்கம் அமைத்த காலப்பகுதியிலிருந்தே கணிப்புக்கள் தொடங்கியதால் முற்பட்ட காலப்பகுதியை சங்ககாலம் என்றும் பின்னதை சங்கம்மருவிய காலமென்றும் அதையடுத்த பகுதியை பல்லவர் காலம் எனவும் தமிழக அரசியல் மாற்றங்களின் அடிப்படையில் தமிழ்மொழி வரலாற்றில் திருப்புமுனையாகவும் பொற்காலமாகவும் விளங்கிய பகுதியாகச் சோழர் காலத்தையும் அதையடுத்த காலப்பகுதியை இருபதாம் நூற்றாண்டு (தற்காலம்) என்றும் வரிசையாக இலக்கிய மேதைகளும் ஆய்வாளர்களும் வகைப்படுத்தினர் எனலாம்.

அந்த வகையில் ஆராய்ச்சிகளை மேற்கொண்ட பல அறிஞர்கள் தமிழை மூன்றாக வகுத்து முத்தமிழ் என்றனர். இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என வகைப்படுத்தி எம் தமிழின் சிறப்பை மேலும் மெருகேற்றினர் என்று குறிப்பிடலாம். முத்தமிழில்

முதலிடத்தை வகிப்பது இயற்றமிழாகும். இதில் எழுத்து பேச்சு உரை என்பன அடங்கும். அந்த உரையினை கூறிட்டுப் பார்த்தால் அவை நூற்பா செய்யுள் விருத்தம் பண் கவிதை புதுக்கவிதை கைக்கூ என விரியும். இவையனைத்தும் ஒரே இனத்தைச் சார்ந்தவை என்றாலும் அதன் முகங்களும் தன்மைகளும் வேறானவை.

காலத்துக்குக் காலம் மொழி தன்னை புதுப்பித்துக் கொள்வதுபோல் கவிதையிலும் தன்னை வளர்த்துக் கொள்கிறது. தமிழிலக்கியங்களை நாம் மேலோட்டமாக நோக்குகின்ற வேளைகளில் செய்யுள்களும் கவிதைகளுமே பல்கிப் பெருகியிருப்பதனைக் காண முடிகின்றது.

சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் தன்மையுடடையதான செய்யுள்கள் மற்றும் கவிதையின் பண்புகளில் ஒன்றாகப் பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும். கவிதை என்பதற்கு பலரின் பார்வைகளில் பல்வேறு வரையறைகள் உண்டு. கவிதை என்பது சொற்களால் கோர்க்கப்பட்ட ஓர் இலக்கிய வடிவம். உணர்ச்சி கற்பனை கருத்துக்களை வெளிப்படுத்தவும் தூண்டவும் கவிதை உதவுகிறது. வசனங்களின் நோக்கம் விளக்குவது: கவிதையின் நோக்கம் உணர்த்துவது எனலாம்.

பற்பல இலக்கியவாதிகள் கவிதைபற்றி பல்வேறு கருத்துக்களை குறிப்பிட்டாலும் - நேர்கோடுகளும் வளைகோடுகளும் வண்ணத்துடன் இணைந்தும் இணையாமலும் அழகியலாகும்போது ஓவியமாவதைப்போல் உள்ளடக்கம் அழகியலோடு இணைந்து கொள்ளும்போதும் உணர்வைத் தொடும் கவிதையாகிறது. சென்னை பல்கலைக்கழக ஆய்வாளர் தமிழ்ச்செல்வன் (தமிழ்கவிதைவரலாறு) சொற்களால் கட்டப்பட்ட கவிதை வடிவமே கவிதை என்கிறார். ஒரு இலக்கியகர்த்தா தன் எண்ணத்தை அல்லது கருத்தினை மிக விரைவாகவும் ஆணித்தரமாகவும் மற்றவரைக் கவரும் வகையில் படைப்பதற்கு செய்யுள் மற்றும் கவிதை இலக்கியங்கள் பெரும்துணை புரிந்தன எனலாம்.

முதல் நான்கு காலப் பகுதியினுள்ளும் பல்லவர் காலத்தில் அதிகமான பக்தியிலக்கியங்கள் எழுந்த போதிலும் சோழர்

காலப்பகுதியே தமிழிலக்கிய வரலாற்றில் பொற்காலம் எனக் குறிப்பிடுவதற்கு பலகாரணங்களும் சான்றுகளும் உண்டு. அதிகளவு இலக்கிய வடிவங்கள் இக்காலப்பகுதியில் தோன்றின என்றாலும் அரசனும் இலக்கியவாதிகளும் கைகோர்த்துத் தமிழுக்காய் உழைத்தனர் என்று குறிப்பிடுவதே இங்கு பொருத்தமாகவிருக்கும். 64 நாயன்மார்கள் அருளிய திருமறைகளை தேடிப் பெற்று இராஜராஜசோழ மன்னன் தொகுத்தான் என்பது வரலாறு. அத்திருமுறைகள் தேவாரங்களாகவும் செய்யுள்களாகவும் கவிதைகளாகவும் இருப்பதனை நம்மில் பலரும் அறிவோம்.

செய்யுள்களும் கவிதையும் சிறப்பாக வளர்ச்சி பெற்ற காலத்தை அடியொற்றி வந்த இருபதாம் நூற்றாண்டு காலம் கவிதையின் பரிமாணத்தை மேலும் விசாலப்படுத்தியதென்பதனை நாமின்று கண்கூடாகக் காணமுடிகிறது. இரண்டாம் உலகப்போருக்குப் பின் தொழிற்புரட்சி தொடர்பு சாதனங்களின் தாக்கத்தினால் விளைந்த நாகரீக பண்பாட்டுப் பரிமாற்றங்கள் மனித வாழ்க்கையை நேரடியாகவோ மறைமுகமாகவோ பெரியளவில் பாதித்தன. இதனால் சிந்தனைப்போக்கில் பெரியளவில் மாற்றங்கள் நிகழ்ந்தன எனலாம். இந்தமாற்றத்தின் எதிரொலியால்தான் தற்காலத்தில் கவிதையின் வீச்சானது மிகவும் ஆரோக்கியமானதாகவும் சிறப்புடையதாகவும் விளங்குவதனை எவரும் மறுக்க முடியாது.

கவிதையில் மரபுக்கவிதையே முற்பட்டகாலத்தில் தன் ஆளுமையை நிலைநிறுத்தியிருந்தாலும் தற்காலத்தில் மரபுக்கவிதையும் வசனக்கவிதை என்று சொல்லப்படுகின்ற புதுக்கவிதையும் இன்றளவும் பெரும்பாலும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. மரபுக்கவிதையானது யாப்பு, சந்தம், எதுகை, மோனை, அடியமைப்பு, ஓசை என்று தொடரும் இலக்கணக் கட்டுப்பாடுகளுடன் வரையப்பட வேண்டியதாகவிருக்கிறது. பக்தியிலக்கியங்களும் இதிகாச புராண இலக்கியங்களில் பெரும்பாலானவை செய்யுள் அல்லது பாடல்களாகவே அமைந்து காணப்பட்டன. உதாரணத்துக்கு ஈழத்து வரலாற்றைப் பொறுத்தவரையில் உ.வே.சாமிநாதையர், ஆறுமுகநாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை போன்றோர்களின் இலக்கியவடிவங்கள்

பாமரமக்களால் புரிந்துகொள்ள முடியாதனவாயும் பயன் பெறுவதில் மிகுந்த சிரமமிருந்ததாயும் பலராலும் குற்றம் சாட்டப்பட்டது. பண்டிதர்களும் பழமை இலக்கிய வல்லுனர்களும் கையாண்ட மரபுக்கவிதை இலக்கியமானது 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து இந்தக் கட்டுப்பாடுகளை எல்லாம் தகர்த்துவிட்டு புதிய பரிணாமமெடுத்து வெளிவரத் தொடங்க முற்பட்டது. இவ்வேளையில் பழமை இலக்கியவாதிகளாலும் வித்துவச்செருக்குக் கொண்டவர்களாலும் இந்தப் போக்கினை ஜீரணித்துக் கொள்ளமுடியவில்லை எனலாம்.

இந்த வசனகவிதைகளும் புதுக்கவிதைகளும் வெளிவந்தபோது பல்திசைகளிலுமிருந்து கண்டனங்களும் எதிர்ப்புகளும் காரசாரமான விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டன. பழையன கழிதலும் புதியன புகுதலும் காலத்தின் கட்டாயம் என்று பலர் வாதிட்டதுடன் புதுக்கவிதைப் புலவனையும் சாட்சிக்கு இழுத்து தம்வாதங்களை நிறுவினர். புதுமைக்கவிஞர்களாகப் புறப்பட்டவர்கள் வசனகவிதையின் முன்னோடி (கி.பி:1900க்குப்பின்) மகாகவி சுப்ரமணியபாரதியே என்று தமிழிலக்கிய உலகம் கொண்டாடுகின்றபோது மௌனித்திருந்தவர்கள் இப்போது ஏன் வரிந்து கட்டிக்கொண்டு வருகின்றீர்கள் என்று வினாத் தொடுத்தபோது பதில்கூறப் பலர் தயங்கினர்.

புதுக்கவிதைக்கும் இலக்கணங்கள் உண்டு என்று புதுமையை வரவேற்கும் தரப்பு நியாயப்படுத்தி சில கட்டுப்பாடுகளை நிறுவியது.புதுக்கவிதைக்கு இலக்கணமோ வடிவமோ இல்லை என்பது தவறு. வசனத்தில் எழுதப்படுபவை எல்லாம் புதுக்கவிதை ஆகிவிடாது. உருவத்தில் மட்டுமல்லாது உள்ளடக்கத்திலும் புதுத்தன்மை கொண்டிருப்பவற்றையே புதுக்கவிதை என்று அழைக்க வேண்டும். நா.பிச்சைமூர்த்தி வல்லிக்கண்ணன். கு.ப.ராஜகோபாலன்...போன்றவர்கள் புதுக்கவிதையின் முன்னோடிகள் என்று சொல்லப்பட்டாலும் பின்னாளில் மு.மேத்தா இன்குலாப் அப்துல்ரகுமான் வைரமுத்து போன்றவர்களின் வருகையும் பங்களிப்புகளும் புதுக்கவிதை அலையின் தாக்கங்கள் தமிழ்ச் சமூகத்தில் ஆரோக்கியமான மாற்றங்களை உருவாக்கின என்பது எவராலும் மறுக்க முடியாததாகும். புதுக்கவிதைகள் 21ம்

நூற்றாண்டில் பெரும் வரவேற்பை உருவாக்கியதோடு கவிதை இலக்கியத்தின் சரித்திரப் பக்கங்களில் நிரந்தர இடமொன்றை தானே உருவாக்கிக் கொண்டதென்பதில் மிகைப்படுத்தலில்லை. இதனடிப்படையில் ஈழத்து இலக்கிய வரலாற்றில் புதுக்கவிதையின் பங்களிப்பு அளப்பரியன. அவற்றுள்: வ.செ.ஜெயபாலன். அமுதமொழியான் காசிஆனந்தன் புதுவை இரத்தினதுரை என்று தொடர்ந்து பலரைக் குறிப்பிடலாம்.

1980க்குப்பின் இலங்கையின் அரசியல் சூழ்நிலை காரணமாகவும் வெளிநாடுகளில் தொழில் நிமித்தமாகவும் புலம்பெயர்ந்தவர்களாலும் தமிழ்க்கவிதை இலக்கியம் உலகளவில் பல்கிப் பெருகியதென்பதற்கு 2000க்குப்பின் வெளிவந்த புலம்பெயர் இலக்கிவாதிகளின் சஞ்சிகைகளும் கவிதை நூல்களுமே சான்றுகள் என்றால் மிகையில்லை. அத்தோடு கடந்த கால்நூற்றாண்டுகளில் ஈழத்திலும் தமிழகத்திலும் ஏன் புலம்பெயர்ந்த தேசங்களிலும் வெளிவந்த கவிதை இலக்கிய நூல்களில் 85சதவீதமானவை புதுக்கவிதைகள் என்பது வெள்ளிடைமலை.

சிந்திக்கத் தூண்டும் சிறப்பம்சமே தமிழ்க்கவிதைப் படைப்பாளிகளை கவர்ந்தமைக்கும் காரணமாகும். இவ்வாறு உலகளாவிய வகையில் தமிழ்க்கவிதைகளின் ஆளுமை நிறைந்திருப்பது பாரதியின் கனவு படிப்படியாக நிறைவேறுவதற்கும் காரணமாயிருப்பதை எண்ணுகையில் பெருமிதமாகவிருக்கிறது. புலம்பெயர் தேசங்களில் வாழும் தமிழ் மக்கள் இன்று கணனியின் துணையோடு இணையதளங்களை அமைத்து தமிழிலக்கியப் பங்களிப்புச் செய்து வருகின்றனர். அவற்றுள் கவிதைக்கான இடஒதுக்கீடே விசாலமாயிருப்பதனைப் பலரும் அறிவோம். அந்தவகையில் பார்க்கையில் இதனைக் கவிதையிலக்கியத்திற்குக் கிடைத்த மாபெரும் வெற்றி என்றே சொல்லலாம். இன்று இணையதளங்கள் பல்கிப்பெருகிய வேளையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் உலகின் அதிக இணையதளங்கள் கொண்ட மொழிகளில் முதலாவது இடத்தில் ஆங்கிலமொழியும் இரண்டாவது இடத்தில் தமிழ்மொழியும் விளங்குவதை பலரும் அறியமாட்டார்கள். இவற்றில் ஈழத்தமிழர்களின் இணையதளங்களே

அதிகமென்பதையும் இங்கு மகிழ்வோடு குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். உலகின் இரண்டாவது இடத்திலிருந்து இலக்கியம் படைக்கின்ற இணையத்தளங்களில் கவிதையிலக்கியப் பணி என்பது மிகவும் உன்னத இடத்திலுள்ளது என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

புலம்பெயர்ந்துவாழும் தமிழர்கள் மத்தியில் இலக்கியம் படைக்கவேண்டும் என்ற ஆர்வம் அதிகம் இருந்தபோதிலும் இந்த இயந்திர வாழ்க்கையில் சிந்திப்பவற்றை- தம்மைப் பாதித்தவைகளை நேரம் ஒதுக்கி செதுக்குவதென்பது முயற்கொம்பாய் உள்ளது. இருந்தும் இலக்கியதாகம் கொண்டவர்களால் நாள்தோறும் பல்வேறுபட்ட இலக்கியவடிவங்கள் வெளிவந்து கொண்டு தானிருக்கிறன. அத்தோடு பல இலக்கிய சஞ்சிகைளும் தங்குதடையின்றி உலாவந்த வண்ணமே உள்ளன. அவற்றுள் கவிதை இலக்கிய நூல்களே மிக விரைவிலும் அதிகளவிலும் வெளிவருவது கண்கூடு. ஜேர்மன்-தமிழ் எழுத்தாளர் சங்கம் இவ்வாறு பல இலக்கிய நூல்களை உருவாக்கி வெளியீடு செய்துள்ளதுடன் பல்வேறுபட்ட இலக்கியவாதிகளையும் கௌரவித்து அவர்களின் இலக்கியப் படைப்புகளையும் வெளியீடு செய்து தமிழிலக்கியப் பங்களிப்புச் செய்து தமிழ் மொழிக்குப் பெருமை சேர்த்துவருவதனை நீங்களும் அறிவீர்கள்.

இந்தநூலும் அவ்வாறான ஒரு முயற்சிதான். எமது எழுத்தாளர் சங்கத்தின் இந்த ஆண்டுக்கான செயற்திட்டமாக இங்குவாழும் தமிழ் எழுத்தாளர்களின் சில கவிதைகளைத் தொகுத்து **"சங்கமம்"** என்ற பெயரில் வெளியிட்டு வைத்துப் பெருமிதமடைகிறது. புலம்பெயர்ந்த எம் கவிஞர்களை வளர்த்தெடுப்பதோடும் எம் இளம் சந்ததிக்கும் பயனளிக்கும் வகையில் தம்பணியினைத் தொடரும் என்ற திடமான உறுதியோடும் இனிவரும் காலங்களின் எம்சிறார்களையும் தம்மோடு இணைத்துச் செயற்படும் என்பது திண்ணம்.

**கவிச்சுடர் அம்பலவன் புவனேந்திரன்**
**பொருளாளர்**
தமிழ் எழுத்தாளர் சங்கம் - ஜேர்மனி

# கவிதைக் குவியலில் குவிந்தவர்கள்

| | | |
|---|---|---|
| 01. | வ.சிவராஜா | Duisburg |
| 02. | கே.கே.அருந்தவராஜா | Soest |
| 03. | பொ.சிறிஜீவகன் | Kamen |
| 04. | அம்பலவன் புவனேந்திரன் | Duisburg |
| 05. | திருமதி.இராஜேஸ்வரி சிவராஜா | Duisburg |
| 06. | திருமதி.சிவதர்சினி | Duisburg |
| 07. | இ.சிறிஸ்கந்தராஜா | Duisburg |
| 08. | திருமதி.கீத்தா பரமானந்தன் | Weeze |
| 09. | திருமதி.கலைவாணி ஏகானந்தராஜா | Weeze |
| 10. | திருமதி.பத்மாசினி மாணிக்கரட்ணம் | Schlangen |
| 11. | திருமதி.புனிதமலர் இராஜேஸ்வரன் | Elsdorf |
| 12. | அன்ரனி வரதராசன் | Dusseldorf |
| 13. | மலைமகள் | Kaarst |
| 14. | திருமதி.மீனா சிவலிங்கம் | Hennef |
| 15. | பொ.புத்திசிகாமணி | Sundren |
| 16. | ப.பசுபதிராஜா | Wuppertal |
| 17. | திருமதி.வசந்தா ஜெகதீசன் | Geilenkirchen |
| 18. | திருமதி.ஜெயா நடேசன் | Havixbeck |

இலங்கையில் நாவற்குழி கிழக்கிலுள்ள "வேலம்பராய்" என்னும் சிற்றூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

ஜேர்மனியில் டியுஸ்பேர்க் **(Duisburg)** நகரில் வாழ்ந்து வருபவர்.

தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவர்.

ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவையின் செயற்குழு உறுப்பினர்.



"மண்" சஞ்சிகை ஆசிரியர்

**வ.சிவராஜா**

# அன்றும் இன்றும்!....

காலைச் சூரியன் வரவு கண்டு
நிலம் வெளித்திடும்
சோலைக் குயிலின் குரலோடு
பொழுது விடிந்திடும்
சாலைகளில் விரைந்திடும்
வாகனச் சத்தங்கள்
மாலைவரை மகிழ்ந்தே
இன்புற்ற காலமது
-அன்றைய பொழுதுகள்!...
அன்று தாய் மண்ணில்
எத்தனை சுகங்கள்
ஒன்றுகூடி உறவுகளும்
நட்புக்களும் மகிழ்ந்திடவே
என்றுமில்லா வசதிகளுடன்
எல்லோரும் இன்புற்றோம்
இன்றும் இனிக்கிறதே
அன்றைய நினைவுகள்
-அன்றைய பொழுதுகள்!...
ஓடி விளையாடியே சிறார்கள்
பள்ளி தனில் சென்றிட
ஆடி அசைந்துவரும் இளசுகள்
அலங்கார நடைபயில
பாடிவரும் தென்றலும்
பாங்காக இசை மீட்டவே
கூடிப் பள்ளியில்
குதூகலித்த திருநாட்கள்
-அன்றைய பொழுதுகள்!...
காலம் உருண்டோடின
வாழ்வும் பலமாய்க் கனத்தது



பாலமாய் இருந்த உறவுகளும்
தனித்தனியவே பிரிகையில்
கோலங்களும் மாறியே
குடிபெயர்வும் நிகழ்ந்தது
மூலமாம் தாய் மண்ணின்
வேர்களும் அறுந்தனவே
-இன்றைய பொழுதுகள்!...
போர் ஒன்று வந்ததனால்
வாழ்வும் வளமிழந்தனவே
தேர் ஓடிய வீதிகளெல்லாம்
சிவந்து மாறிடவே
கூர்மை அடைந்த இனவாதம்
மனிதரை அழித்ததால்
பார் எல்லாம் தமிழர்
அகதிகளாய் முத்திரை குத்தினரே
-இன்றைய பொழுதுகள்!...
சோலையான வளங்களும் அழியுண்டு
பெரும்சாலைகளும் கிராமங்களும்
இடம்தெரியாமல் போனதுவே
ஆலைகளும் எரியுண்டு
மனிதர்களும் புதையுண்டனரே
காலை மாலை என உழைத்தவர்களும்
பட்டினியில் மடிந்தனரே
-இன்றைய பொழுதுகள்!...
வீடுகளும் அழிவுண்டு
முகாம்களில் அகதி வாழ்வு – மக்கள்
பாடுபட்டு உழைத்த சொத்துக்களும்
சாம்பலாய் போனதுவே
காடுகளும் கருகியே
இயற்கை வளங்களும் அழிந்தனவே
தேடுவாரற்ற சமூகமாய்

இன்று உரிமையிழந்து தவிக்கின்றனரே
-இன்றைய பொழுதுகள்!...
என்றைக்கு விடிவு என
ஏங்கிடும் மனித மனங்கள்
அன்றைய காலங்கள்
நினைக்கையில் பசுமைதான்
இன்றைய கோலங்கள்
எத்தனை வகைக் சோகங்கள்
தென்றலாய் இனிக்கின்றது
அன்றைய பசும் நினைவுகள்
-இன்றைய பொழுதுகள்!....

## சின்னத்திரையில் கண்ணீர் வெள்ளம்!......



வேர் அறுந்து வெறுமையாய்
உறவுகள் சென்றாலும்
நார் நாராய் கிழிபட்டு
நல்வாழ்வு நலிந்தாலும்
சீர் கெட்டு வாழ்வு
சிதையுண்டு சீரழிந்தாலும்
ஊர் எல்லாம் எக்கேடு கெட்டாலும்
எப்போதும்
-சின்னத்திரையில் கண்ணீர் வெள்ளம்!..
உலகம் எல்லாம் கால நிலை
மாசு பட்டாலும்
கலகம் வந்து உயிர்கள் பல
காவு கொண்டாலும்

பலமிழந்து பட்டினி வாழ்வு
பெருகினாலும்
வலம் வரும் உலகின்
நடப்பைக்கூட அறியாமல்
-சின்னத்திரையில் கண்ணீர் வெள்ளம்!...
வெள்ளம் வந்து நாட்டு மக்கள்
உயிர் துறந்தாலும்
கொள்ளையடித்தாலும்
கொடுமைகள் நிகழ்ந்தாலும்
கள்ளமில்லாப் பிஞ்சுகளின்
தாய்மொழி இழந்தாலும்
உள்ளம் பூரிக்கவே
-சின்னத்திரையில் கண்ணீர் வெள்ளம்!...
தாய் இறந்த சோகம்
மீள முடியாவிடினும்
சேய்களும் நோய் நொடியில்
அவலப்பட்டாலும்
தேய்ந்து அழியும் மனித வாழ்வு
சீர் குலைந்தாலும்
மாய்ந்து அழியும் மனித நேயத்தை
எண்ணாமலும்
-சின்னத்திரையில் கண்ணீர் வெள்ளம்!...
நல்ல அறிவியல் நிகழ்வுகள்
ஒளி ஊடகங்களில்
சொல்லிடுகையில் அதை ஏனென்றும்
பார்க்காமல்
அல்லல்படும் மனிதர்களின்
அவலங்களை நோக்காமல்
தொல்லைகள் பெருகி
வாழ்வு வளம் குன்றிப்போனாலும்

-சின்னத்திரையில் கண்ணீர் வெள்ளம்!...
ஒலி ஒளி ஊடகங்களில்
நற்கருத்தைக் கேட்டுப் பார்க்காமலும்
பொலிந்த அறிவியல் விடையங்களைத்
தேடிப் படிக்காமலும்
நலிந்த நம் மக்களின் துயர்தனை
அறிய விரும்பாமலும்
மலிந்த சின்னத்திரையை
தூங்காமல் பார்த்திடுவோர்
-சின்னத்திரையில் கண்ணீர் வெள்ளம்!...
கல்வியும் கலையும்
அழிந்து ஒழிந்து போனாலும்
பல் மொழிகளின் ஆற்றல்களை
ஏனென்றும் தேடாமல்
வல்லோராய் வாழ்வில்
வளர்ந்திடவே எண்ணாமல்
துல்லியமாய் தினமும்
கண்டுகளிக்கும் அரிய பொக்கிஷமாம்
-சின்னத்திரையில் கண்ணீர் வெள்ளம்!...
மொழி என்னகேடு கெட்டாலும்
எதுவுமே இல்லாத சிந்தனையில்
வழிவந்த பெருமையை
வான் உயர வாயாரக் கூச்சலிட்டு
விழி பிதுங்கி வாழ்வைத்
தொலைத்துநிற்கும் நம் தேசத்தவர்கள்
விழித்திடல் வேண்டும்
இல்லையேல் அழிவுதான் மிஞ்சும்
-சின்னத்திரையில் கண்ணீர் வெள்ளம்!...

# அன்பின் கங்கை அன்னை திரேசா!...

பத்து மாதம் சுமந்து பெற்ற அன்னையை தந்தையை விட்டு
சொத்து சுகங்களையும் உதறியே சொந்தங்களையும் விட்டு
சத்து உணவுகளையும் மறந்து சந்தோஷ வாழ்வையும் விட்டு
முத்து எனக் காத்து நின்றாய் முதுசமான மனித உயிர்களை
-அன்பின் கங்கை நீ!...
உன்னையே மறந்து நீ உலகெல்லாம் உதவிக்கரம் நீட்டினாய்
தன்னையே அர்ப்பணித்து தருமங்கள் பல செய்து நின்றாய்
விண்ணையே வியக்க வைக்கும் பணியையே வரிந்து நின்றாய்
அன்னையே உன்பணிக்கு உலகினில் யாரும் உண்டோ
காச நோயால் வதைபட்டவர்களையும் காத்து நின்றாய்
மோசம் செய்து ஏமாற்றப்பட்டோரையும் ஏற்று நின்றாய்
வேசம் போடாமல் வெளிச்ச மரம் போல் ஒளி ஏற்றி நின்றாய்
பாசம் பொழிந்தே பாமர மக்களையும் அணைத்து நின்றாய்
-அன்பின் கங்கை நீ!...
உரிமை இழந்தோரையும் ஊனமுற்றோரையும் அரவணைத்தாய்
சிறுமை என்று பார்த்தோரையும் பெருமையோடு ஏற்றாய்
வறுமையோடு வாடியோரை வாஞ்சையோடு அணைத்தாய்
பொறுமை என்னும் பண்பால் பொக்கிஷமாய் நின்றாய்
-அன்பின் கங்கை நீ!...
ஓலைக் குடிசை எல்லாம் சென்று ஓயாத சேவகம்
காலைக் கதிரவன் போல் உலகெல்லாம் பிரகாசித்தவளே
மாலைச் சந்திரன் போல் ஒளியூட்டிக் பார்த்தவளே
சேலை கட்டியே சேரிகளெல்லாம் மனிதரைக் காத்தவளே
-அன்பின் கங்கை நீ!...
கொடிய கொள்ளைநோய் எனக் கைவிடப்பட்டோரை – உன்
மடியில் வைத்தே உணவளித்து உயிரூட்டிய மாதாவே
கொடிய பல நோயாளிகளையும் கலங்காமல் கண்விழித்து
விடிய விடியத் தூங்காமல் பணிபுரிந்த ஒளிவிளக்கே

-அன்பின் கங்கை நீ!...
பிறந்தார் அன்னைதிரேசா பூமிப்பந்தின் மூலை ஒன்றில்
மறந்தார் சுயநலம் அனைத்தையும் பொதுநலனுக்காகவே
துறந்தார் பூ உலக சுகபோக வாழ்வு அனைத்தையும்
இறந்தார் உலகமெல்லாம் கண்ணீர் கடலில் மூழ்கிடவே
-அன்பின் கங்கைநீ!...
அன்னையே! நீ நோய்போக்கிப் பசிதீர்த்த வற்றாத கங்கை
அன்னையே! நீ ஆதரவற்றோரின் உலக மகா தேவி
அன்னையே! நீ உலகிற்கு ஒளி கொடுத்த சூரியப் புதல்வி
அன்னையே! நீ அகிலமெல்லாம் பரவிய அன்பின் கங்கையே



இலங்கையின் இளவாலையில் உள்ள காடிவளை என்னும் சிற்றூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

ஜேர்மனியில் சோஸ்ற் **(Soest)** நகரில் வாழ்ந்து வருபவர்.

தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயலாளர்.
ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவையின் உபதலைவர்.

சோஸ்ற் நாவலர் தமிழ்ப் பாடசாலையின் பொறுப்பாசிரியர்



**தமிழ்மணி.கே.கே.அருந்தவராஜா**

(மேழிக்குமரன்)

# அகதி வாழ்வு

அன்னையின் மடியிலே அனாதைகளாகியதால்,
அந்நிய மண்ணிலே அகதிகளானவர் நாங்கள்!
கன்னமிட்டு நாம், கள்ளவழி நடந்தவரல்ல
அன்னமிட்டு அறவழி கண்டவர்கள்!
வடக்கு கிழக்கை ஒடுக்கிவிட
அடக்குமுறையை தொடக்கி வைத்து
ஆளும் வர்க்கம் சொன்ன
பாழும் பிழை முறையை
வாழும் வழியென
தாளமிட மறுத்துரைத்தோம்.
கல்வியும் செல்வமும்,
கைப்பிச்சை என்றனர்!
சொல்லுறுதி கொண்டவர்கள்,
பல்லிளிக்க மறுத்து விட்டோம்.
விண்ணிலும் மண்ணிலுமாய்,
சன்னமழை பொழிந்ததால்
வண்ணமய வயல்களும்,
பண்ணைகளும் அழிந்தன
எண்ணக் கனவுகளை
எறிகணைகள் துளைத்திடவே
கன்னியரும், காளையரும்,
திண்ணைப் பெரியோரும்,
உண்ணலின்றி உறங்கலின்றி
உயிரிழந்து போயினர்.
நஞ்சையுடைய வஞ்சம்,
விஞ்சி நின்று விரட்டியது.
வெஞ்சினம் கொண்டவர்,



வெகுண்டு எழுந்தனர்.
மிஞ்சியதில் அஞ்சியவர்,
நெஞ்சம் பதைபதைத்தனர்.
எஞ்சிய வாழ்க்கையை
கஞ்சியைக் குடித்தேனும்,
பஞ்சமின்றி வாழவென
கொஞ்சி மகிழ்ந்த
மஞ்சநகர் நாட்டை விட்டு
தஞ்சமடைந்து
கெஞ்சி வாழ்கின்றோம்.
அகதி வாழ்வொன்றும்,
மேன்மையானதல்ல
அலங்கோலம் நிறைந்த
விலங்கொத்த வாழ்வு
எந்தப் பகுதியைப் பார்த்தாலும்,
சகதியான சஞ்சலம்தான்,
விகுதியாக மிஞ்சி நின்று
தகுதியென்று சிரிக்கிறது.
அன்னை மொழியும், அன்னிய மொழியும்,
பின்னிய இரட்டைக் கலாச்சாரமுமாய்,
தண்ணீரில் கலந்த பாலென
சின்னா பின்னமாகிச் சிதறிய
கண்ணீர் வாழ்க்கையிலே
கவலையாய் சிரிப்பவர் நாம்.
புகலிடத் தமிழரென்னும்
புதிய சமுதாயம்,
சகலதையும் இழந்து
சல்லாபமிட்டு
அகலக் கால் வைத்து

அடிமையாகிறது.
ஆயுத ஏற்றுமதிகளின்,
காகித ஒப்பந்தங்கள்,
கையெழுத்தாகும் வரை
அகதி இறக்குமதிகள்
தொகுதி தொகுதியாய் - இங்கு
தொடரும் தொடரும்.
கந்தையானாலும்
கசக்கிக் கட்டி
பந்தமும் பாசமுமாய்,
சொந்தம் கொண்டாடி
சிந்தை மகிழ்ந்திருந்த
நம் விந்தைமிகு நாட்டில்,
சொந்தங்கள் கதறியழ
பந்தங்கள் பரிதவிக்க
குந்தவந்த இடத்தை.. நாம்
சொந்தம் கொண்டாடுவதில்
குறியாக எப்பொழுதும் ............

ஓ புகலிடத் தமிழர்களே!
அகத்தீ வளர்த்திருக்கும்,
அகதிகள் நீங்கள்!!
அகத்திக் காயாக
இகத்திலிருக்காமல்,
சிந்தனையை சிதற விடுங்கள்!
மகத்தானவர்களாகுங்கள்!
மனிதர்களாகுங்கள்!! மனிதர்களாகுங்கள்!!

# கடவுளுடன் ஒப்பந்தம்

ஊருக்குள் எல்லோரும் போய்விட்டார்கள்
ஆருக்குத்தான் அந்த ஆசையில்லை.
அண்ணன் அனுப்பி வைத்த
வண்ணமிகு வீடும், வசதியான காரும்
எண்ணமெல்லாம் நிறைந்து, படங்களாய்
அவனை வாட்டி வதைத்தது
மனனம் செய்து வைத்த
கனமான வெளிநாட்டு ஆசையை
கணனித் தொலைபேசியில் தன்
கருத்தாக வெளிப்படுத்தி, அண்ணைக்கு
உருத்தோடு சொல்லி வைத்தான்.
ஆமியும், அவையளும் ஆலாய் பறக்கினம்
சாமி மேல சத்தியம் தம்பி
தவணையிலை காசு குடுத்தாவது
அவனையும் கூப்பிடட்டாம்
கொப்பர் சொன்னவர் என்று அம்மா
ஒப்பாரி செய்து வைத்தா
களவாகக் கடவுச் சீட்டுச் செய்ய
அளவான படம் கொடுத்தான்
ஏஜன்சிக்கு காசு கட்டினதோட
எடுப்பாக வளர்ந்திட்டானாம்
மாப்பிள்ளை வளர்த்தி போல இது
பிரயாண வளர்த்தியெண்டு அம்மா
பூரித்துப் போய் நிண்டா
கிழக்கு ஐரோப்பாவுக்குள்
வெறுங்கையுடன் வந்து
படாத பாடுபட்டு பட்டினி கிடந்து
இழக்க ஒன்றுமில்லை என்பதுபோல
அழாக்குறையாக அலுத்துப்போய் மனப்
புழுக்கத்தோடு இங்கு வந்து சேர்ந்தான்
விடியுமோ! வாழ்வு முடியுமோ என்று
அடிமனதிலிருந்து அசுரப்பயம் ஆட்டியது
மொட்டைத் தலையிலை உருத்திராட்சக்



கொட்டை அணிந்து பட்டை பூசிய
சுட்டிபுரத்து சுப்பிரியின் மகன் இன்று
சுத்துமாத்துக்கள் செய்வதிலே
அத்துப்படியாகி அலைக்கழிந்து வீதிகளில்---
பிடிபடாமல் வந்து சேர்ந்தால் தாலிக்
கொடியளவில் சங்கிலி போடுவதாயும்
கடிமனத்தோடு காவடி எடுப்பதாயும்
அண்ணி சொன்னபடி ஐரோப்பிய
புண்ணிய பூமியின் அருள்மிகு-----க்கு
இலஞ்சம் கொடுப்பதாய் இறைவனுடன்
கஞ்சத்தனமில்லாமல் ஒப்பந்தம் போல்
நேர்த்திக் கடன் ஒன்று வைத்து
ஏத்திக் கும்பிட்டு இறைஞ்சினான்
அலுப்பில்லாமல் வந்து சேர்ந்து
முழுக்கடனும் அடைத்து விட்டான்
தண்ணியடிப்பதும் தகாத செயல்களும்
எண்ணியபடியே தவறாமல் செய்துவிட்டு
வெள்ளிக் கிழமைகளில் விரதம் - எனக்கு
அள்ளிக் கொடுப்பது அந்த அருள்மிகு-
என்று சொல்லிச் சொல்லியே ஏதுவாக
என்றும் ஏமாத்து வேலைகளில்-
கல்யாணம் முடிந்து கைக்குழந்தை வந்தாச்சு
தலையிடி வந்து தவித்தாலும் அந்நினைவு
மலையிடியாய் வந்து மருள வைக்கும்
நேர்த்திக்கடனை நிறைவேற்றாதது
நேர்த்தியற்ற செயல் என்று மனம்
வேர்த்து விறுவிறுத்து வேதனைப்படும்
மண்ணில் அவர் படும் வேதனை போக்க
"மண்" சஞ்சிகை விடுத்த கோரிக்கையெல்லாம்
எண்ணத்தில் என்றும் ஏறியதில்லை
உவங்கள் எல்லாம் ஏமாத்துக்காரர் என்று
பவங்கள்போல பகிடியாய் சொல்வதில்
தவங்கள் செய்யும் தத்துவ ஞானியாவான்
உணவருந்தி உட்கார நேரமில்லை
கணவனும் மனைவியும் மாறிமாறி வேலை
பேச்சுவரவில்லைப் பிள்ளைக்கு என்ன

ஆச்சு என்று அடுத்தவீட்டு அன்ரி கேட்க
மூச்சு நின்றுவிடும் போலிருந்தது
அள்ளிக் கொண்டுபோய் டாக்டரிடம் காட்ட
பிள்ளைக் கொன்றுமில்லை என்று சொன்னார்
அறியாததே அவங்கள் உப்பிடித்தான்
ஆறுமாதமாச்சு அம்மா எண்டு கூப்பிடவில்லை
குறிசொல்லும் அம்மனிட்ட போனால்
குறைதீர்ந்து குழந்தை பேசும் என்று
இறைவாக்குச் சொன்னார். இந்திரன் அண்ணர்
நிறையச் செலவுசெய்து அங்கேயும் போயாச்சு
பறைய வரவில்லையெண்டு பதறியது மனம்
போர்தியிருந்த மனத்திரை விலக்கி
நேர்த்தி செய்வதாய் அருள்மிகு-வை
தோத்திரம் பாடி மனதுள் தொழுதான்
சீட்டுக்கட்டிச் சேர்த்த பணத்தை, வேறு
சாட்டுச் சொல்லிக் கழித்தெடுத்து
காவடி எடுப்பதற்குக் கச்சிதமாய்
சேவடியை நினைத்து செயல்களாற்றினான்
அஞ்சு பவுணிலை சங்கிலி போதுமெண்டு
கொஞ்சும் மொழியில் கொண்டவள் சொன்னாள்
அஞ்சுகம் பேச்சுக்கு ஆமா என்றான்
தன்வயதைக் கொடிப்பவுணில் மனைவிக்கு
பொன்னதனால் செய்த குற்ற உணர்வு வர
தாலிக்கொடியளவில் சங்கிலி செய்வதாய்
கேலிக்கோ சொன்னாய் என்று - மனசு
வேலிகுள்ளால் எட்டிப் பார்த்து சிரித்தது
அப்ப சொன்னது உண்மைதான்
இப்ப முடிஞ்சது இவ்வளவுதான் எனச்
சப்பை கொட்டி மனதைச் சரிசெய்தான்
அழைப்பிதழ் அடித்து அனைவருக்கும்
சளைப்பில்லாமல் கொடுத்தான்
மேளமும் நாதஸ்வரமும் பிடித்து
ஆழமான பக்தியென்று அறிவிப்புச் செய்தான்
தேருக்குப் பின்னாலே தெரிந்த முகங்களுடன்
ஊருக்கு முன்னாலே காவடி சுமந்து- பட்டு
வேட்டி கட்டி மேல்மேனி வெறுமையாகக்

காட்டியபடியே கடுங்குளிரில் நடுங்கிட
கைதடிப்பழனியின் கடைசி மகன்
கைத்தடியாலே மேளத்தில் சிந்து வாசிக்க
ஆலங்கட்டி மழைபெய்த பனிக்கட்டி மேலே
கால் அகட்டி வைத்து கடும்விறைப்பு மேலிட
தத்தக்கப் பித்தக்க என்று தவறி ஆடினான்
ஆச்சரியம் மேலிட அங்கு ஜேர்மனியர்-மயிர்க்
கூச்செறிந்து படங்கள் கிளிக் செய்ய
அரோகரா என்று அனைவரும் முழங்கிடப்
பரோபகாரமாகப் பக்திக் கடனை முடித்தான்
வெறுங்காலுடனே குளிரில் நடந்து
பெருமேனியெங்கும் குளிர்காற்றுப் படர்ந்து
சுவாதநோய் கண்டு சுள்ளென்று வலிக்க
உபாதையாலே உருண்டு புரண்டான்
விடுப்பறியவும், விபரம் தெரியவும்
விடுப்பெடுத்து வந்தவர்கள் விமர்சனம் செய்து
தாளம் தப்பாத தரமான ஆட்டம் தம்பி
வாழும் வரைக்கும் மறக்க முடியுமோ என்றனர்
அவனியில் இது அண்டப் புழுகு
அவனே அறிவான் அவஸ்த்தைப் பட்டதை
பாருங்கோ பிள்ளை அம்மா என்கிறானென
பாருக்குள் புதுமைபோல் பத்தினியுரைத்தாள்
காகமிருக்கப் பனம்பழம் விழுந்ததெண்டாலும்
தேகம் சிலிர்க்க தெண்டனிட்டான்
அந்த அருள்மிகு-வின் அற்புத
விந்தையே விந்தையென்றான்
நேர்த்தி முடித்த நிறைவுடனே மனதை
ஆத்திக் கொண்டு அமைதியானான்.
மூடப்பழக்கங்களும், முட்டாள் தனங்களும்
கூடப்பிறந்தவைபோல் குலவும் வரைக்கும்
முடியுமான காரியமல்ல, முழுமையான
விடியல் என்பது வெகுதூரத்தில--

இலங்கையின் அச்சுவேலியில் உள்ள பத்தமேனி என்னும் சிற்றூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

ஜேர்மனியில் காமன் **(Kamen)** நகரில் வாழ்ந்து வருபவர்.

தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் உபதலைவர்.

ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவையின் தலைவர்.

டோர்ட்முண்ட் வள்ளுவர் தமிழ்ப் பாடசாலையின் பொறுப்பாசிரியர்



**தமிழ்மணி.பொ.சிறிஜீவகன்**

# புரட்சிகர புதியதோர் உலகம் அமைப்போம்

உறவுக்கு உலகம் இல்லை
உண்மைக்கு நியதி இல்லை
உணவுக்கு உரிமை இல்லை
வாழ்வுக்கு வழியும் இல்லை
உலகத்தில் உயிர்கள் இல்லாதொழிக்க
உத்தமர்கள் போல் செயற்படுகின்றார்கள்
ஊர் தோறும் உலாவி வரும்
உண்மையற்ற கோரக் கொலையாளிகள்
இத்தனையும் இவ்வுலகில் நடக்கையிலே
அத்தனையும் பார்த்து வாழ
மொத்தத்தில் மனித இனம் ஐந்தறிவு கொண்டதுவோ?
இல்லை என்றுரைத்து இன்று
புரட்சிகர புதியதோர் உலகம் அமைக்க
புனிதமான எண்ணமதைக் கொண்டுவாருங்கள்!

விஞ்ஞான விந்தையிலே விளையாட்டுக்கள் பல
நாட்டைக் குழப்பி நாலாகப் பிரித்து
வட்டியில்லாக் கடனென ஆயுதத்தை விலைக்கு விற்று
இலாபமுடன் நாட்டைச்சுரண்டும் ஆயுதஉற்பத்தி
இரத்த ஆற்றில் மனித உடல் பல்லாயிரம்
நாள்தோறும் மிதக்கையிலே
உரத்த குரலில் சமாதானம், சீரமைப்பு என
பொய்யான வார்த்தைகளை மெய்யெனப் பேசி
புகழ் சேர்க்கும் புனிதமற்ற மனிதர்கள்
பரிசில்கள் பெறுகையிலே
மக்கள்வரி கூடுவதென்ன? வாழ்வின்றிப் போவதென்ன
மனித இனம் வாழ்ந்திடவா? இல்லை
மானிடமே உன் திறமையை நீ அறியாய்
நான் சொல்வேன் கேள்.

மரணப் பயமதை மனதில் கொள்ளாதே
நாள்தோறும் மரணத்தைத் தழுவிக்கொள்ளாதே
மரண ஒலி நாள்தோறும் நாலாதிசையும் கேட்கின்ற
மனித நேயமற்ற ஆட்சி அதிகாரத்தினை
மண்ணுக்குள் மண்ணாகப் புதைத்து
மானமுடன் மனித இனம் வாழ்ந்திடவே
மக்களிடம் மக்களாட்சி அதிகாரம் அமைந்திடவே
மகத்தான பூமிதனை புரட்சிக்கு இட்டு
அச்சமின்றி யாவரும் வாழ்ந்திடுவோம்
உலகில் உண்மைதனை உறுதியாக்கிடுவோம்
உரிமைகள் யாவும் யாவரும் நிகராகப் பெற்றிட
புரட்சிகர புதியதோர்உலகம் அமைப்போம்வாரீர்.

உழைத்து வாழ்பவர்க்கே உலகமது சொந்தமென்று
உறுதியாக யாவரும் கொண்டிங்கு
பிழைத்து வாழ்பவரை புறம் காட்டி
தடுத்துப் புரட்சிக்கு பாதைதனைக் காட்டி
உழுதுண்டு வாழ்பவரே உலக உத்தமர்கள்- மற்றோர்
தொழுதுண்டு வாழ்வோர் என இடித்துரைத்து
ஏய்த்துப் பிழைக்கும் தொழில்தனைக் கொண்டு
புகழ் தேடும் புல்லுருவிகளின்
பொய்யான வேசமதை வெளிக்காட்டி
உழைத்து வாழ வழி காட்டி
மகிமையான மானிட வாழ்விற்கு என
புரட்சிகரபுதியதோர் உலகம் அமைத்திடுவோம்.

பலர் வாழ்வின்றி வாட சிலர் வாழ
பாரினிலே முதலாளி, தொழிலாளி- என
பக்குவமாகச் சொல்லிக் கொள்ளும்
உலகமதை அழித்து
மக்கள் மயமாக்கும் மகத்தான கொள்கைதனை
மலர வைக்கும் மக்களாட்சி அமைத்திடவே
பசுமைப் புரட்சிதனைச் செய்திடுவோம்- நாம்
பாரினிலே மனிதநேயம் காத்திடுவோம்
பூமிதனில் யாவரும் ஒன்றென்று ஆக்கிடுவோம்
புரட்சிகரபுதியதோர்உலகம்அமைத்திடுவோம்!


கலப் படங்கள் பல கண்டு விட்டார்
எதிலும் கலக்க அஞ்சவில்லை அவர்கள்
உலகில் பாலில் தண்ணீர் மட்டும் கலக்கவில்லை
பாசத்தில் வேசத்தையும் கலந்து விட்டார்
கல்வியிலும் பாடப்புத்தகத்திலும் கலப்படம்
அது அரசியற் கலப்படம்
அரசியற் கட்சிகளில் ஆள்மாறாட்டக் கலப்புடனே
இனவெறி மதவெறி மொழிவெறி எனக்கலப்பு
அன்புக்கு அடிமையென அடித்துரைக்கும்
வார்த்தைதனில் கலப்படம் செய்து
பண்பில்லாது மக்களை அடித்துக் கொல்லும்
அரசியலாளனை மாய்த்திடுவோம்
பண்புடனே மனித இனம் பூமிதனில் வாழ
அன்புதனைப் பாசமுடன் பகிர்ந்து
நட்புடனும் நலமுடனும் வாழ்கவென
நாள்தோறும் நன்றே இயங்கிடும்
நல்லதொரு புரட்சிகர புதியதோர் உலகம்அமைப்போம்
புரட்சிகர புதியதோர் உலகம் அமைப்போம்.

நாட்டுக்குள் நாடு அந்நாட்டுக்குள் குழப்பம்
வேண்டுமோ மனித வாழ்விற்கு நாலு மதம்
ஏட்டிக்குப் போட்டியாக முளைத்த மதக் கலவரத்தில்
பச்சிளம் குழந்தைகளும் பலி மதத்தலைவர்களால்
மதத்திற்காக கொல்லல் சரியென்று யாரடா சொன்னான்
கூறடா மத வெறி மானிடா
மதமது மனிதனை நல்வழிப் படுத்தும் வழியன்றோ
இங்கிதனைப் புரிந்து கொண்டும்
நல்வழிதனைப் புகட்டு அதை நாடு.
புரட்சிகர புதியதோர் உலகமமைத்து!

பெண் வீட்டில் பொருள் கேட்டுத் தனயனவனை
விற்றுக் கொள்ளும் வேலைதனை
பெற்றவர்கள் தன்மானமின்றிச் செய்கையிலே
மணவாழ்வில் இணைகின்ற மணவாளன்
உற்ற துணையாக நின்று கொண்டு
தேன் நிலவுக்கும் செலவு தொகையென
சற்றுக் கேட்பதென்ன - அவன்
ஆண்மையற்றுப் போவதென்ன
சீதனக் கொடுமைதனில் சீர் கொண்டு வாழ
அன்புத் தம்பிகளே எண்ணிவிட்டீரா? உங்கள்
உடம்புகளில் உரமின்றிப் போனதென்ன?
உள்ளம் தான் செத்ததென்ன
தட்டுங்கள் நரம்புகளைத் தன்மானம் பெற்றிடவே
தரணியிலே அன்புப் பிணைப்புக்கு என்ன தடை
பண்புடனே இருவர் உள்ளம் இணைந்திடவே
புரட்சிகர புதியதோர் உலகம் அமைத்திடுவீர்
பெண் விடுதலையைச் செய்திடுவீர்
பாவை அவள் வாழ்வில் சிறப்புப் பெறவே
பாரினிலே சமவுரிமைக் கொள்கையுடன்
புரட்சிகர புதியதோர் உலகம் செய்திடுவீர்!

## தேடுகின்றேன்

தரணியிலே
பார்ப்பதற்கும்
கேட்பதற்கும்
மனிதநேயம் கொண்ட
மானிடத்தைத்
தேடுகின்றேன்




# வா! வா! மரணமே!

வா! வா! மரணமே!
என்னை நாடி வா!
போ! போ! மூச்சே
என்னை விலகிப் போ!
நாளும் நான் சுவாசித்த
சுதந்திரக் காற்றை
கொள்ளையிட்ட
மானிடத்திடமிருந்து
கொண்டு போ!
என்னைக் கொண்டு போ!
வா! வா! மரணமே!
என்னை நாடி வா!



# நயவஞ்சகப்பேய்

பொதுத் தொண்டனென
தன்னை
தப்பான வழியில்
இனம் காட்டி
புகழ் தேடும்
சுயநல விரும்பி
நாட்டைக்கெடுத்து
இனத்தை அழிக்கும்
நயவஞ்சகப் பேய்.



# சொல்லடி இயற்கையே

இயற்கையே! இயற்கையே! இயற்கையே!
ஏன் இந்தக் கொந்தழிப்புக் கொடுமையோ!
சேய்களைக் காவு கொள்வதற்குத் தாயே!
எப்படி உனக்கு மனம் வந்ததோ?

கடலலையே! கடலலையே! பொங்கியெழுந்ததேனோ!
கொலைவெறி கொண்டு எழுந்ததேனோ! - உன்
அலையின் ஒவ்வோர் அசைவும் ஓராயிரம்
மாயை கொண்டதுவோ!
உன் பயணத்தின் பாதைதனை
ஒருவழியாக்கிக் கொண்டாயோ!
மன்னுயிர்களை மாய்த்தழித்து - நீ
களியாட்டக் கொலைவெறி புரிந்தாயோ!
உனக்குமா நியாய அநியாயம் புரியாமல்
மன்னுயிர்களை மண்ணுடன் மண்ணாக்கினாய்!
பால்குடித்த சேய்கள் - தம்
தாய்மடியில் விளையாடி
பால்கொடுத்த தாய்முகத்தின்
மெய்மறந்த இன்பமதைக் கண்டு
செல்லமாய்த் துள்ளியெழுந்து முத்தமிட்டு
காலையிளம் பரிதியின்
கண்கொள்ளாக் காட்சிதனைக் காணவென
கண்விழித்த நேரமதில்

தாய்சேய் தந்தையைப் பிரித்து
சாவுக்கெனத் தூக்கியெடுத்து
சல்லடையாக்கிய உன் கொடுமைதனை
மனித இனம் பொறுக்குமா! மறக்குமா!
ஓர் நொடிப் பொழுதில் கோடி துன்பம்
கொட்டிய துன்பகியே!
யார் உன்னைத் தாய் என்று
தன்வாயால் சொல்ல முடியும்
சோலைகள்பல கொண்டு பசுமைக்கும்
பாரின் தண்மைக்கும் செழித்திருந்த
நிலமகளின் மரம்செடி கொடிகளையும்
பச்சைப் பொழில்களையும்
மட்டம் தட்டி வெட்ட வெளியாக்கி
பிழிந்தெடுத்த கொடியவளே!
திட்டம் தீட்டி மன்னுயிர்தனை
மாய்த்தொழித்த மாயம்தான் என்ன?
உன்னை நம்பி வாழ்ந்திட்ட
உன்பிள்ளைகளின்
உயிர்களை உரித்தெடுத்த
நன்றியில்லா நயவஞ்சகம்
உலகம் உள்ளளவும் உண்டெடன்பதை
அறிந்திருந்தும் ஏனிந்த
ஊழித்தாண்டவம் ஆடினாயோ?
சொல்லடி இயற்கையே! சொல்லடி இயற்கையே!

# தொழிலாளர் தினம்



உலகை உயர்த்தும்
உத்தம
தொழிலாளர்களுக்கென
வருடமொன்றுக்கு
வருகின்றது
தொழிலாளர் தினம்.


உழைப்பவர்
நலனுக்கென
எந்தக் கோரிக்கையுமின்றி
ஊதாரிகளின்
நலன்பல காணும்
விழாவாக
வருகின்றது
தொழிலாளர் தினம்.



பகட்டு மேனியுடன்
வாட்டும் பல
வடிவங்களைத் தாங்கி
இன்றும் நீ
அடிமைத் தொழிலாளி
என்று சொல்லி
வருகின்றது
தொழிலாளர் தினம்.

# வெண்முடிகள்

என்முடிகள்
வெண்மையாகின்றன
ஏனென்று கேட்டேன்?
உன் வீரத்தை
உலக மக்கள்
விடுதலைக்கன்றி
வீணாகக்கழித்துக்
கோழையாக
இருக்கின்றாயே, என
எண்ணினேன்
கவலைகொண்டேன்
வெண்மையானேன்
என்று பதில் தந்தன.
வெட்கித்
தலை குனிந்தேன்
நான்.



இலங்கையின் மட்டக்களப்பில் உள்ள சத்துருக்கொண்டான் என்னும் சிற்றூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

ஜேர்மனியில் டியுஸ்பேர்க் **(Duisburg)** நகரில் வாழ்ந்து வருபவர்.

தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் பொருளாளர்.

ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவையின் செயற்குழு உறுப்பினர்


ஒபகவுசன் அறிவாலயம் தமிழ்ப் பாடசாலையின் ஆசிரியர்



**கவிச்சுடர். அம்பலவன் புவனேந்திரன்**

# கடல் சொன்ன கதை..

கடலம்மா என்றழைத்தது
தப்பாய்போனது
காதகியே பாதகியே
கண்கெட்டவளே என்றாலும்
எங்களின் கண்ணீர் வெள்ளம்
நிற்கவாபோகிறது..?
எனக்கு கவிதை கற்றுத்தந்த கடலே.!
காற்றோடு கதைபேச வைத்தவளே ...
நீ மண் வீடு கட்டி விளையாட
எங்கள் மனைகளா கிடைத்ததுனக்கு...?
கிளிஞ்சல்களுக்குப் பதிலாக
கிளிந்த மனித உடல்களைப்
பொறுக்கிக் கொண்டிருப்பதை
பார்த்துக் கொண்டிருக்கிறாயே
போதுமா உயிர்ப்பலி
தீர்ந்ததா உன் பசி..?.



போதும்...! போதும் நிறுத்து !!

ஓங்காரமாய் ஒருகுரல்
திசையெங்கும் திரும்பிப் பார்த்தேன்
எவருமில்லை என்னைத்தவிர..
மீண்டும் அதே அதிகாரக்குரல்
அண்டம் அதிர்ந்ததுபோல்..

கதைப்பது கடல்தான்..மானிடா....!!

எனக்கு வியப்பாய் இருந்தது..
பயம் பற்றிக்கொண்டது..
கடல் பேசத்தொடங்கியது-

எல்லா சராசரி மனிதனைப்போல
உனது பங்கிற்கு நீயும்
திட்டிவிட்டாய் பரவாயில்லை....
பாக்கியிருந்தால் நான் பேசிமுடித்தபின்
திருப்தியாய் திட்டித் தீர்த்துக்கொள்...!
நீ கவிஞன்தான் என்றால்
என்கதைக்கு சற்று காதுகொடுப்பாயா..?
கனிவாகக்கேட்டது கடல்....

மௌனமானேன்

கடல் சொல்லத்தொடங்கியது....
தாயே என்றழைத்த வாயால்
தரங்கெட்டுத் திட்டிவிட்டாய்
நீ கூட சபித்தாய் சாபமிட்டாய்
எந்தத் தாயாவது சதிசெய்வாளாளன்று
சிந்திக்கமறந்தாய் மானிடா...!
எந்தவுலகத்தில் .... தாயவள்
பிரதிபலனை எதிர்பார்த்து
இதுவரை நடந்து கொண்டாள்
சொல்லு கவிஞனே ஏன் மௌனம்..?

கைமாறு கேட்டுத்தான் கடலே வந்தாயா
என்று கவிதை வடித்தவன்தானே நீ..?!
பெற்றவள் பிரதி பலனை எதிர்பாத்தா
பிள்ளைகளை வளர்க்கின்றாள்..?
அடிப்பதும் அணைப்பதும் அன்னைதான்
சேய்களின் நன்மைக்கும்
செம்மையான எதிர்காலத்துக்குமாகவே
உதரத்தில் சுமந்தாள்
உதிரம் தந்தாள்... உழைக்கின்றாள்

இது கூடத்தெரியாதா உனக்கு...?
அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் விசமே
அதுதான் இங்கும் நிகழ்ந்தது
அறிவாயா...கவிஞனே..?

மனிதர்கள் பூமியில் செய்யும்
பெறுப்பற்ற செயல்களை பூமாதேவியால்
பொறுத்துக் கொள்ள முடியவில்லை
பூமியின் வேண்டுதலிலே
புகுந்து வந்தேன் பேரலையாய்...

அப்படியென்ன பூமி பொறுக்காததை
புரிந்தர்கள் மானிடர்கள்....?
மௌனத்தை விலக்கி நான் கேட்டேன்....

பூமில் மனிதர்கள் வாழ்வாங்கு வாழாமல்
மதிகெட்டு மற்றவரைக்கெடுத்து மதம்பிடித்து
மனிதத்தையும் விற்று வாழ்கிறார்கள்
என்ன இழிசெயல் புரிந்தான்
என்பதைவிட
எதை அவன் புரியவில்லை என்று சிந்தி...!

சுற்றாடலை மாசு படுத்துகிறான்
சுவாசக்காற்றில் நஞ்சு கலக்கிறான்
வற்றாது கடல் என்பதால்
வாரி வந்து கதிரியக்க கழிவுகளைக்
கொட்டி குவித்துவிட்டுக் குதூகலிக்கிறான்

சுத்தமான காற்றில்லை
சுகமான உயிர்களில்லை

மொத்தமாய் எல்லாவுயிர்களும்
மெதுவாய் மரிப்பதை நீஅறிவாயா ...?
காட்டை அழிக்கிறான்
நாட்டை அழிக்கிறான்
கதறக்கதற கத்திகொண்டு
உயிர்களைக் கொய்கின்றான்
கண்ட கண்ட கண்டுபிடிப்பென்று
கண்கெட்டுக் கருமமாற்றுகிறான்
இன்னும் கொஞ்சம் காலம்போக
புல்பூண்டு முளைக்காதபடி
பூமியை மாற்றிவிடுவான்
இதனை அறியாமல்
முட்டாளைப்போல் உளறாதே...!

எங்கள் கதறலுக்கும் கண்ணீருக்கும்
நீ பகர்கின்ற பதில்
எங்ஙனம் ஏற்புடையதாகும்..?

மானிடா நீ அழுதகண்ணீரை
இந்நிலமெல்லாம் அறிந்தது
மீன் அழுத கண்ணீரை
நீயறிய வாய்ப்பில்லை
நான் மட்டுமே அறிந்தேன்
தெரியுமா உனக்கு..?
இலட்சோப இலட்சம் மீன்கள்
துணையிழந்து தவித்ததும்
தாயைப்பிரிந்த சேய்கள் துடித்ததும்
சேயைப் பறிகொடுத்த தாய்
செயலிழந்து கிடந்ததும்
உனைப் போல்தான்..

உற்றார் உறவுகளைப்பிரிந்து
ஆண்டாண்டு காலமாய்
அழுத கண்ணீரின் வெளிப்பாடாகவும்
வெகுண்டெழுந்த சுனாமியின் வீரியத்தை
வைத்துக் கொள்ளலாம் கவிஞனே...!
கரையொதுங்கிய மானிடவுடல்களைக்
கவனித்தபோது
உனக்கெதுவும் தோணவில்லையா..?

இறந்த மீன்கள் போலத்தான்
மரித்துப்போன மனிதவுடல்கள்
நிலமெல்லாம் பரவியபடி
காட்சியளித்ததே கண்டாயா..?
இதுவும் மீன்களை நினைவுபடுத்த
நான்செய்த பணிதான்

நீமட்டும்தான்- உலகில்
உறவுகளைப் பிரிந்து உருகுகின்றாயோ.?
மற்றவுயிர்களின் மறுபக்கத்தையும்
மனவுறுதியோடு திரும்பிபர்பார்...!
அப்போதுதான் உயிர்களின் உன்னதத்தை
உன்னால் உணரமுடியும்
சிந்தித்துப்பார் கவிஞனே...!
காலம் கடந்தும்
உன் கவிதை வாழும் திறனுடையது
இந்தக் கடல்சொன்ன கதையை
கவியாய் வடித்துவிடு..!
உன் எழுத்துக்களாலேனும்
இந்தக்கடலில் படிந்த கறையும்
கூறுகின்ற குற்றச்சாட்டுக்களும்
கழுவுப்படட்டும்..!.

சிறுபிள்ளைகளையும் பிஞ்சுப்பாலகரையும்
பிடுங்கிக்கொண்டு சென்றதற்கு
என்னபதில் சொல்லப்போகின்றாய்..?

மானிடா...!
மறுபிறப்பு முற்பிறப்பு
கர்மவினை ஊழ்வினை என்பதை
நம்புகிறவன்தானே நீ
இன்றைய சிறுவர்கள் இளம் பாலகர்கள்
முற்பிறப்பில் செய்திட்ட
வினைப்பயனின் விளைவுகளை
உன்னால் அறிய ஒண்ணுமா...?
ஆயுளையும் காலத்தையும்
பூவுலகில் கடத்திவிட்டவரின்
கணக்குகளைத் தீர்க்கும் தருணம்
என்றும் வைத்துக் கொள்ளலாம்
புலம்பாமல் புரிந்து கொள்...!
அவர்களில் சிலர் இந்த பூமியில்
இன்னும் இன்னல்களை அனுபவிக்காமல்
மறுபிறப்பில் சுபீட்சமாக
மகிழ்வோடு வாழவேண்டியவர்கள்
அதனைக்கூட நீ அறியமாட்டாய்...
அதனால்தான்
கணக்குகளையும் கூட்டிக் கழித்தேன்.
அவர்களையும் கூட்டிச்சென்றேன்.

உன்னுடைய சுற்றிவளைப்பில்
சின்னா பின்னமானோம்
எங்களின் துன்பத்திலும் வேதனையிலும்
உனக்கென்ன இலாபம்..?

இது காலத்தின் கட்டாயம்
பூமியைப் புதுப்பிக்கவேண்டிய தேவை
இலாப நட்டத்தை இயற்கை பார்ப்பதில்லை...
இயற்கையைப் பயன்படுத்துவதையும்
பாதுகாப்பதையும் விடுத்து
இயற்கையை பகைத்துக் கொள்வதாலும்
பரிசோதனை செய்வதாலும்
வந்த வினைதானிது
புரிந்ததா கவிஞனே..?

பொல்லாத யுத்தமென்றும் போர் என்றும்
பொறுப்பற்ற மனிதர்களால்
பூவலகின் புனிதம் அழிகையில்
பழயன கழிதலும் புதியன புகுதலும்
அவசர அவசியமல்லவா..?
இதனால்தான் பூமிக்குள் புகுந்து வந்தேன்
பூமியில் புரட்சிதனை வரவேற்கும் மனிதா
இதுவும் ஒருவகையில் புரட்சிதான்
புரிந்து கொண்டால் சரிதான்.

பரந்த இந்த பூவுலகில்
புனிதமற்ற மனிதர்களையும்
பிழைகளை இழைத்தவர்களையும்,
தண்டிப்பதென்று உரைத்துக்கொண்டு
என் தேசத்தில் மட்டும் ஏன்
அதிகளவில் உன் கைவரிசையை
காட்டிவிட்டு இறுமாப்படைகிறாய்
இது ஓரவஞ்சனையில்லையா...?

இது அடையாள வருகைதான்
அறிந்து கொள்ளு..!
அடையாள உண்ணாவிரதம்

அடையாள அணிவகுப்பு மாதிரி
எனது அடயாள வருகைதான் இது..
பூமியில் மனிதர்களின்
நடவடிக்கைககளைப் பொறுத்து
நான் மீண்டும் வருவேன்...!
அதர்மமும் அநியாயங்களும்
தலைவிரித்தாடும் போது
என்வருகையை எதிர்பார்க்கலாம்...

ஒரு நாளில் சூரியன் சுருங்கிவிட்டால்
குளிரில் சுருண்டு விடுவாயே மனிதா
காற்று மரித்துவிட்டால் உனது
கட்டை எழுந்து வந்தா
இப்படிக் கேள்வி கேட்கும்
சிந்திக்க மறந்தாயா...?
காற்றின் தேசமெங்கும்
கவிதை பரப்புகின்ற கவிஞனே
சுனாமி சுனாமியென்று
சுடுவார்த்தைகளால் சாபமிட்டவர்கள்
தெளிவாக் கேட்கும்படி கவிதை படி..!
பூவுலகு புரியும்படியாக கவிதைபாடு
இரக்கமற்றவள் என்றவர்க்காகவேனும்
என்கதையை உரக்கச்சொல்லிவிடு...!!!

மறுவார்த்தையேதும் பகராமல்
மௌனத்தை சுமந்தபடி நடந்தேன்...!
என் பாதங்களை
கடலலை தழுவிச்சென்றது
என் ஆத்திரமும் ஆவேசமும்
மெல்லத் தணிந்ததுபோல்உள்ளுணர்வு...

மீண்டும் கடலைநோக்குகிறேன்
எழுந்த அலைகள் கையசைக்கின்றன
விழுந்த அலைகள்
நுரையாய் நகைக்கின்றன..

## கவிதை பேசுகிறது...

சிந்திக்கிறாய்..சிறப்பாய் எழுதுகிறாய்
உன் சிந்தனையின் வெளிப்பாடுகளை
உலகறியச்செய்வதெப்போது..?
அச்சம் தவிர் என்று
கற்றால் மட்டும் போதாது
நடைமுறையில் காட்டு...!
என்ன தயக்கம் உனக்கு
உன் திறமையில்
உனக்கே நம்பிக்கை இல்லையா..?
நான்உன்னை
நம்புகிறேன்
நீ கவிஞன் என்பதை
இந்த உலகம் ஒத்துக்கொள்ளும்..!
இன்னுமேன் நாணம்
வெட்கத்தை விலக்கி
வெளியே வந்துவிடு..!
வெளியுலகம் எவ்வளவு
விசாலமானது என்பதை
நீ கண்டுகொள்வாய்..!
உலகத்தின் தேவையும்
உன்னுடைய சேவையும்
என்னவென்று உணர்வாய்..!

புனை பெயரில் புனைவதில்
தவறொன்றும் இல்லை
புனைந்ததை புவியறியச்செய்..!
படைப்புகளை பெட்டகத்துள் பூட்டி
பாதுகாத்து வைப்பதில்
பலனொன்றும் வரப்போவதில்லை...!
முத்தாக முகிழ்கின்ற
உன் ஆக்கங்கள் அத்தனையும்
உன்னை முழுமையாக்கும்..!
சமூகத்துக்கு பயனான- உன்
படைப்புக்களைப் படையலாக்கு
சத்தான கவிகொண்டு
சமூகத்தின் நோவுக்கு
ஒத்தடம் கொடு..!
உண்மையை உரைப்பதில்
உனக்கேன் மயக்கம்
உள்ளதை உள்ளபடி எழுது..!
உண்மைப் பெயரில் எழுதுவதில்
உனக்கென்ன கூச்சம்
உரிமைக்கு குரல்கொடு..!
ஏடுகளில் எழுதினால்போதாது
ஏறுபோல் நடந்து
மேடைகளில் ஏறு...
இடியாய் முழங்கு..!
இந்த சமூகத்தின்
இன்னல்களை இடித்துரை..!
சாதிமதஇன அழுக்குகள்
உன் எழுத்துக்களால்
சலவை செய்யப்படவேண்டும்
சீதனம் என்னும்
கொடிய நோய்க்கு

நீ மருத்துவனாக மாறு
தரணியே உன்னை
தலைநமிர்த்திப் பார்க்கும்
உன் விசாலத்தை அறிந்தபின்னே
விலாசத்தை விசாரிக்கும்..!
தயக்கத்தை தள்ளிவைத்து
தன்னம்பிக்கையோடு எழுது
உன் காதலி நானென்று
வார்த்தைகளில் வடித்தால் போதுமா
செயலிலும் காட்டு
அனைவருக்கும் என்னை நீ
அறிமுகம் செய்துவை..!
அப்போதுதான் கவிஞனே
உனக்கும் எனக்கும்
இடையிலுள்ள உறவுதெரியவரும்
ஏனென்றால் ...
உனக்குப்பின் உன் பெயர்
என்னால்தான் பேசப்படப்போகிறது..!



இலங்கையின் யாழ்மாவட்டத்தில் உள்ள உரும்பிராய் என்னும் சிற்றூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

ஜேர்மனியில் டியுஸ்பேர்க் **(Duisburg)** நகரில் வாழ்ந்து வருபவர்.



## திருமதி.இராஜேஸ்வரி சிவராஜா

## முகத்திரைகள் !..

அன்னை தந்தையரை மதிக்க மறுப்போரையும்
அன்புக்குப் பங்கம் விளைவிப்பவர்களையும்
அழகு தமிழுக்குக் கேடு செய்யும் அறிவிலிகளையும்
அகத்தில் ஒன்று வைத்து புறத்தில் வேறு செய்வோரின்
-முகத்திரைகளை அகற்றுவோம்!...

மதங்கள் வாழ்வுக்கு நல்லவை சொல்லிடவே
மதியாத சிலர் மற்றவைகளையும் குழப்பிடுவர்
மண்ணின் மகிமைதனில் உயர்ந்து நிற்கையில்
மனிதப் பண்பை மறந்து வாழ்வோரின்
-முகத்திரைகளை அகற்றுவோம்!...

பொன்னான தாய்மொழியைக் கேவலப்படுத்துவோரையும்
பொறாமையும் போட்டியும் கொள்வோரையும்
பொல்லாத சொல்லிப் புழுகுகள் சொல்வோரையும்
பொலிந்த நம் ஒற்றுமையைப் பொசுக்குவோரின்
-முகத்திரைகளை அகற்றுவோம்!....

மகத்தான மானிட வாழ்வுதனை மதியாது
அகத்தினில் ஆசைகளை அளவுக்கு மீறி வளர்த்து
இகத்தினில் இனியவர்க்கு இன்னல் இழைப்பவர்
முகத்திரைகளை அகற்றி முழுநிலவு காண்போம்
-முகத்திரைகளை அகற்றுவோம்!....

## அன்பு அம்மா!.......

அம்மா எனும் தாயவள் எம் தெய்வம்
அன்புக் கடலானவள் இன்ப ஊற்றானவள்
அகிலம் போற்றிட அறிவொளி தந்திடும்
அன்பின் முதல் தெய்வம் அம்மா!....
- அன்பு அம்மா!...



தூளியிலே ஆடித் தூங்குகையிலே
தூங்கும் அழகினை ரசித்திடுவாள்
தூசிதான் கண்ணில் வீழ்ந்தாலுமே
தூக்கி அணைத்து துடைத்திடுவாள்!....

-அன்பு அம்மா!...


மண்ணில் தவழ்ந்து நிமிர்கையிலே
விண்ணென உயர்ந்திட முனைந்திடுவாள்
எண்ணமெல்லாம் நனி சிறக்கையிலே
கண் குளிரவே பார்த்து மகிழ்ந்திடுவாள்

-அன்பு அம்மா!...

பாசந்தனை பதியமிட்டு பயிராக்கியே
நேசமென்னும் நீரூற்றி வளர்த்திடுவாள்
வாசமலராய் வண்ண நிலவாய்
தேசமெங்கும் வீசும் ஒளியாவாள்

-அன்பு அம்மா!...

## மாற்றம்!...



புனித பூமியில் இயற்கையில் பல மாற்றம்
மனித வாழ்விலும் உண்டு பல மாற்றம்
நம்பிக்கையும் உறுதியும் இழந்திடில்
நமக்குள் என்றும் பல மாற்றம்!....

கருணைகொண்டு அழைக்கையில் தாயில் ப
கல்விதனில் புகட்டுகையில் தந்தையில் மாற்றம்
கலைகள் பயின்று வளர்கையில் உடலில் மாற்றம்
கட்டுப்பாடும் கண்ணியமும் நிறைகையில் தனி மாற்றம்!...

மாற்றம் உண்டானால் வாழ்வில் மாறுதல் பல
சீற்றம் வருமானால் சீர்குலையும் மனித வாழ்வு
தேற்றம் பெற்றுத் தேறுதல் பெறத் தேவை மாற்றம்
தோற்றமும் வளர்ச்சியும் காலத்தின் மாற்றம்!...

தாயகத்தில் மாற்றம் தரணி எங்கும் மாற்றம்
வாழ்வியல் மாற்றம் வரவு செலவுகளில் மாற்றம்
இயற்கையிலும் மாற்றம் செயற்கையிலும் மாற்றம்
இயல்பு வாழ்வே மாற்றம் இன்ப துன்பங்களிலும் மாற்றம்!...

## பகுத்தறிவுப்பயன்!....

ஞாயிற்றுக் கதிரோனின் இளங்கதிர் ஒளியாக
ஞாலத்தில் செய்திடும் நன்னெறி நமைக்காக்க
காலத்திற்கேற்ப கடமைதனை செய்திட்டாலே
சாலச்சிறந்த முன்னேற்றம் காண்போம் நாமே!...



பாசமும் நேசமும் பற்றும் சிறந்தோங்கிடவே
பண்பாலும் அன்பாலும் அரவணைப்போம்
நற்றமிழ் வாழ்வினிலே நற்பேறு பெற்றிடவே
கற்றறிந்த சான்றோர் சொல் கேட்போமே!...

அறிவுதனைப் பெருக்கி ஆற்றலை வளர்த்திடவே
குறுகிய வட்டத்தினுள் குந்தி விடாமலே
சிறகடித்துப் பறக்கவே சிந்தனை வளர்த்திடவே
சிறப்புடனே நன்நூல் கற்று உயர்வோம் நாமே!...

தூற்றுவாருக்கும் துன்பத்திற்கும் துணையாகாமலே
ஊற்றெடுக்கும் கேணியாய் உணர்வினைப் பெற்றே
காற்றின் இளந்தென்றலாய் பகுத்தறிவு பயன் புரிந்தே
ஆற்றிடும் செயல்தனில் வாழ்வினில் பலமாகும்!...

## சிந்தனைத் துளிகள்!...

அணி அணியாய் அலங்காரச் சிந்னைகள்
மணி மணியாய் மகுட வாசகங்கள்
துணிவாய் துடித்துக் துள்ளிக் குதித்திட
நனி தரும் நற்சிந்தனைத் துளிகள்!...

விந்தனைகள் செய்து சாதனைகள் புரிந்திட
சிந்தைதனைத் தூண்டி சித்தம் கொண்டிட
நிந்தனையின்றி நிலையான வளம் காண
சிந்தனைத் துளிகள் சீராக்க வழி கோலும்!...



அறிவினைப் பெருக்கி செறிவினைக் கூட்டி
குறியினை கோட்பாட்டினை நெறியாக்கும்
தெளிவான சிந்தனையில் அழியாத ஆக்கம்
ஒளியாக ஒருமையாக்கும் சிந்தனைத் துளிகள்!...

நற்றமிழின் சொற்சுவையும் பொருட் சுவையும்
பற்சுவையாய் பலம் தந்து பசுமையாக்கிட
நற்பண்பு நன்னடத்தை நலம் காண
பொற்பதமாய் பொன்மொழியாய் சிந்தனைத் துளிகள்!...

## பெண்ணின் பெருமை!...

மானிடராய் இப்பூமியில் அவதரித்தல் அரிது அதுவும்
மாண்புடை பெண்ணாய் பிறந்திட மாதவம் கிடைத்திடும்
மாந்தருள் மாணிக்கமாய் போற்றிடும் தாயவள் என்றும்
மகா உலக சத்தியவானும் என்றும் பெண்ணே!...

தாயாகவும் சேயாகவும் தாரமாகவும் தாதியாகவும்
தரணி எங்கும் பல வடிவங்கள் எடுத்திடுவாள்
தார்மீகம் வளர்த்தே சந்ததியைப் பெருக்கிடுவாள்
<u>தயவு கேட்டோருக்கும் தரம் பாராது உதவுபவள் பெண்ணே!...</u>

வறுமை வந்தாலும் பொறுமையுடன் காப்பவள்
வந்தோரை வரவேற்று விருந்து ஓம்புபவள்
வழிகாட்டி சமூகத்தில் முன்னிலை வகிப்பவள்
வழிபடும் தெய்வமாக உலகில் உதிப்பவள் பெண்ணே!...

இடர்கள் பல வந்தாலும் துணிந்து நிற்பவள்
இன்னல்ப் பட்டோருக்கு இல்லையென்னாது உதவுபவள்
இழியோரை விரட்டி இனிய வழி காட்டுபவள்
இவ்வுலகில் இவளே இணையற்றவளும் பெண்ணே!...

வானுயரப் பறக்கின்றாள் வாகனங்களும் ஓட்டுகின்றாள்
வாழ்தலுக்காய் ஆயுதம் ஏந்தியே போராடுகிறாள்
வஞ்சிப்போரையும் கல்வி கொண்டு வளம்படுத்துபவள்
வலம்வரும் பெண்ணே என்றும் இவ்வுலகின் கண்ணே!....



இலங்கையின் யாழ்மாவட்டத்தில் உள்ள உரும்பிராய் என்னும் சிற்றூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

ஜேர்மனியில் டியுஸ்பேர்க் **(Duisburg)** நகரில் வாழ்ந்து வருபவர்.



# திருமதி.சிவதர்சினி பிராங்ளின்

## அன்னை!..



விழிகாணும் தெய்வமாக
வழிகாட்டும் சுடராக
ஒளி தந்த பௌர்ணமி!...

பாசம் தனைப் பொழிந்து
வேசம் என்றும் இல்லாமல்
வாசம் வீசும் மல்லிகை!...

தன் உதிரத்தில் பாதியை
என் உணவுக்குத் தந்த
அன்னைக்கு உலகில் நிகரேது!...

சோதனை பல வந்தாலும்
வேதனையை விலக்கியே அவள்
சாதனை புரிய வைப்பவள் நம் அன்னை!...

## நட்பு!...



அன்பு செலுத்தி வாழவும்
ஆதரவு காட்டிப் பழகவும்
இனிமையானது நட்பு ஒன்றே!...

அன்னை முதல் தோழி
ஆசானும் அடுத்த ஏணி
இசைவான தோழியும் நல்ல நட்பே!...

அகிலம் இயங்குகிறது நட்பாலே
ஆண்டவன் படைப்பும் நட்பாலே
இசைகளையும் வளர்த்திடும் நல்ல நட்பே!..

அன்பான நட்பு சிறந்த வழிகாட்டி
ஆழமான நட்பு ஒன்றே உலகில்
இனிமை சேர்த்திடும் நல்ல நட்பு!...


இலங்கையின் யாழ்மாவட்டத்தில் உள்ள பருத்தித்துறை என்னும் ஊரைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

ஜேர்மனியில் டியுஸ்பேர்க் **(Duisburg)** நகரில் வாழ்ந்து வருபவர்.



## இ.சிறிஸ்கந்தராஜா

# கடற்பூதம் (சுனாமி 2004)



புவியில் , வெளியில் , வளியில் ,
தீயில் ,ஆழியில் இதில்
எது பிளவுபட்டாலும்
பிணமாவது மானிடம்தானே-
அதனாலன்றோ
மானிடர் இவைகளை
ஐம்பூதங்கள் என்றனரோவன்று
என்று தோன்றுகிறது இன்று

இயற்கை எவ்வளவு அழகானது
இயற்கை எவ்வளவு ரம்மியமானது
இயற்கை எத்தனை பசுமையானது


இயற்கை எத்தனை இனிமையானது
இயற்கை கண்டு எமையெல்லாம் இன்று
நடுநடுங்க வைத்துவிட்டாயே கடலம்மா

பொறுமைக்கு கடல் என்பார்கள்
ஆழமான அறிவுக்கு கடல் என்பார்கள்
கற்காதது கடலளவு என்பர்
எம்மக்கள் நம்பிக்கை அத்தனையும்
உடைத்து நின்றாயே நீயின்று

அடியடியாய் உன்னையே
நம்பி வாழ்ந்த மக்கள்
உன்மடியே தஞ்சமென
உன் காலடியே சொர்க்கமென
உன் நீலச்சேலை

கரையை பிடித்துக்கொண்டே
கரையில் தூங்கி
வாழ்ந்த மாந்தரை
கரைத்துவிட்டாயே
கண்விழிக்குமுன்.

உன்னைத் தாயாக எண்ணி
எத்தனை எத்தனை பிஞ்சுகள்
உன்மடியில் உன்னை
எத்தியெத்தி விளையாடி நின்றனர்
அந்த அழகையெல்லாம்
அலங்கோலமாக்கிவிட்டாயே
எட்டி உதைத்திருந்தால்
தள்ளி நின்றிருப்போமே
பட்டியாய் அள்ளிக்கொண்டு
போய் அரக்கியாகிவிட்டாயே



நாளொரு பொழுதாய்
உனையே நம்பி
வாழ்ந்த தொழிலாளரை
மென்று தின்றாய்
எம்வீர மணிகளை
தினம்தினம் தின்றுநின்றாய்
கடல் தாண்டி உயிர்தப்ப
உன்னுள் புகுந்தவரை
அழித்து நின்றாய்
இன்று எம் தாய்நிலத்தையே
விழுங்கி நின்றாயே

காலம் காலமாய்
மண்மீட்புப் போரின்

அனர்த்தங்களால்
நாம்பட்ட துன்பமெலாம்
போதுமென்றெண்ணினாயோ-அன்றி

எம்மண் மோகம்
உன்னையும் வாட்டியதோ
அலைமகளே நீ
பூமித்தாயின் மடியில்
புரள நினைத்த வேகம்
எம்மண்ணே ஆனது நாசம்
இனியும் வேண்டாம்
உனக்கிந்த விபரீத நேசம்
அழகிய காட்சியொன்றை
கீறுங்கள் என்றால்
உன் அழகைத்தானே
எம்மழலைகள் வரைந்தார்கள்
அவர்களையெல்லாம்
மூச்சுத்திணற முக்கிக்கொண்டாயே
பாரம்மா இப்போ
உன் அலங்கோலத்தை



கடலப்பா, கடலய்யா என்றுனை
நாம் அழைத்ததில்லையே
கடலம்மா என்றுதானே
பாசத்துடன் அழைத்தோம்
நீயேன், தாடகை
போலாகிவிட்டாய் எம்மினத்துக்கு
தலைகுனிவு உன்னால் பெண்ணினத்துக்கு

மண் எல்லைகளுக்கு மேலாக
கடல் எல்லைகளையும்
மதித்து ஆண்டு நின்றோமே


எல்லைகள் தாண்டி நீ
தொல்லைகள் தந்துவிட்டாயே
ஈழத்தின் முழுப்பங்கும் உன்னையே
அணைத்து நின்றது
உனக்குத்தெரியாதா
உலகத்திலேயே உன்னை
அதிகமாக நேசித்தவர்
தமிழர்கள்தானே
உன்னை சுற்றி
கவசமாய் இருந்தோமே
ஏன் எம்மேல் பாய்ந்தாய்
எம்மை பரிதவிக்கவிட்டாயம்மா

ஆண்டாண்டாய் சிங்கள பேரினம்
வரலாற்றில், தமிழர் சொத்துக்களை
சூறையாடியது
தமிழர் நிலங்களை
ஆக்கிரமித்து நின்றது
தமிழர் உயிர்களை
கொத்தாய் கொன்று குவித்தது .
நீயோ அத்தனையும்
ஒருசில நிமிடங்களில் செய்து
சாதனைகள் புரிந்து
பெருஞ் சாத்தானாகிவிட்டாயடி



நீயிருக்கின்றாய் என்று
வாழ்ந்து இருந்தோம்
உன்னுள் முழுகித்தானே
பாவம் கழுவினோம்
மானிட அஸ்தியை உன்னுள் கரைத்துத்தானே
ஆத்ம சாந்தியை பெற்றோம்

ஆறுதலும் பெற்றோம்
அஸ்திவாரத்தையே இன்று
அடியோடு கரைத்துவிட்டாயே
இனி நீ
போர்க்கப்பல்கள் வலம் வருவதற்கும்
அணுகுண்டுகள்
பரிசோதனை செய்வதற்கும்
விமானங்களை
மனிதருடன் விழுங்குவதற்கும்
தான் லாயக்கு
வழியனுப்பி வைக்கிறோம்
இனி வராமல். . . .
ஆழிவெள்ளம் வற்றிவிட்டது
தமிழர் தொகையும் வற்றிவிட்டது
கண்ணீரும் வற்றிவிட்டது
தமிழர் மனங்களில் நினைவுகளும்
வற்றிக்கொண்டே போகின்றது
நினைவலைகளோடு என்றும் நான்........



இலங்கையின் யாழ்மாவட்டத்தில் உள்ள திருநெல்வேலி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

ஜேர்மனியில் வீசே **(Weeze)** நகரில் வாழ்ந்து வருபவர்.


கோக் **(Goch)** தமிழாலய ஆசிரியர்




## திருமதி.கீத்தா பரமானந்தன் (கீதா)

# வரையாத கோலங்கள்

அன்னை மடியில்
அவதரித்த நாளினிலே
ஆடிஅடங்கும் வரை
அசைக்க முடியாதபடி
ஆண்டவன் தலையில்
ஆழமாய் போட்டானே
அழியாத கோலமொன்று
வரையாத கோலமாய்
வாலைப் பருவத்தின்
வண்ணக் கனவுடன்
சோலைக் குயிலாய்
சுதந்திரச் சிட்டாய்
கானம் பாடிக்
கழித்து மகிழ்ந்திட
வாலைக் குமரியென
கடிவாளம் போட்டதால்
வண்ணக் கோலமெலாம்
வரையாத கோலமாய் அடிமனதில்
ஆழப் புதைந்ததே
முத்து முத்தாய்
புள்ளி வைத்து
முற்ற மெங்கும்
ஒளிர்ந்து
அள்ளித் தரும் மகிழ்வை
அழகான மாக்கோலம்
துள்ளி வந்த புள்ளி மான்






"சீ" தனமின்றிவாழ்வில்
முதிர் கன்னியாய்
மூலைக்குள் முடங்குவாளே
அவள் வாழ்வும்
வரையாத கோலந்தானே
பூவைக் காப்பதா
பிஞ்சைக் காப்பதா
தினந் தினம்
வதைபடும் வாழ்வில்
வடக்கிலும் கிழக்கிலும்
வதைபடும் நம்மினம்
நித்தமும் காண்பது
பரிதாபக் கோலமே
இன்பம் என்பது
என்றென்றும் அவருக்கு
வரையாத கோலந்தானே!

## முதலெழுத்தாய் முத்திரை பதித்தவர்




முதலெழுத்தாய் காகித
இதழ்களுக்குள் மட்டுமல்ல
கனமான நல்வாழ்வுக்கும்
முத்திரை பதித்ததந்தை
பிஞ்சுப் பாதங்கள்
மண்ணை முட்டுமுன் -உன்
நெஞ்சைத் தொட்டு

மிஞ்சும் சுகம்தருமுன் -உன்
பிள்ளையென்ற பெயர்
பதிவுப் பத்திரமாய் -உன்
முத்திரை சுகம் தந்ததன்றோ
ஒவ்வொரு மானிடப்பிறவிக்கும்
விலாசத்தைத் விலாசமாய்த் தந்து
முழுப்பெயராய் வந்தது - உன்
முதலெழுத்துத் தானே
அந்த மணித்துளி தொட்டு
இந்த மணித்துளி வரை –உன்
முத்திரை பதித்தபடி
சப்தஸ்வரங்கள் நாம்
செப்பிடும் முதலெழுத்துக்களில்
கொத்துக்களாய் குவிந்திடும்
முத்துக்கள் அத்தனையும்
உன்சொத்துக்கள் தானே
தாயோ பெற்றுவளர்த்தாள்- நீயோ
பெயரோடு வாழவைத்தாய்
வாழ்வுக்கு நல்வட்டம்போட்டு
தாழ்வுகள் இன்றிநம்மை
எப்படியும் அல்ல - நீங்கள்
இப்படி வாழவேண்டுமென
முறைப்படி வாழ்வுதந்தே - நல்
முத்திரை பதித்துவிட்டீர்
எம்மை அதட்டி வளர்த்து - உமக்குள்
உடைந்துகொள்ளும்
இளகிய உள்ளம்கண்டு
இன்றும் உமக்குள்




நின்றுகொண்டோம்
உங்கள் ஒவ்வோர் அடியும்
ஒவ்வொரு வியர்வை துளியும்
எங்களைத் தூக்கிவைத்த
ஏணிப் படிகள்
உன் பெயர் முத்திரையாலே
எம்பெயர் முத்திரை பதிக்கும்
குணமான ராச
வித்துவத் தந்தையே
பெயர்சொல்லி வாழ்த்துவோம்
என் நெஞ்சம் கனக்கும்
நேரம் எல்லாம் - உன்
நெஞ்சுரம் சொல்லும் வேதம்
நிமிர்ந்து நின்று பேசச் சொல்லும்
அன்பான ஆளுமையான
இனிமையான இளமையான
என் ஐயாவின் பெயர் பொறித்து
அவர் பெயர் வாழ
என்றும் வாழ்ந்திடுவோம்



# பங்குனிஎட்டு மங்கையர் தினமாம்

கூட்டுப் புழுக்களாய்
சுருண்டு வளைந்து
சொரணைகளைத் தொலைத்து
ஊமை உணர்வுடனே
மௌனம் சம்மதமெனும்
தாரக மந்திரத்தால் -தினம்
மௌனித்துத் தேய்பவளே!
ஆண்கள் மட்டுமா உன் எதிரி
உன்னினமே உனக்கு முதல் எதிரி
மனித நேயமும் மனக் கட்டுப்பாடும்
மகனுக்கல்ல மகளுக்கேயென
மனதிருத்தும் அன்னையிடமிருந்தே
ஆரம்பமாகிறது அடக்குமுறை
சொல்லம்புகள் துளையிட்டு
ஆசைகள் நிராசைகளாகும்
ஈட்டிமுனைகள் இரக்கமின்றி
இதயத்தில் வேல்பாச்சி
இளமைக் கனவுகளைப் பொசுக்கிவிடும்
ஆளுமைகள் நிறைந்திருந்தும்
ஆராதிக்க ஆருமிலர்
பங்குனிஎட்டில் மட்டும்
தந்திடுவார் உனக்கோர் நாள்
மூச்சு முட்ட சுதந்திரக்காற்றை
முழுவதுமாய் சுவாசித்திடு - இல்லையேல்
அடுத்த பங்குனி எட்டுக்காய்
பார்த்திருப்பாய்




# அறுபடும் வேர்களும் அந்நியமாகும் உறவுகளும்



இருட்டோடு போய்
இருட்டிலே வருவார்
இளைத்து களைத்து
இயந்திரமாய் அப்பா
ஓடிஓடிச் சமைத்து
சமைத்ததை மகவுக்கு
ஊட்டிவிட முடியாமல்
ஓடிடுவார் அம்மா
உணர்ச்சியை பகிர்ந்து
உள்ளன்போடு பேச
உறவுகள் தேடி
கணனியை நாடி – பின்
தொலை தூரம் சென்று
விலகிடுவார் மக்கள்
வீட்டிலே பேரன் பேத்தி
விரும்பி உறவாட
விடுவதில்லை பேச்சு மொழி
தனிமையில் இருந்து
தவித்திடும் உறவாய்
ஏங்கிடும் நிலையில்
எங்களின் வாழ்வு
அறுபடும் வேராய்
அந்நிய உறவுகளாய்
விரும்பி வந்தோமா?
விரும்பி ஏற்றோமா?
ஒட்டாத வாழ்வில்
ஒட்டிட முயன்று



வேர்களும் அழுகின்றன
விழுதுகளும் புளுங்குகின்றன
விலகிடும் உறவை
விலக்கிடும் அன்பை
தேடித் தினமும்
தேம்பித் துடித்து –
அறுபடும் வேர்களாய்
அந்நியமாகும் உறவுகளாய்
முகாரி பாடுது
மூத்த தமிழ்க்குடி
விரும்பி வந்தோமா
விரும்பி ஏற்றோமா?



இலங்கையின் யாழ்மாவட்டத்தில் உள்ள நல்லூர் என்னும் ஊரைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

ஜேர்மனியில் வீசே **(Weeze)** நகரில் வாழ்ந்து வருபவர்.

சங்கீத ஆசிரியை

## திருமதி.கலைவாணி ஏகானந்தராஜா



# இதுவரை ... எதுவரை...

இதுவரை பட்டது போதும் போதும்
தலைமுறை அழிந்தது போதும் போதும்
ஊனமுற்ற உறவுகள் போதும் போதும்
உறவுகள் இழந்த அனாதைகள் போதும்

போதுமே பட்டினியும் வேதனையும்
போதுமே குருதியின் உலைக்களமும்
போதுமே கருகிய சாவுடல்கள்
போதுமே பதுங்குகுழி வாழ்க்கையும்

வாழ்க்கையே துன்பத்தின் எல்லையில்
ஏழ்மையே தாயகத்தின் மடியில்
நீதியைக் கேட்கிறார் புலம்பெயர்ந்தோர்
ஆதியை தொலைத்த அரசாங்கத்திடம்

அரசாங்கமே அதிர்ந்திடும் சத்தியவேள்வி
கரம்கோக்க உதவுமா யாரறிவார்
கோஷங்கள் தருமா ஒற்றுமையை
வேஷங்கள் போடுவது எதுவரை?

எதுவரை வாழ்வு தாங்குமோ
எதுவரை ஏக்கங்கள் நீளுமோ
அதுவரை உயிர்தான் தங்குமோ
அதுவரை சும்மா இருப்பதோ



# காற்றுவெளி


காற்றுவெளியே உன் தனித்துவம் கண்டுகொண்டேன்
வேற்று சுவாசமதை வீட்டிலிருந்தே வெளியேற்றினேன்
ஏற்று உள்ளமதில் எண்ணமெல்லாம் ஏற்றிவைத்தேன்
இன்றுவரை மூச்சாகி இரைக்கும்வரை சுவாசிக்கிறேன்

இதயக்கூட்டில் நிறைந்தே இல்லமெங்கும் பரவிநின்றாய்
உதயசூரியனாய் உள் நுழைந்து உறக்கம் நீ கலைத்தாய்
நிதமும் பிணைந்ததினால் என் நிலையும் வாழ்வியலிலும்
கதவைத் திறந்துவந்து கலந்ததே உள்மூச்சாக

பாட்டில்இராகமாய் பாவியென்னை மயக்கிவிட்டாய்
ஊட்டிய உணர்வுகளால் உள்ளத்தில் முத்தமிட்டாய்
கூட்டிய ஸ்வரமெட்டெடுத்து குயிலாகக் கூவவிட்டாய்
காட்டிய பரிவில் உறவினைக் காதலிக்க கற்றுத்தந்தாய்

எட்டுநூறு பாடல்கள் ஏந்திநிற்க கனக்குதன்றோ
விட்டு நகரமுடியவில்லை விற்பனைக்கும் இடமில்லை
கட்டுகின்ற கோட்டையில் ஒரு கல்லாக நானிருந்து
தொட்டுவிட உச்சிதனை தோற்றுவிப்பேன்

அடுத்த தலைமுறையை
பறக்க நினைப்பவர்கள் படுகுழியில் தள்ளினாலும்
துறந்து துர்நாற்றமதை தூக்கி எறிந்திட்டே
மறந்து மானிடனாய் மகத்துவமாய் வாழ்ந்திடவே
இறக்கும்வரை சுவாசிக்க இரங்கி அனுமதிப்பாயோ.....



# முதன் முதலாய்

மண் பார்த்து நின்று மன ஏக்கங்கள் கூறியதும்
பெண் பார்க்கும் படலத்தில் பெருவெற்றி தந்ததுவும்
கண்ணேடு கண்கலந்து கதைகள் பல பேசியதும்
வண்ணக் கனவுகளோடு வாழ்வில் இணைந்ததுவும்
முதன் முதலாய்

தாய்தந்தை உறவிருந்து தான் புகுந்த வீடிணைந்து
பாய் படுக்கை முதல் பண்பாடு பழக்கவழக்க மாற்றங்களும்
மாய்ந்து மாய்ந்து மருமகளை மார்பில் தாங்கியதும் கண்டு
வாய் அடைத்து வியந்திட வையகத்தின் மறுபுறம்
முதன் முதலாய்

தான் பெற்ற மகவுகளை தாலாட்டிப் பாலூட்டி
காண்கின்ற வளர்ச்சியிலே களிப்புக் கொண்டதுவும்
விண்வெளி கடந்து வந்து வானொலியும் கரம்தரவே
பண்ணோடு இசைசேர்த்து பேழைகள் வெளியிட்டதுவும்
முதன் முதலாய்

குழந்தைகள் பருவம் மாறி குமரனும் குமரிகளுமாய்
வளர்ந்த பாதையிலே வாழ்வியலில் உயர்வு காண
இழந்த சுகம் மறந்து இல்லத்தில் இன்பம் பெருகிட
வளம் சேர்த்த அனைவரையும் வணங்கியது உள்ளம்
முதன் முதலாய்



# தாய்மண் தவிக்கிறது

தாய்மண் தவிக்கிறது தன்னுணர்வும் வெடிக்கிறது
தோய்ந்த குருதியிலே குற்றுயிரும் பிரிகிறது-அங்கு
பாய் இல்லை படுத்துறங்க பதுங்கு குழியிலும் பயனில்லை
நோய்க்கு மருந்தில்லை நீர்கூடக் கிடைக்கவில்லை

காயும் பிஞ்சுமாய் காய்ந்து உடல் கருகுகின்றதே
வாயும் வயிறுமாய் கற்பிணிகள் உயிர் போகின்றதே
சேயும் தாயுமாய் சொல்லொனா துன்பச்சாவினிலே
ஆயிரம் ஆயிரமாய் அழிந்து போகின்றனரே

கொடிய குண்டினாலே கால்கை இழக்கின்றனர்
மூடிய குழிகளிலே மூச்சினைத் துறக்கின்றனர்
வெடித்துச் சிதறும் வெறும்பிஞ்சுகளைக் கண்டு
வடிகிறது கண்ணீர் வலிக்கிறது நெஞ்சம்

ஓடியே அணைத்திட ஒருவழியும் தெரியவில்லை
கூடிக் கூச்சலிட்டும் கேள்விக்குப் பதிலில்லை
வேடிக்கை பார்த்திருக்க வெறுமே நாம் ஜடமுமில்லை
நாடியான தாய்மண்ணே நமது உதிரமன்றோ

கடலுக்கு கடலுயிர்களின் மேல் கோபமுண்டோ
உடலுக்கு உறுப்புகளில் தான் வெறுப்புண்டோ
கடமைக்கு காலமது காத்திடுமோ-எம்
உடமைகள் தான் எம்முடன் கூடவருமோ

# தந்ததோ மாற்றம்

தலையீடு இல்லா தனிவழிப் பாதைதேடி
அலையிலே அடிபட்ட வெள்ளமாய் புலத்தில்
நிலைத்தே கலைகளும் நீண்டகாலம் வாழவே
உழைத்தேன் உண்மை உள்ளங்கள் மகிழவே

உலகத்து நாடெங்கும் உலாவிய நம் கலைகள்
வலம்வந்தது வானலையிலும் தொலைக்காட்சியிலும்
நிலத்திலே நம்மவரின் நிலமைக்குக் கைகொடுக்க
புலத்திலே பொம்மைகளை ஆட்டுவித்தோரும் பலர்

தொலைத்த வாழ்வியலை தேடித் தொடர்ந்திடவே
சளைத்திடாது கலைதனிலே சார்ந்தவரை உயர்த்திவிட
விளைகின்ற பயிர்களுக்கு விளைநிலமாய் இருந்தே
களைப்பின்றி கலைதனை கற்பித்து வந்தபணி

தந்ததோ மாற்றமென்றால் தன்னிறைவு தந்ததன்றோ
அந்தவகையில் ஆறியே ஆற்றினேன் கடமைதனை
எந்த வகையினிலும் எனக்குக் கிடைத்த பொக்கிஷமே
சுந்தரத் தமிழ் வளர்த்திட சொந்தமான இசைக்கலையே



## வாழ்கின்றபோதே வாழ்த்துவோம்

மனங்கள் திளைக்கையிலே மகிழ்ச்சி பொங்குகிறது
இனங்கள் ஒன்றுபடுகையும் இனம் காட்டி நிற்கிறது
கனம் இல்லா மனித இதயம் கண்டு மனம் பூரிக்கிறது
உணர்வொன்று எழுகிறது உள்ளங்கள் வாழ்த்துகிறது

எண்ணங்கள் மலர்கிறது எங்கள் புலப்பெயர்வதிலே
வண்ணமாய் வகைவகையாய் வரும்காலச் சந்ததியினர்
உண்மையின் உணர்வுடன் ஊக்கமாய் உழைப்பதனை
கண்ணுற்று கவியூடே கரங்கள் பற்றி வாழ்த்திடுவோம்

தாயினைப்போல் எம்மினத்தைத் தாங்கிய நாடுகள்
ஆயகலை அனைத்தையும் அறிவையும் புகட்டிட
நேயமுடன் செய்பணியால் நேர்பாதை உயர்வதிலே
சேயவரின் வெற்றிச் செய்திகளே தொடர்ந்திடுமே

நல்கிய சேவைதனை நவின்றிட வார்த்தையில்லை
வெல்லும் தமிழினத்தை வேரூன்ற விட்டவரை
அல்லும் பகலும் உழைத்து அகல்விளக்காய்
பல்லாண்டு ஒளிவீச பலமாக வாழ்த்துவோம்.

## புலம் பெயர் வாழ்வியல்

பலமிகு தமிழ்மறவர் நலமீந்த தமிழ் ஈழம் விட்டு
கோலமிதுமாறி நாளெல்லாம் போராடும் வாழ்வியலில்
காலங்கள் கடந்திங்கே கடமைக்காய் கூடுவதும்
புலத்திலே பணத்திற்காய் புணர்தலும் வாழ்வியலே

காற்றாட கண்டசுகம் கனவுகளாய்க் கலைந்தோட
பூட்டிய கட்டிடத்துள் முடங்கிப் பொய்யாகப் புன்னகைத்து
வாட்டிடும் வேதனைகள் சோதனைகள்
வாழ்வுப் போராட்டங்களுடன்
தேட்டமாய் தேடிய நோய்நொடியாலே நொந்து வாடி

தாய்மொழி விடுத்து தடுமாறித்தினம் வேற்றுமொழிகற்று
வாய்ப்புகள் தேடி வெள்ளையர் ஆட்டிவைக்க தினம் ஆடிஓடி
மாய்ந்து தேய்ந்து மாறும் காலநிலையோடும் போராடி
நாயினும் கேடாய் நம்மினம் படுந்துன்பங்கள் பல்கோடி

தலைமுறையை வாழவைக்க தன்சுகத்தைத் தான்மறந்து
வலைசேர்ந்த மீன்களைப்போல் வாடித் துடித்துத்தினம்
அலைந்து பொருள்தேடி ஆறுதல் உடல்நலம் மறந்து
விலையில்லா உறவுகள் வாழ விழைகின்றார் விடியல்தேடி

அறுசுவை உணவாக்கி அன்புடனே விருந்தோம்பிட
சிறு கணப்பொழுதில் சீர்குலைக்கும் சிற்றின்ப மதுவுமே
பேறுகள் பின்தொடர பேரின்ப மாயை வாழ்வை
ஆறுதல் தரும் மதுவும் அவசரமாய் உயிரெடுக்கும்

மங்காத தமிழுணர்வு மண்ணும் வாழுதிங்கே
பங்கமின்றித் தமிழர்கள் வரலாறு பதித்திடவே
அங்கமது உழைப்பாலே அயராத ஊடகங்கள்
பொங்கிடும் உணர்வுடன் பெருமையும் சேர்க்குதிங்கே

நலமான பண்பாடு நலிந்துதான் போனாலும்
பலமான கலை இங்கு பணத்திலே வளருதன்றோ
மலர்ந்திடும் காதலும் மணவாழ்வில் பிரிதலுமாய்
புலத்திலே புலம்பிட புதினங்கள் நிறைய உண்டு

இத்தரை மட்டுமின்றி இன்னல்கள் அவலங்கள்
இத்தரையில் எத்தனையோ ஈடில்லா உயிரிழப்புகள்
எத்தனை அவலங்கள் எம்மவர் மத்தியிலே
அத்தனையும் தந்தவிதி புலம்பெயர் வாழ்வியலில்

இலங்கையின் யாழ் மாவட்டதிலுள்ள
அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்

ஜேர்மனியில் சிலான்கன் (**Schlangen**) நகரில்
வாழ்ந்து வருபவர்

தமிழ்மணி

## திருமதி.பத்மாசினி மாணிக்கரட்ணம்



# மதிப்பீடு

மண்ணில் பிறந்த மானிடர் பலருக்கு
மனதினுள் இருக்கும் இரண்டு பக்கங்கள்
புரிந்ததை வாழ்தல் புத்தியின் திறமை
புறந்தள்ளி வைத்தல் வாழ்வில் மடமை
உடைநடை கண்டு எடை போடாமல்
உளமதை அறிந்தால் உண்மை தெரியும்
அடுத்தவர் தமது பண்பின் முகமதை
அன்பின் துணைவழி அறிந்திட முயன்று
அங்கொரு பங்கம் விளங்குதல் புரிந்தால்
தீங்கினை விலக்கிட தெளிவாய்ப் பழகிடு
யானையைப் பார்த்த குருடரைப் போலே
விதவிதக் கருத்துக்கள் வீணே வேண்டாம்
மனமதை அளந்தே ஒருவரை மதிப்பிடு
மகிழ்வொடு வாழ்ந்திட அதுநல் மதிப்பீடு...

# இல்லாத மகளிர் தினம்.

மாட்சிமிகு மனித இனத்தின்
வேராயிருக்கும் பெண்மை,
பேச்சிலடங்கா பெருமை மிக்கது.
மூச்சுக்கும் இனிமை சேர்க்கும் இயல்பு
ஆனாலுமென்ன
மகளிர் மாறாத கண்ணீரோடும்
ஆறாத காயங்களோடும்
வாழ்வில் போராடும் நிலை இன்றும்.
ஏடும், எழுத்தும், நாடும்
நாளும் போற்றும் பெண்,
நடைமுறையில் நடைப்பிணமாய்



நசுக்கப்படுவதுமேன்..?
கற்பென்பது
ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவென
பொங்கி முழங்கிட புறப்பட்டதால்த்தான்
ஆறாத காயங்கள்
மகளிருக்காய் ஆனதுவோ..?
கருவிலே பெண்ணெனத் தெரிந்தால்
கலைக்கப்படும் நிலைதொடர,
கல்யாணம் வேண்டுமென்றால்
பெண்ணை விலைபேசும் நிலைவேறு.
வரதட்சணைத் தொகையங்கு
வந்து சேரவில்லை என்றால்
தீக்குளிக்கும் சீதைகள்தான்
தினம் எத்தனை எத்தனை..?
'ஒருவனுக்கு ஒருத்தி' எனும் முறை மாற்றி
ஒரு'தீ 'உடலெரிக்கும்
பாவமுறு மாறாக் கொடுமைகளாய்
மகளிருக்குத் தொடர்கிறதே...
மாறாத கண்ணீரும் ஆறாத காயங்களும்
மகளிருக்கு வேண்டாம்.
சிறகொடிந்த பறவைகளாகப்
பெண்கள் மரபுப் பாதையில்
மனங்குறுகி துயர் சுமந்து
நடந்தது போதும்...
துணிவான பெண்கள்
தொல்காப்பியத்தில் மட்டுமல்ல...
துல்லியமாய்க் கண் எதிரிலும்
தோன்ற வேண்டும்.
பெண்ணினம் தலைகுனிந்து நின்றதால்
எம் எத்தனையோ



தலைமுறைகள் தலைமறைவாகின
நிகழ்காலப் பெண்களினம் தயக்கமின்றி
தலை நிமிர்ந்து வாழத்
துணிந்து விட்டால்
வருங்காலப் பெண்களுக்கு
தேசீயகீதமாய்த் திகழலாம்
அதுவரை உண்மை இல்லா
மகளிர் தினத்திற்காய்
'சர்வ மகளிர் தினம்' என
நாள் ஒன்றினை ஒதுக்கிப்
போடும் கோஷங்களும்
போகும் ஊர்வலங்களும்
ஒருநாள் வேஷங்களே...ஒருநாள் வேஷங்களே...

## காசு

காசு ஒன்றே கடவுளாமோ..?
பேசாப் பிணங்கூட காசென்றால்
வாய் திறக்குமென உரைப்பதனால்
காசே கடவுளா கருத்தினைக் கூறிடுவாய்.
பாசமிகு பெற்றோரை காசினால் யாரும்
நேசம் நிறை நெஞ்சமுடன் மேதினியில்
வாங்கி மகிழ வழியுமுண்டோ சொல்.
வாசமிகு பூஞ்சோலையாய்
வாழவேண்டிய குடும்பந்தனில்
நீசமுறு வஞ்சனையால் நிதம்
நிம்மதியைத் தொலைத்த மனம்
காசு கொண்டு அமைதியினைக்
கண்டிட முடியுமோ சொல்.
கூசிடாது கூற்றுவன்போல்





கொல்ல வந்த கொடுநோயை
மாற்றிட இனி முடியாதென
வைத்தியர் கை விரித்தவேளை
காசு கொண்டு காலனைத்தான்
கலைத்திட முடியுமோ சொல்.
கருணையருள் இறைவனின்
கடைக்கண் பார்வை வேண்டி
காசு கொண்டு யாகஞ் செய்தால்
காரியம் நிறைவேறுமோ சொல்.
சொந்த தேசம் ஏதுமில்லை
சுளை சுளையாய்க் கையில் பணம்
பூரித்துப் பெருமை கொள்ள
பொருந்திடுமா நீயே சொல்.
பாதாளம் மட்டும் பாயும்காசு
பயன்மிகு ஆதாரமானாலும்
தேவையற்றுப் போகும்வேளை
செல்லாக் காசாய் மாறிடுமே
புரிந்து கொள்வாய்.

## இலட்சியம்..


உணவை மறந்து உறக்கத்தைத் துறந்து
ஓடியாடி ஓயாது உழைத்து
எண்ணிய எண்ணம் ஈடேறும்வரை
எல்லா இடர்களையும் ஏற்றே பொறுத்து
உடலது தேய உணர்வது நிலைக்க
எதிர்பார்த்த இலட்சியம் இனிதாய்ச் சேர
வருவது மட்டுமா வாழ்வினில் இன்பம்..?

எட்டிய இலட்சியமதை இருந்தே அனுபவித்து
அதன் பயன் உணர்ந்து அருமையைப் பகிர்ந்து
வாழ்வினில் காண்பதே வளமான இன்பம்
இலட்சியம் என்பது எட்டும் வரையல்ல
எட்டிப்பிடித்த பின்பும் இருந்தே வரையறை காண்பது
அதுவே மகிமை அளவில்லாப் பெருமை
அயரா முயற்சியால் அடைந்திடும் திறமை....



# தாய்க்கொரு காணிக்கை ...

அம்மா.!
அவனிதனில் அத்தனை உயிர்களையும்
நெகிழவைக்கும் ஒரு புனிதச் சொல்.
சொல் அல்ல. ஒருசொல்லால் எழுதப்பட்ட
உயிர்ப்பான காவியம்.
காவியம் அதில் கலந்திருக்கும்
பல மிதமான கற்பனை.
கற்பனைக்கே இடமின்றி
நிசமான நிகழ்வுகளால்



நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும்
அபரிதமான அன்பின் வெளிப்பாடே தாய்மை.
தாய் அவள் எம் உயிரென்னும்
உலகுக்கு வளம் அளித்து
வலம் வரும் சூரியன்.
சூரியனோ கீழ்த்திசை பார்த்துத் தோன்றி
மாலைப்பொழுது மேற்கில் அஸ்தமனம்.
அஸ்தமனமாகாத ஆத்மார்த்தமான
கருணை ஒளியாலே இருளோட்டி
எத்திசையும் தன்பிள்ளை வாழ்வுக்காய்த்
தனை ஈனும் உள்ளந்தான் அன்னைக்கு.
அன்னைமனம் தன்பிள்ளை
பசி துயரம் பொறுக்காது.
அதை மாற்ற ஓடிவந்து
அமுதளிக்கும் அட்சயபாத்திரம்.
பாத்திரம் மட்டும் அறிந்து
பிச்சையிடுபவள் அல்ல தாய்.
தாய்தன் அன்புக்குப் பாத்திரமான
அத்தனை உயிர்களுக்கும்
தேவைகளைப் பூர்த்தி செய்யப்
புரிந்திடுவாள் பலசேவை.
சேவை பல புரிந்து சீராட்டி
ஆளாக்கிவிட்ட அன்பின் வடிவம்.
எம் ஆராதனைக்குரிய பேசும்
தெய்வம். அவளே எம்தாய்.
தாயவளுக்கே உரித்தான
உன்னதங்கள் கொண்டதுதான் கருணை.
கருணையுடன் கருவிலே உயிர் சுமந்து
சுவாசிக்கும் மூச்சிலும் பங்களித்து
பிரசவத்தின் போது
மரணத்தின் வாசற்கதவை



எட்டிவிட்டு வந்து மறுபிறவி எடுக்கும்
மகத்தான புதுப்பிறவி.
பிறவி தந்த பெற்றவளுக்குப்
பிரதிபலனளிக்க இப்பிறவிதனில் முடியாது.
முடியாது என்றாலும் முழுமனதாய்
நாம் தரலாம் காணிக்கை
காணிக்கையாய் என் அன்பின்
உணர்வுகளைத் மணிச்சரமாக்கி
தாயே..! தந்து நின்றேன் கவிதையிதாய்....



இலங்கையின் யாழ்மாவட்டத்தில் உள்ள அளவெட்டி என்னும் ஊரைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.


ஜேர்மனியில் எல்ஸ்டோர்வ் **(Elsdorf)** நகரில் வாழ்ந்து வருபவர்.



## திருமதி.புனிதமலர் இராஜேஸ்வரன்

(புலவர் பூங்கோதை)

# பூமியின் புலம்பல்




தேசச் சண்டையால் சேதம் போனேன்
நச்சுக் காற்றால் நலிந்து விட்டேன்
காட்டின் அழிவால் வரண்டு நொந்தேன்
கானல் நீராய் கனன்று போனேன்
காட்டு மரங்களை மனிதன் வெட்டினான்
காடாற்று வெள்ளம் ஊரை அழித்தது
போரினால் அழித்தான் உடமையை உயிரை
நச்சுக்காற்றால் நானும் நலிந்தேன்.

சூரியன் கூடத் துவண்டு போயிற்று
வருணன் (வாயு) வழிமாறிப் போயின-மழை
வெள்ளமும் புயலும் வீறு கொண்டு எழுந்தே
வீட்டையும் அழித்தன நாட்டையும் அழித்தன
நானும் நோயாளியாகி நொந்து போனேன்
எத்தனை நாளோ என் வாழ்வும் அறியேன்
இயற்கை வனப்பை நானா அழித்தேன்?
இன்னல் கொண்டு நான்தான் இளைத்தேன்

காட்டின் அழிவால் கலங்கிப் போனேன்
போரின் அழிவால் புலம்பி அழுதேன்
விம்மல் வந்து பெருமிக் கொண்டேன்
எரிமலையாகி எங்கும் சிதறினேன்
பெருமழையாகி ஊரை அழித்தேன்
கொடும் காற்றாகி சீற்றம் கொண்டேன்
உடல் நடுக்கத்தால் நிலநடுக்கம் கொண்டேன்
என் செய்வேன் மனிதா என் செய்வேன்
- நீதானே செய்தாய் -

# நம்நாடும் நாம் வாழும் நாடும்



ஊரிலிருந்து அம்மா சொன்ன
ஊரிலுள்ள புதினங்கள்
உள்ளத்தையே நெருட்டியது
உண்மைதானா இதுவென்று
அன்புத் தோழி மாலதியும்
அத்தானோடு போய்விட்டாள்
அக்கா வாழ்வை நினைத்தாளா?
அவமானம் தன்னைக் கொடுத்தாளே!

என் மாமா மகனின் சேதியைத்தான்
மனம் நொந்து அன்னை சொல்லியதை
நினைத்துப் பார்க்க முடியவில்லை
நிசமா என்று புரியவில்லை
கஞ்சா குடித்து அழிக்கின்றான்
பெண் காமத்தோடு திரிகின்றான்
போரின் அவலம் போயிற்று
மக்கள் போக்கின் அவலம் போயிற்றா?

மேல் நாடடில் வாழும் சனங்கள்தான்
மேவும் தமிழர் கலாச்சாரம்
நன்றாய்ப் பேணிக் காக்கின்றார்
என்றே அம்மா சொன்ன கதை
ஊரில் திருமணம் முடித்து வந்த
உந்தன் மருமகன் இங்கில்லை
வேறொரு குடும்பத்துப் பெண்ணுடன் வாழ்கின்றார்
இதை எப்படியம்மா நான் சொல்வேன்

பேத்தியின் செயல் நீ அறியவில்லை
பொய்க் காதல் கொண்டு திரிகின்றாள்
இருமுறை திருமணம் இருகுழந்தை
இப்போ வேறொரு வாழ்க்கை வாழ்கின்றாள்
தனியே வாழும் உன்மகளை

சனம் தப்பாய்ப் பேசும் வேளையிலும்
தாயே உன்னிடம் கூறாமல்
தன்னம்பிக்கையுடனே வாழ்கின்றேன்

போரில் ஊரே கலங்கிய வேளை - இங்கு
பெருந் தெருவெங்கும் ஆர்ப்பாட்டம்
அந்தி வேளை சாய்ந்தவுடன்
நண்பர் வீட்டில் கொண்டாட்டம்
ஆடம்பரமாய் காரில் இருந்து
அழகாய் நடக்கும் கல்யாணம்
ஊரை நினைத்துக் கொண்டாரா?
உலகை நினைத்துக் கொண்டாரா?

எல்லாம் போலி தானம்மா –
இதயம் நொந்தே போகின்றேன்
தனித்து வாழும் பெண்ணுக்குலகில்
தகுந்த பாதுகாப்பு ஏனில்லை
தாரம் இழந்த அவளை
ஆண்கள் தரங்கெட்டு அணுகும் வழியுண்டு
வையகத்தில் அவள் வாழ
வைப்பாட்டியாக்கும் நிலை கொள்வார்.

போரில் அங்கவீனராகும் ஆண்கள்
அவர் தம் தரத்தில் குறைவதில்லை
பெண்கள் அவ்வாறு ஆகிவிட்டால்
பெண்களின் நிலையோ இழிவுதான்.
தாரமிழந்த ஆண்மகன்
என்றும் தரணியிலே ஆண்மகன்
இல்லறமும் கை கூடும்
இன்பமான இல்வாழ்வும் கை கூடும்.

நொண்டியாகி கற்பிழந்து விதவையாகும்
பெண்களின் வாழ்க்கை என்ன?
வாழ்வு என்ன? வையகத்தில் நிலை என்ன?
கைத்தொழிலும் தையல்தானும்
பெண்களுக்குதவுமோ?

மறுமணமும் கொண்டே வாழ்ந்தால்
வானமும்தான் இடியுமோ?
எத்தனை பேர் இதனை எண்ணி
சிந்தை தன்னில் கொள்கின்றார்?

எழுதும் பெண்கள் கவிஞர் கூட
எதனைப் பற்றி எழுதினர்
காணும் கடவுள் கடவுளல்ல
விதவைக்கு கரம் கொடுத்து வாழ்வழிக்கும்
கணவன்கூடக் கடவுள்தான்
கடவுள் வாழ்த்தும் அவர்கள்
வாழ்வைக் காலம் வாழ்த்தும் வாழ்த்துமே.

மாறுபட்ட உலகில் மனிதன் மாசுவின்றி வாழ்ந்திட
நல்வழி என்றெனக்குத் தோன்றிற்று
வாழ்க என்றும் வையகம்
சில பெரியோர் சொன்ன சொல்தனில்
சிலவே நானும் சொல்லினேன்
இன்னும் சொல்லப் பலவுண்டு – என்
இதயத்தில் ஈரக் கசிவுண்டு.

## மானிடம் உய்ய வேண்டும்

பழைய மொழிகளில் தமிழ் மொழி ஒன்று
பண்பாடு கொண்டவர் தமிழர் தான்
இனியமொழி நம் தமிழ்மொழியாகும்
இனிக்கும் அச்அசொல் நமக்கும் தான்
வள்ளுவன் முதலாய் பாரதி வரைக்கும்
வளர்த்தது எங்கள் தமிழாகும்
இன்னும் வளரும் கவிஞர் வரைக்கும்
வாழ்ந்து வளரும் தமிழாகும்.


ஆனால்
பண்டைத்தமிழர் பெருமை பேசி
இன்னும் வாழ்வது சரியாமோ ?
இன்று வாழும் காலத்தோடு
இணைந்து வாழ்வதே சரியாகும்
பழைய மொழிதான் தமிழ்மொழியானால்
பாரில் மற்றைய மொழிகள் புதிதாமோ!
மனிதன் பேசத் தொடங்கிய நாள்முதலாய்
பிணைந்து கொண்டது மொழியாகும்.

இந்து,முஸ்லீம்,புத்தம்,கிறீஸ்துவம்
என்றே மதங்கள் பலவாகும் - இதில்
மதத்தின் பெயரால் வெறியும் கொண்டு
மதப்போர் செய்வது அழகாமோ?
வாழும் முறையைக் காட்டிடத்தானே
வந்தது சமய மார்க்கமுமே - இதில்
இந்து,முஸ்லீம்,புத்தம்,கிறீஸ்துவம் - என்று
பிரிந்து கொண்டது முறையாமோ?

இனம் மதம் மேலோர் கீழோர் என்றே
சாதியைப் படைத்தவன் மனிதன்தான்
உயர்ந்த சாதி தாழ்ந்த சாதி – என்று
தனக்குத் தானே வகுத்திட்டான்
மிருகங்களிலும் கண்டு கொண்டான்
மரங்களில் கூட இனம் கண்டான்
மரமோ மிருகமோ சொல்லியதா ?
உயர்ந்தவன் தாழ்ந்தவன் தானென்று

சாதி சமயம் இனம் மொழி என்றே
இன்னோரென்ன பேதங்களால்
இன்னல் தானே கண்டுகொண்டோம்
இழிவைத் தானே வரவழைத்தோம் - உலகில்
மதம் மொழிச் சண்டை வேண்டாம்
மானிடம் உய்யவேண்டும்
அகிம்சை நீதி அன்பு கொண்டே
அகிலமும் தழைக்க வேண்டும்.

# பூவே புரிந்ததா உனக்கு...?



நான்...
நீண்ட நெடு வீதியருகில்
நிழல் தரு மரத்தினடியில்
பூத்த ஓர் பூவின் அழுகுரல்
ஏனோ கேட்டது எனக்கு

உட்கார்ந்து அதன் அருகமர்ந்து
ஏனம்மா என்றேன்

முலை முட்டப் பிள்ளை மறுக்க
முட்டி வழியும் முலைப்பால் போல்
வடிந்தோடும் தேனின்
வடுக்கண்டு வியந்தேன் நான்

## பூ..



கண்ணே....
மணியே....
கற்பகமே....
என் பிள்ளை எங்கே..?
எங்கேயெடா சென்றாய்...?
வருவான் வந்து
என் வதனமவர்வான் பின்
என் முலையின் வலியடக்கி
எம் சந்ததியின் வாழ்வுக்காய்
என் உள்ளம் தொட்டுத் திரிந்த
என்பிள்ளையவன்
எங்கே....?
எங்கே....?
நான்...

அவனா..?
இன்று நீ அழுகிறாய்
நாளை மானுடம் அழும்
முதலில் நீ மரிப்பாய் பின்
சோலை மரிக்கும்
காடுகள் பாலைவனங்களாகும்
முலையூட்டிகளின் எலும்புக்கூடுகளால்
இப்புவியே நிரம்பி வழியும்
யாவும்மரித்தபின்பும்
வான் பார்ப்பான்
இப்பிரபஞ்சத்தில்
எங்கு..?
எப்படி..?
கருக்கொண்ட தனது கருவை
வித்திடலாமென்று..?

வித்திடுவான் அங்கும்
சாதி உருவாகும்
சமயம் உருவாகும்
பணமும் ஏழைத்தனமும் கூடவே உருவெடுத்து
கத்தி அரிவாள் என ஆரம்பியாது
கதிர் ஒளியில் ஆரம்பித்து
கதிர்வீச்சால் முடிவுற்று
எம் பிரபஞ்சத்தையே இருட்டாக்கி
தானும் அழிபவன்
அவன் தான் உன்பிள்ளையையும்
அழித்தவன் அழித்தவன் அழித்தவன்.
இப்போ பூவைப் பார்த்தேன்
மெலிதாய் வாடி பின்
மெத்தன விழுந்து
கருகிச் சாம்பரானது.

இலங்கையின் யாழ்மாவட்டத்தில் உள்ள யாழ்ப்பாணம் என்னும் ஊரைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

ஜேர்மனியில் டிசுல்டோர்வ் **(Düsseldorf)** நகரில் வாழ்ந்து வருபவர்.

தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்



# அன்ரனி வரதராசன்

(வரதன்)

# சில மனங்களும் ரணங்களும்

எத்தனை காலம்தான் ஏமாற்றுவாரோ!
ஓர்தலைமுறையே அழிப்பு
புலத்திலிருந்தோ வீராப்பு
ஏமாற்றி ஏமாற்றி
வாயும் வயிறும் வளர்த்த கூட்டம்
எப்போதுமே பணமே குறியாய்....
புலத்து மாக்களே
உங்களுக்கு
பசிக்க மாத்திரை
படுக்க மெத்தை
பல ஈமெயில்கள்
பார்த்து ரசிக்க மானாடமயிலாட
எங்களுக்கு
பசித்தால் கொட்டாவி
படுத்தால் கொறட்டையொலி
பகலிரவாய் ஈக்களின் தொல்லை
பார்க்க கன்றாவியாய் கையின்றி காலின்றி பிஞ்சுகள்
மாந்தையிலிருந்து மந்தைகளாய்
மேய்கப்பட்டோம் மேய்ப்பர்களால்
முள்ளிவாய்க்கால்வரை
உணவு உடை உணர்வு உயிர்
கொடுத்து வளர்த்ததனால்
நன்றியோடு நடைப்பிணமாய்
நந்திக்கடலோரம்வரை
விரட்டியடிக்கப்டோம் எம்மவர்களால்
உயிருள்ள கருவாடாய் கருவாச்சி காவியங்களாய்
கண்ணீரில் மிதந்தது
நந்திக் கடலோரம் மட்டுமே சாட்சியாய்



முள்ளிவாய்க்கால் வரை போனதால்
முள்வேலி கம்பிக்கு பின்னால்
முகத்தினை மறைக்கின்றோம்
இலையான்களின் தொல்லையால்
குந்தநிலம் குடிக்ககஞ்சி
குளிக்க இடம் மாற்றியுடுக்க உடை
இதுவே எம்தவிப்பு
புலத்துமாக்களே நீங்கள்
வெள்ளையருக்கு அடிமையாய்
எங்களையும் உயிரோடு வாழவிடுங்களேன்
அடிமையாய் தன்னும்.

## மௌனமாய்

சிட்டு குருவிபோல்
எல்லைகள் இல்லாவானில்
வானத்து தாரகை போல்
வட்டமிட்டு வந்த என்னை
கனவுகளில் மிதந்த கனவானோடு
பணம் கொடுத்து
மணம் முடித்து
பொன் - விலங்கிட்டனர்
வெளிநாட்டு வாழ்க்கை
வெண்பனிபோல் வெளிச்சமாய்
என்றபடி நம்பி வந்தேன்
இருண்ட கண்டமாய் வெறுப்பாய்
ஆனாலும்......பெற்றவரின் கண்களில்
நீர்திவலைகள் வந்துவிடக் கூடாதே
என்பதற்காய் பொறுமையின்ஊடே
தலையாட்டி பொம்மையாய்......
(சின்ன வயதினில் பொம்மைகளோடு

வாழ்ந்த அநுபவத்தால்)
என்ன குழந்தை
எப்போது பெறவேண்டும்
எல்லாம் அவ(ர்)ன் விருப்பாய்....
தளராத நம்பிக்கைகளோடு
தடைகளைத் தாண்டி
தடம் பதிக்கின்றேன்
விலங்கினை உடைத்து
வெளிச்சத்திற்கு வரவல்ல
மீண்டும் இருளுக்குள்
விலங்குகள் வாழ்வுபற்றி
மௌனமாய் வந்துவிடும்
என் சொப்பனம் தானே
என் விருப்பாய்
என்னை தாலாட்டுகிறதே.



## வரவும் செலவும்

மாதம் முழுதும்
மாடாய் உழைத்து
ஓடாய் தேய்ந்து
ஓர்நாள் மட்டுமே - பணக்காரனாகி
செலவுகள் போய்விட
ஓவ்வொரு மாதமும்
கையினைக் கடிக்கின்றதே
கைப்பிடித்தவளோ
வீண் - செலவுக்கோ
ஒருபோதும் குறை வைத்ததேயில்லை
கொடியிடையோடு வந்தவளோ
பிடியிடையாளாகி - இப்போ
ஒட்டியாணம் வேண்டுமாம்
ஓடி ஓடி இரண்டாவது வேலை
ஒழுங்காய் செய்கின்றேனே





வேலையென்று
தொட்டியில் அனுதினமும்
சட்டிகளோடு சன்னதமாடி
யட்டி புதுசு வேண்டி பலகாலமாச்சு
கோடைகாலம் வந்தாலே
மொய்யிற்கும் புதுச்சேலைக்கும்
(இலவச யன்னல் வைத்த ரவிக்கையும் தருவதால்)
கடன் அட்டைதானே வட்டியோடு
கரம் கொடுக்கின்றதே
இனிப்பும் கொழுப்பும்
இரத்த அழுத்தமும் அதிகமாவே
வரங்களாய்கிடைத்ததால்
வரதட்சனையின்றியே
வண்ண வண்ண வடிவான மாத்திரைகள்
வாயிலை வந்தடைகிறதே - செலவினத்தோடு
உலகமயமாக்கலில் வரவுகள் இன்றியே
செலவுகள் செய்திட்டு
வாழ்க்கை ஓட்டிடும்
வாடிக்கையாகிவிடும்
நாட்களை எண்ணியபடி - நாம்.

# கீறலும் கிறுக்கலும்

கீச்சு மாச்சு தம்பலாம்
கீயா மாயா தம்பலாம்
கீதமாய் இசைக்கிறதே இன்றுவரையும்
நீ இசைத்ததால்.....
நீ உதிர்த்த வார்த்தைகளோ
கீதா உபதேசமாய்
கிட்டி பொல்லும்
கிளித்தட்டும் கித்துள் பனங்கட்டியும்




கிளிச்சொண்டு மாங்காயும்
கிளறுகிறதே இதயமதில்
உன்னை நினைக்கையிலே
இடிந்த வீட்டில்
சிலந்தி வலைபின்னுவதுபோல்
இடிந்த இதயமதில்
காதல் கட்டுகிறேனே
உனைநினைக்கயிலே
கிச்சாவிற்கு வயசு பதினாறு
கீறல் விழுந்த இறுவெட்டு போல்
உன் பெயரை மட்டுமே
உச்சரிக்கும் - என்உதடுகள்
ஆடிக்குப்பின் ஆவணியும்
தாடிக்குப்பின் தாவணியும்
கீறலும் கிறுக்கலுமாய்
கிடைத்தது வரப்பிரசாதமாய்
கிறுக்கனாய் நான் இப்போ
அரைக்கிறுக்கனா முழுக்கிறுக்கனா
முழுதாய் புரியவில்லை
எந்நிலை - எந்தனுக்கு

## வரையாத கோலங்கள்.

எழில் கொஞ்சி வினளயாடும் நிலமது
முகில்கள் சில சமயங்களில்
முதுகினை தொட்டு செல்லும்காட்சி
மலை உச்சிதனில் மனதிற்கு இதமானதே
நாட்டின் பொருளாதாரத்தில்

முதுகெலும்பாய் - எம் உழைப்பு
எப்படி உழைத்தும்
நிமிரவே முடியாத - குனிந்த வாழ்வு
துரைமார் உறஞ்சுவது போதாமல்
அட்டைகளும் அடிக்கடி உறிஞ்சிடும்
இனக்கலவரத்தால் இடம்பெயர்ந்து
புகையிரதத்தில் பட்டணம் போயும்
களவாய் தோணியில் வந்தவராம்
காசுகொடுத்து கப்பலில்
அக்கரை சென்றும் - அங்கும் நாம்
களவாய் தோணியில் வந்தவராம்
சுவையான தேநீரை
ஐரோப்பிய தேசமதில் தானே
பருகிடக் கிடைத்ததே
விமானத்தில் ஏறி
இங்கு வந்தும்
களவாய் தோணியில் வந்தவராம்
வரையாத கோலங்களாய் - எம்மை
வரையறுக்கும் மனிதர்களே
நாவினால் சுட்டெரிப்பதும் முறைதானோ
மனதில் உள்ள கறைகளை
கரைத்து விட்டு
மனிதம் பற்றியும் - ஒற்றுமை பற்றியும்
பேசுவோம் மேசையினில்
ஒன்றாய் இருந்தேனும்.......



# பதில் சொல்வாயா நண்பனே

அன்புள்ள நண்பா
நீண்ட தொலைவிலிருக்கும்
நீண்டு சென்றிடும் சோகத்தினை அறிந்திடுவாயா
பாசமாய் ஊட்டி வளர்த்திட்ட - என்னை
படித்து பட்டம் பெற்றேன்
எனச் சொல்லிட முடிந்திடவில்லை
பல்கலைக்கழகத்தில் படித்து முடித்திருக்க
வேண்டிய ஆண்டுகளோ இரண்டு
படித்ததோ மாதம் நான்கு பணம் இல்லாததனால்
பக்கத்து நாட்டிற்கு சென்றேனும்
படிப்பினை தொடர்ந்திட முடியவில்லையே
ஏழை விதவைத் தாயின்
ஏக்கத்தினையும் கனவினையும்
நிறைவேற்றிட முடியவில்லையே
வாழ்க்கைப் போராட்டத்தில்
கரம் பற்றிட யாருமிலர்
தரம் கண்டு தள்ளிவைப்போர் பலருண்டு
கல்லாதவர் முகத்திரண்டு புண்ணுடையவராம்
கண்களையே புண்ணாக்கிய
புண்ணியவான்கள் பலருண்டு இங்கு
தாயின் கண்ணீரை
தடுத்திட முடியாதவன்
ஓர்பிடி மண்ணிற்கு ஆசைப்படுவேனா

மண்ணாசை பிடித்தவன்
என்ற பெயரினில்
மரணம் எப்போதும் வாசலை வந்தடைகிறதே
எங்கள் வாழ்வும் வளமும்
மண்ணோடு மண்ணாகிட வேண்டியது தானா
பதில் தெரிந்தால் சொல்வாயா.



# நான் ஓர் கவிதை எழுதிடல் வேண்டும்

உரிமைகள் மறுக்கப்பட்டவர் பற்றியோ
உண்மைகளை மறுதலிப்பவர் பற்றியோ
உண(ர்)வின்றி அல்லல்படுபவர் பற்றியோ
மழையில் நனைந்தும்
மாற்றுடைக்கு வழியில்லாதவர் பற்றியோ
பதின்நான்கு வயதாகியும்
பாடசாலை செல்ல முடியாதவர் பற்றியோ

எல்லாவற்றையும் தெரிந்தும்
தெரியாது போலிருந்து
விளிம்புநிலை மனிதர் பற்றியல்லாத
ஓர் கவிதை எழுதிடல் வேண்டும்
போற்றி பாடியும்
போர் பற்றி பாடியும்
போதாது உயிர்கள் மடிந்தது
(மடிந்தால் தானே தீர்வு கிடைக்கும்)
சுடுகின்ற சுவடுகளில் நடந்தாலும்
இறந்தவர்கள் பற்றி
தொப்புள்கொடி உறவென்றும்
எம்தமிழ் உறவுகள் என்றும்
உச்சரித்துக்கொண்டு.....
ஓர் கவிதை எழுதிடல் வேண்டும்
காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள வேண்டும்
என்று சொல்வதற்காய்
புல(ன்)ம்பெயர் தேசத்து ஊடகங்களில் -
மேடைகளில் மரியாதைக்குரியவனாய்
வலம்வர வேண்டும் என்றால்
நான் ஓர் கவிதை எழுதிடல் வேண்டும்
தொப்புள்கொடி என்றோ
எம்தமிழ் உறவென்றோ.....



இலங்கையில் திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

ஜேர்மனியில் கார்ஸ்ற் **(Kaarst)** நகரில் வாழ்ந்து வருபவர்.



**மலைமகள்**

# இன்றே நாம் உழைப்போம்


அன்னைத் தமிழே
அழகின் மொழியே
என்னை ஈன்ற
எந்தன் தாயே

மண்ணின் மகளே
மலையின் ஊற்றே
பெண்ணின் பெருமை
பேசும் நாடே


ஈழ உறவே
இதய வடிவே
நாளும் மறவேன்
நமது இனமே

இடங்கள் பெயர்ந்தோம்
இன்பம் தொலைத்தோம்
வடங்கள் பிடித்தே
வாழ்ந்து வந்தோம்

மதங்கள் மறப்போம்
மனங்கள் சேர்வோம்
இதமாய் வாழ
இன்றே உழைப்போம்



## கவிதை ஒன்று பிறக்குதே...



ஒரு பாடல்வந்து
காதில் விழுந்து
என்
பாதை மாறிப்
போனது
இசையின் மழையில்
இனிய மொழியில்
இதயம் கொள்ளை
போனது
இங்கும் அங்கும்
எங்கும் உனது
பாடல் ஒன்றே
கேட்குதே



இன்னல் நீங்கி
இதயம் முழுதும்
இன்பம் பொங்கி
பெருகுதே

கண்ணை மூடி
கவிதை வானில்
காவியங்கள்
படைக்குதே


## இதோ என் இதயம்

என் இதயத்தை
சுற்றி வரும்
பூப்போன்ற
உன் அன்பில்




மலரத் துடிக்கிறேன்
மறைந்திருக்கும்
முட்கள் குத்தும்
என்று நினைத்து
விலக நினைக்கிறேன்
ஆனால்...
காதல் செடியை
கருகவிடவும்
விரும்பவில்லை
அதனால்..
நீ படரவே
நெஞ்சம் தருகிறேன்
ஒருவேளை நீ
வேரறுத்து
செல்ல நேர்ந்தால்
தழும்புகள் தான்
மிஞ்சும்..
நினைவுகளை சுமக்கவே
துணிந்துவிட்டேன்
இதோ என் இதயம் !

## நம் காதலை உலகறிய வேண்டும்



மேகங்கள் போலே
தாகங்கள் போக்க
நீ வர வேண்டும்
தேகங்கள் எல்லாம்
காதலின் ஜீவ
நதி ஓடவேண்டும்
சொல்லாத புதிய

## LOVE



கவிதைகள் நூறு
நீ சொல்லவேண்டும்
தூரங்கள் சுருங்கி
நேரங்கள் நெருங்க
நீ வரவேண்டும்
இரவுகள் தோறும்
இனிக்கின்ற கனவில்
இன்பங்கள் வேண்டும்
இளமைக் கனவும்
இனிய நினைவும்
நிஜம் பெறவேண்டும்
ஆதவன் உருவில்
ஜோதியாய் நீயும்
அன்பில் உருகவேண்டும்
அழகு நிலாவின்
முற்றத்தில் நாமும்
பவனி வரவேண்டும்
இனிய மலரில்
இருக்கும் மதுவை
உண்டு மகிழவேண்டும்
இது தான் காதல்
என்பதை இந்த
உலகு அறியவேண்டும்




## இயற்கைக்கு ஒரு முத்தம்.

வெட்ட வெளியில்
நட்ட நடுவில்
துள்ளிக் குதித்திடும்



மானாக நானும்
புள்ளிவைத்துப்
புள்ளிவைத்து
பூப்பாதங்களால்
கோலமிட்டு நடந்தேன்..
வாடைத் தென்றலுடன்
ஓடை சத்ததுடன்
ஒய்யாரமாய் இங்கு
நடைபோட்டு கொண்டு
நெடுந்தூரம் சென்றேன்..
கடும் கோபம் கொண்டு
காற்றோடு போராடி
கலைகின்ற சேலையை
கைகளால் வளைத்து
கவிதைச் சாரல்களை
கலையாது காத்தேன்..
ஆடும் மயிலாய்
பாடும் குயிலாய்
நானும் மாறியே
ஆனந்தம் கொண்டேன்..
சிறையில்லா வாழ்க்கையில்
சிரிக்கின்ற நிலவாக
குறையில்லா குழந்தையாக
கொடுக்கின்றேன் இங்கு
முத்தங்கள்…
இயற்கை எனும்
என்அன்னைக்கு..



இலங்கையின் யாழ்ப்பாணத்தில் உள்ள ஆனைப்பந்தி என்னும் ஊரைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

ஜேர்மனியில் கென்னெவ்(**Hennef**) நகரில் வாழ்ந்து வருபவர்.



# திருமதி.மீனா சிவலிங்கம்

(கவிமீனா)

# ஐரோப்பிய மண்ணிலே



பால் இருக்கும் பழம் இருக்கும்
புசிக்கமுடியாது.
பஞ்சணையில் படுத்திருந்தும்
தூக்கம் வராது.
வாழ்கை என்னும் பயணம்
ஒரு வேம்பாய் போயாச்சு
காயம் இது காற்று அடைத்த பந்து
என ஞானம் வந்தாச்சு
றொட்டித் துண்டை மென்று
வெறும் பச்சை தண்ணிதான்
குடிக்க காலம் வந்தாச்சு
ஆடுபயம் மாடுபயம் கோழிபயம்
என்று தென்னாலி சொன்னது போல்
ஒரு வேதம் உண்டாச்சு.
கஞ்சி தன்னை காய்ச்சி
வெள்ளி கிண்ணத்திலே குடிக்க
ஒரு விதியும் வந்தாச்சு
ஓடி வந்து வாழவந்த தமிழர் பலர்
வாழ்வில் பல நோயும் திரண்டாச்சு
கட்டழகாய் வந்த பலர்
இங்கே குண்டுகத்தரி போல்
உருண்டு திரியும் தோற்றம்
வந்தாச்சு ஓடி ஓடி உழைத்து
உடல் தளர்ந்து போயாச்சு
சுற்றம் சூழ வாழ இன்றி
மனம் சோர்ந்து போயாச்சு
வாழ்க்கை என்ன வாழ்க்கை என
சலித்து பேசும் பேச்சு உருவாச்சு



நாடி நரம்பு தளர்ந்ததாலே
குடும்பத்திலே பூசல் உண்டாச்சு
வெளிநாட்டு வாழ்க்கை
தேவலோக வாழ்க்கை என
கனவு காணும் காலம் தீர்ந்தாச்சு
காசு பணம் இருந்தால் ஊரில்
சொந்தம் கூடும் என்று
புரிய வந்தாச்சு
காரியம் பார்க்க மட்டும்
இங்கு கூட்டம் கூடும் என்றும்
அறிய வந்தாச்சு
வெளிநாட்டு வாழ்க்கை
ஒரு அனுபவ பாடம் என்றாச்சு
சொந்த மண்ணை எண்ணி எண்ணி
நெஞ்சில் ஏக்கம் வந்தாச்சு
சொந்த மண்ணை எண்ணி
தமிழன் நெஞ்சில் ஏக்கம் வந்தாச்சு



## பெண்ணே விடியலை நீயும் காண்பதற்கு

பெண்ணே பெண்ணே விழித்து விடு
எனி விடியலை நீயும் காண்பதற்கு
சிறை கதவை உடைத்து விடு
எனி நீ சுதந்திரமாய் பறப்பதற்கு
கை விலங்குகளை களட்டி விடு
எனி நீ கை வீசி நடப்பதற்கு



கண்களை நீ துடைத்து விடு
எனி கலங்காமல் நீ வாழ்வதற்கு
உ ன் மனக்கதவை திறந்து விடு
அதில் நல்ல மனங்களையே வாழ விடு
ஊருக்காக வேதனை தீயில் எரிந்து சாகாமல்
உனக்காக ஒரு முறை வாழ்ந்து விடு
வெறும் தியாகச் சுடராய் மறையாமல்
நீயும் ஒளி வீசி பிரகாசித்து விடு
காலம் பூராய் தேய் பிறையாக தேயாமல்
நீயும் ஒரு நாள் வளர் பிறையாய் மாறி விடு
அடுப்பங் கரை பூனை போல் இருக்காமல்
குற்றம் காணில் பாயும் புலியாய் மாறி விடு
பெண்ணே நீயும் பிறந்தது வாழ்வதற்கு
இல்லை ஒரு நாளும் அடியுண்டு மாழ்வதற்கு
நீ அடிமை இல்லை அடியுண்டு மாழ்வதற்கு



## மௌனமாக இருப்பதெல்லாம்

கோழி ஒரு முட்டை இட்டு
கொக்கரித்து ஊரை கூட்டும்
ஆமை ஆயிரம் முட்டை இட்டும்
அமைதியாய் படுத்திருக்கும்
மௌனமாய் இருப்பதெல்லாம்
முட்டாள்கள் செயல்கள் அல்ல
ஆயிரம் பூப் பூக்கும் மரம் செடிகள்
அசைவதில்லை அழுவதில்லை
பல் ஆயிரம் கனிகள் தந்தும்
அவை கூவிக் கூவி சொல்வதில்லை
வாழை மரம் எமக்காக
நல்ல குலை தள்ளி விழுந்தாலும்
அதனை வெட்டி எறிகையிலும்
தன் தியாகத்தை சொல்வதில்லை
நம் தாகம் தீர இளநீரை தருகின்ற
தென்னை கூட ஒரு நாளும்
தற் பெருமை பேசி கொள்வதில்லை
இனிக்கின்ற சுவையான பாலை தரும்
பசு கூட ஒரு நாளும் கொம்பால்
இடித்து முட்டுவதில்லை
நவரத்தினத்தை சொத்தாய் தலையில்
கொண்ட நாகமும் நல்லவர்களை
அடிக்காமல் தீண்டுவதில்லை
ஒளி வீசும் வெண் முத்தை
தருகின்ற சிப்பியும்
மனிதர் கையால் சாகையிலும்
மௌனத்தை விடவில்லை
முத்தான சிந்தனைகளை

சொத்தாக கொண்டவரே
என்றும் மௌனமாய் இருந்திடுவர்
அரை குறை அறிவுள்ள
மனிதர்களே அறியாமை காரணத்தால்
ஆகாயம் முட்டத் துள்ளி குதித்திடுவர்
ஊரைக் கூட்டி பெரியவர் போல்
பித்தலாட்டம் செய்திடுவர்
பேர் எடுக்க நினைப்பவரே
பேசிப் பேசி கிழித்திடுவர்
மௌனமாய் இருப்பதெல்லாம்
நிறை குடம் போல் தளம்பாத நிதானம்
உள்ளவர்கள் நெஞ்சமதே



இலங்கையின் வடபாலுள்ள முல்லைத்தீவு என்னும் ஊரைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

ஜேர்மனியில் சுன்டன் (**Sundern**) நகரில் வாழ்ந்து வருபவர்.

சுன்டன் தமிழ்ப் பாடசாலை பொறுப்பாசிரியர்

தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்



## பொன்.புத்திசிகாமணி

# இயற்கை உணவும் எங்கடை அம்மாவும்!

ஊரை நினைக்கையிலே ஓராயிரம் கவிதை வரும்
ஒவ்வொரு கவிதையிலும் உயிர்மூச்சு நிறைந்திருக்கும்
மெல்ல நடை நடந்து மேனியெல்லாம் புழுதிவாரி
செல்லக்கதை கதைச்சு சிரித்து மகிழ்ந்திட்ட
தெவிட்டாத நினைவுகளில் செழிப்பு நிறைந்திருக்கும்
சிவப்பு நிறத்தில் செவ்வரத்தை பூத்திருக்கும்

வளங்கள் சொரியும் வனப்பான கிராமமது
எங்கள் ஊர் என்னும்போது எனக்கொரு நிறைவுண்டு
கொல்லையில் பூத்திருக்கும் கொடிமல்லி வாசத்துடன்
கள்ளமாய்ப் பூத்திருக்கும் அல்லைக்கொடி சேர்ந்திருக்கும்
அல்லையென்றால் பலபேர் அறிந்திருக்க நியாயமில்லை
கொடி காய்ந்து மடிகையிலே அடிவேரில் கிழங்குவரும்

கிழங்கை அவித்துச் சுவைக்கையிலே ஐயகோ!
சொல்லிமாளாது சுவைத்தால்தான் சுவை தெரியும்
அல்லைக் கிழங்கின் அடிமுடி உண்டவர்
கல்லையும் பிரட்டுவாராம் -என்றொரு
பழமொழி ஊரில் இப்பொழுதும் இருக்கிறதாம்
அம்மா இதைச்சொல்லி அவித்துச் சுவைக்கவைப்பா

காட்டுக் கிழங்குகளில் கவலைக் கிழங்கும் சிறப்பினமே
மணற்காட்டில் கொடியாகி மலர்ந்து மணம்வீசும்
இதன் கிழங்கும் சுவைகளிலே எச்சில் சுரக்கவைக்கும்
காட்டுக் கிழங்குவகை அறிந்தவள் அம்மாதான்
பயனுள்ள செடிகொடியின் பக்குவம் தெரிந்தவள்தான்
மருத்துவர் என்றபொருத்தமான பெயருமுண்டு

ஒதியடியென்று எங்களுக்கோர் வயலுண்டு
அம்மாவின் சீதனமாய் அப்புவுக்கும் சொந்தமாச்சு
அளம் தாண்டி காலார நடந்து சென்றால் காணிவரும்
செழிப்பானமண் அதிலே செம்மையான விளைச்சல் வரும்
சீனெட்டி நெல்விதைப்போம் சொந்தத் தேவைக்காய்
அதை அறுத்து,சோறாக்கி நாம் சுவைப்போம்

ஊரில் மாரியென்றால் உளமாரச் சந்தோசமே
புதுமழையால் மண் மணக்கும் ஊர்முழுக்கப் பூக்கள்வரும்
மஞ்சளாய்த் தகரை பூக்க மணற்காடே பசுமையாகும்
எங்கள் மாமரமும் இலைதெரியா பூவாகும்
முற்றத்து வேப்பமரம் மலர் நிறைத்து முறுவலிக்கும்
அம்மா பக்குவத்தால் அதுவெல்லாம் வடகமாகும்


இரவின் அடைமழையால் இரையும் பெருங்கடலின்
அலையெழும்பி விழுமோசை அருகினிலே வந்ததுபோல்
விழிகள் பிதுங்க நாம் விடியலுக்காய் காத்திருப்போம்
அம்மாவும் காத்திருப்பா,காத்திருக்கும் தரம்வேறு
மண்வெட்டிதனைச் சுமந்து மளமளவென்று
ஒதியடி வயல்நோக்கி ஓடிவிடும் கால்களங்கே
விடிமழையால் வரம்புடையும் வேதனைதான் அவளுக்கன்று

வேலை முடித்து வீடு வரும்போது மடிகனக்கும்
அம்மாவின் மனம்சிரிக்கும் மகிழ்ச்சியிலே
என்ன கொண்டு வந்தா என்று மடிபறிப்போம்
கனிந்து, விழுந்திருக்கும் விழாம்பழங்கள் அதிலிருக்கும்
கொவ்வைப்பழ மிருக்கும் கொடிபடர்ந்து வேலியிலே குலுங்கும்
தூதுவளை இலையிருக்கும், காயிருக்கும்

குமட்டில் கீரையுடன் குளக்கரையின் வல்லாரை
பொய்கைக் கரையருகே பிடுங்கி வந்த பொன்னாங்காணி
பச்சைப் பசேலென்று பாரக்கவே வாயூறும்

வாட்டி சம்பல்போடும் பிரண்டந்தண்டு குருத்திருக்கும்
காட்டுப்பழங்கள் கனரகத்தில் கலந்திருக்கும்
இயற்கை உணவையுண்ட இறுமாப்பு என்றுமுண்டு

ஊரை நினைக்கையிலே ஒவ்வொன்றாய் நினைவுவரும்
எல்லாம் இருக்குமங்கே இன்று,இவற்றை எடுத்து வந்த கைகளில்லை
கனத்த மடியுமில்லை காத்திருக்கத் தேவையில்லை
கனகாலம் நான் ஊரில் இல்லை என்னைக், காத்திருப்பாள் இன்று இல்லை
இயற்கை உணவு தந்தாள்,இயற்கையுடன் கலந்து சென்றாள்
ஊரை நினைக்கையிலே ஓராயிரம் கவிதை சொல்வேன்.




# சமாதானத்தூதுவனாய்...

சமாதானத்தூதுவனாய் சந்தித்தேன் அவர்களைநான்
இரண்டு வீட்டுக்காரருக்கும் எப்படியோ தகராறு
குடும்ப விசயமென்று நானும் கொல்லையிலே போடவில்லை
அவர்கள் பிரச்சனையில் அதிகம் அக்கறைதான்
வேற்று மனிதன் நான்வேசம்போடவிரும்பவில்லை
சத்தியமாய் அக்கறைதான் நம்பினால் நம்புங்களேன்
மரியாதைக்குரியவன் நான் மனதளவில் மகிழ்ச்சியுண்டு

வாருங்கள் என்று வடிவாய்த்தான் அமரவைத்தார்
சுகங்கள் நலங்களென்று சொல்லி மாளாது
வடைகள் தேநீரென்று வடிவாய்த்தான் வரவேற்பு
எப்படித்தொடங்குவது என்றுயோசிக்க
வலியக் கதைதொடரவாய்த்தது நல்லதாச்சு
இருக்கை சரிசெய்து இடம் விட்டு உட்கார்ந்தேன்
கதைகள்தொடர்ந்து செல்ல காதைநான்கடன்கொடுத்தேன்
இடர்களெல்லாமே இல்லாதவன் இடம்சேர
வரட்டுக்கௌரவத்தால் வார்த்தைப்பிரயோகங்கள்
சூடுகிளம்பி சுரம்விலகி சொற்கள்போச்சு
அருகில் இருந்தவன் ஆத்திரத்தில் எழுந்துநின்று
நேருக்கு நேர்பார்த்து நீரிதனைக்கேளுமென்றான்
கடுமைகொண்டு முகம்சிவக்க காட்டுக்கத்து
பெண்டாட்டி தாசனவன்,பேயன்,பேடியவன்
மனைவியின் மந்திரத்தில்மானம் கெட்டுப்போனானவன்
அடக்கி ஆளாத ஆண்மகனாய் வாழுகிறான்
பொத்தடி வாயென்றால் என்மனைவிபொத்திடுவாள்
இரடி இதிலென்றால் இருந்துவிட்டே மறுவேலை
இடம்கொடுத்து நடந்து விட்டால் எல்லாமே இப்படித்தான்
ஆரில பிழையென்று அவரைப்போய்க்கேளுமென்றான்
பொறுமைதனையிழந்து போதுமென்று கையசைத்து
உடற் சூடுகொதிப்பெடுக்கஓங்கார மூர்த்தியாகி
என்ன கதைக்கிறாய்நீ எப்படியும் கதைக்கலாமோ!
பெண்டாட்டியென்றால் உன்தனுக்கு அடிமையாமோ
இரு என்றால் இருப்பதற்கும் நடஎன்றால் நடப்பதற்கும்
முடுக்கிவிடும் பொம்மையாமோ! போடுதடி என்பாயோ
கொத்தடிமை அவளென்று கோடிட்டுக்காட்டுகிறாய்
கொதித்த வார்த்தைகளால் குதறி எறிந்தேன்நான்
அவள் அன்பு இல்லாமல் அவளணைப்பு இல்லாமல்
கொஞ்சிமகிழாமல் குழந்தைகளே வந்ததாமோ-இல்லை
அந்தநேரத்தில் அடிமையாகி மேய்ந்தாயாக்கும்

உணர்ச்சிகளை அறுத்தெறிந்தால் உன்தனுக்கு மகிழ்ச்சியேது
படடியென்றாயோ படுத்தெழும்பிச்சென்றாயோ
உன்மனைவி உணர்வு செத்து எத்தனையோ நாளாச்சு
மரக்கட்டை மனிதா அவள் மனம்மகிழ நடந்துகாட்டு
இரைந்து கரைந்து விட்டு எழுந்து நடந்தேன்நான்



# வல்லுவனுக்காய் சிலவரிகள்...

முக்கடலும் முட்டிமோதி முறுவலித்துஆரப்பரித்து
அலையெழுப்பி மகிழ்ந்திருக்கும் ஆதவனும் எழுந்து வீழும்
அழகினைப்பார்க்கின்ற ஒருகடலாம் குமரிக்கடல்
அந்தக்கடல்மீதிலன்று கப்பலொன்றுபோகிறது
கனடா கப்பலொன்று போகிறது
கடலென்ற கமவெளியில் கதிர்க்கட்டைதூக்கிவரும்
காரிகைபோல்
கதிரவனும் கதிர்க்கட்டை வீசி
எறியும்போதுவிடியல்வரும்வேளையது
காக்காய்குருவிகளும் காதலிக்கும் அவ்வேளை
சொர்ணக்குழம்பைக்குழைத்துசுந்தரமாய்பூசியதுபோல்
தொடக்கவானம் வெளுத்து சிவக்கின்றவேளையிலே
கதரினா என்ற கப்டன் மனைவியவள்

தங்கச்சிற்பமொன்று தகதகக்கும் மேனியோடு
கப்பல்தளத்திலன்று வந்தமர்ந்து கொண்டதுபோல்
காலைச்சூரியனின் கதிரொளியில் உயிர்ச்சத்தைவேண்ட
உடல்விருப்பங்கொண்டதுவாம்
செப்புச்சிலை ஒன்றுக்கு தேன் பூசி விட்டதுபோல்
பூசிவிட்ட திரவவாடை தென்றலோடு சேர்ந்து வீச
வண்டுகளும் அவளைச்சுற்றி வட்டமிடும்
கோலத்தை என்ன சொல்வேன்
குமரிக்கடல்கூட குறுகிப்போச்சு அவளழகில்
கோடைச்சூரியனின் கொடுவெயில்வரச்சாத்தியமாய்
கரையிலெங்கும் பளிச்சென்று ஒளிபரவ
கோலமயில்பார்வை கரைநோக்கி பதிகையிலே
பதைபதைத்து அன்ரனி அன்ரனியென்று
அழைத்திட்டாள் அவசரமாய் அவனைநோக்கி

குயிலொன்று அழைத்திட்டகுரல்கேட்டு
கப்டன் குதித்தோடி வந்தமர்ந்தான்அவளருகில்
யாரந்த மனிதனங்கேஉயர்ந்தொரு சிலையாய் நிற்பான்
மனைவியின் மருட்சிகண்டு மலர்ந்திட்ட முகத்தினோடு
மலரவள் தலைதடவிமறுமொழி பகரலானான்
உயர்ந்தவன்அவனே என்றான் உலகினில்மனிதன் என்றான்
உன்னதத்தமிழன் அவன் உயர்த்திட்டான் தன் இனத்தை
சிலையென எண்ணிடாதே விலையெதற்கில்லாதவன்
வள்ளுவன் என்றழைப்பார்வாழ்வியல்தத்துவத்தை
காலத்தை கடந்து வெல்லும்குறள்வரி தந்து நிற்பான்
குவலையம் வாழகுறுவரி படைத்துத்தந்தான்
மதமெது என்றில்லாமல் மறையவன் எவனென்றில்லாமல்
பொதுமறை தந்து பாரில் புகழ் பூத்த பொக்கிசமாம்
திருக்குறள் தந்துவாழ்வில் இதுவரை இறவாதுள்ளான்
அரிவையே அறிவாய்நீயே!அவனை நீ அறிந்திடுவாய்

எண்பது மொழிக்குமேல் மொழிமாற்றம்இதற்கு உண்டு
எல்லோரும் ஏற்கின்ற ஏற்றமிகு குறள்தந்தான்
சொல்லி விளங்காது சுவைத்தால்தான் புரியும்
என்னுடனே எப்போதும் எடுத்துச்சொல்லும்மார்க்கமிது
உலகம் அழிந்து உருக்குலைந்து போனாலும்
அழியாத பொக்கிசங்கள் பூட்டிவைக்கும் ஓர் அறையில்
திருக்குறளும் ஒன்றென்று அறிந்து கொள் என்னவளே
அகர முதல என்று அவன்தொடங்கி
ஈற்றில் முயங்கப்பெறின் என்று முடித்தும்வைத்தான்
உயிரில்தோன்றி மெய்யில்முடிந்ததென்பார்
மனிதவாழ்வின் தத்துவமே அதுதான் என்றான்
அகன்ற விழி விரிய அதிசயமாய் அவள்பார்த்தாள்.

(சுவிற்சிலாந்து அட்லிஸ்வில் நகரில் 16.05.2010இல் நடைபெற்ற சர்வதேச திருவள்ளுவர் விழாவில் இடம்பெற்ற கவியரங்கில் வாசிக்கப்பட்டகவிதையிது)



இலங்கையின் யாழ்மாவட்டத்திலுள்ள நெடுந்தீவு என்னும் ஊரில் பன்னிரண்டாம் வட்டாரத்தை பிறப்பிடமாகக் கொண்டவர்.

ஜேர்மனியில் வூப்பெற்றால் (Wuppertal) நகரில் வாழ்ந்து வருபவர்.

தமிழ் எழுத்தாளர் சங்க செயற்குழு உறுப்பினர்



**ப.பசுபதிராஜா**

# சதிக்கல்!...

தமிழன் அழிவுகளின் முற்றுப்புள்ளி முள்ளிவாய்க்கால்
அவன் ஆற்றலுக்கு உலகெங்கும் உள்ளது வடிகால்
இவனுக்குச் சிங்களப் பெரும்பான்மையல்ல எதிர்ப்பால்
இவனுக்கு இவனே இச்சகத்தில் இணையில்லாக் கருங்காலி
உலகம் எதிரிக்கே உதவும் எனத்தெரிந்தும்
அகல நீள ஆதரவு அவனுக்கு என்றே புரிந்தும்
மின்மினிகளாய் பிரிந்து ஒளிர்வதுதான்
எப்போதும் பிடிப்பான இயல்பான ஆசை
தண்ணீரைத் தடியால் அடித்தால் பிரியும் - கடல்
ஆழமாய் அது நீண்டு கிடப்பதனால்
வீதித் தண்ணீரை வீசி அடித்தால்
சேற்றுடன்தானே நம்மீது சிதறிப் பறக்கும்
நெஞ்சத்துப் பகை தமிழனுக்கு என்றும்
சொந்தச் சகோதரர்களேயன்றி வஞ்சகப் பகைமீது
அல்ல இது வாழ்க்கை கற்றுத்தந்த கௌரவப் பாடம்
ஒற்றுமை..ஒற்றுமை என்கிறான் வேற்றுமையின் விழுது
இவன் இதை ஓதும்வரை ஓயாத சாக்காடு
ஆள்பவன் இவன்தான் என்று அகராதி இருக்கு மட்டும்
அவலங்களின் பிரசவமே ஆகாயம் முட்டும்
தொழுவதற்கும் துடைப்பதற்கும் கருங்கல்
அறிவு துலங்காத மாயை வாழ்விக்குத் தணைக்கல்
ஜாதியும் மதமும் பிரிவினையின் படிக்கல்
சந்ததியாய் முந்தி முன்னிற்கும் சதிக்கல்!...



# ஏன் இப்படி!...


முருக்குப் பெருத்து தூணாகுமா
உயரப்பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தா!..
முக்காலும் குளித்தாலும் காக்கை அன்னமா!..
ஏன் இப்படி எழுதா மறையாய்
எமக்குள் கிடக்குது தடைக்கற்கள்
மூச்சுவிடமுடியாத முடிச்சுக்கள்
முயற்சிதான் இயற்கையை மீறிய துலக்கங்கள்-என்றபின்
பழிப்பதற்கு ஏன் இந்தப் பதாதைகள்
பிரித்து விளையாடும் அடிப்படை அமைப்பின்
ஆளப்பிளந்த அறிவுப் பிழை
காலா கால யுத்தங்களால் காணமுடியாமல்
கிடக்கும் காதகக் கடிதங்கள்
பழமொழிகள் கிராமங்களின் தோற்றுவாய்
கிழநரிகள் ஊளையிடும் இதிகாசங்கள்
ஆளவும் அழவும் என்ற வேறுபாட்டின் விதைப்பில்
எழுந்த இரு வேறு உலகின் இருப்புக்கள்
சீக்கிரம் அனுப்ப வேண்டிய
அறுவை சிகிச்சை அடையாளங்கள்
காக்கை குருவி நம்மினம் அவை
மனிதனுக்குமுன் வாழ்க்கை வழிகாட்டி
நாம் பாடம் படிக்கும் பவித்திரப் புத்தகங்கள்
இழிப்பது தவறு அது இயற்கை மேல் ஆயின்
எதிர்ப்பது மரபு
மனிதன் உதிர்க்கும் வார்த்தைகளைவிட
மரங்கள் உதிர்க்கும் இலைகள் சுகம்
கேட்டாலும் கொடுக்காத ஆறறிவுக் கொடுக்கில்
கேளாமல் கொடுக்கும் கீதம் அதன் அகம்
பழையன கேட்டுப் புதிய தோன்றும்
காலங்கள் இனிமேல் ஓங்கும்





# இருப்பு!..

துதிக்கப்படவேண்டியவன் எவரும் இல்லை என்று
சொல்பவனையே துதிக்கப்பட வைத்து
அன்பான அரவணைப்பால் அல்ல
அவன் கையில் உலவும் பொல்லாத ஆயுதங்களால்
உலகில் எவன் கையிலும் ஆயுதம் கூடாது
என்று கட்டளையிடும் இவனை நம்பி
ஆயுதத்தை இழந்தவன்தான் ஆயுள் முழுவதும்
ஆபத்துடன் வாழ்கிறான்.
இவன் கையில் மாத்திரம் ஆயுதம் மழலை பொழியலாம்
மழலைகளை அழிக்கலாம் மண்ணோடு மண்ணாகலாம்
இரத்தமும் சதையும் எங்கும் நிறையலாம்
எனினும் இவனே போதி மரத்துப் புத்தன் என்று
சுடுகலன் கொண்டு எழுதிடும் புதிய
அகிம்சா அத்தியாயங்கள்
இந்தியா கண்டுபிடிக்கப் போனவனைப் புயல் திருப்பி
உந்தியதால் உதயமான பேரிக்கா
முண்டாசு கட்டி முறுக்கு மீசை வைத்து
சண்டைக்கு என்றே வரும் முந்திரிக்கா
தினம் ஒரு செய்திமதி வலம்வரும் வானம்
இதுதான் பொருளாதார ஏற்றத்தின் கானம்
அரியணை ஏறும் அனைவருக்கும்
முகமதியர்தான் முட்டுக்கட்டை
முகத்தில் மயிர் வளர்க்கும் அனைவரும்
எதிரிகளே இவன் கண்ணில்



வேற்றுமை கருதாமல் வேறாகி ஒருவன் வந்தான்
வெறுப்பான நிறத்திற்குச் சிறப்பு என்றான்
பொறுப்பாகத் தொடர்கின்ற மறுப்புகளுக்குஅறுப்பாக
இவன் இருப்பான் எனப்பார்த்தால்
யாரோ நூல் ஆட்ட ஜோராகச் சாய்ந்தாடும்
பொம்மை இவன் என்று உண்மை தெரிய
ஆயுதங்கள் தான் இனி அனைத்தையும் எழுதுமோ
காகித இதயங்களில் கனவுகள் உயருமோ!...

இலங்கையின் யாழ்மாவட்டத்திலுள்ள புங்குடுதீவு என்னும் ஊரைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

ஜேர்மனியில் கைலன்கிறிச்சன் (Geilenkirchen) நகரில் வாழ்ந்து வருபவர்.

கைலன்கிறிச்சன் தமிழ்ப் பாடசாலை ஆசிரியர்



## திருமதி.வசந்தா ஜெகதீசன்

# இதுவரை...... எதுவரை......?



அந்தக் கணங்கள் தருகின்ற
அழியாரணங்கள் சுடுகின்றன
முள்ளாய் மனதில் தைக்கின்றன
ஈரவிழிகள் நனைகின்றன
பசியின் கொடுமை பரிதாபம்
பட்டினி வாழ்வில் உயிர்போகும்
எத்தனை போர்கள் எம்மினத்தில்
சுமந்திடும் சுவடுகள் சுடுகின்றன
சுக்கு நூறென உடல்கள் தகர்கின்றன
எதுவரை இவை தொடர்ந்திடுமோ?
எம்மினம் இன்றியே அழிந்திடுமோ?

இதுவரை நாங்கள் காத்திருந்த
எம்தேச விடுதலை புதைந்திடுமோ?
புலத்தின் போராட்ட வலிதானும்தான்
போக்கிடமின்றியே போய்விடுமோ?



இதுவரை நாங்கள் சுமந்திட்ட
இலட்சிய வேட்கைகள் கருகிடுமோ?
எழுந்திடுவோம் எங்கள் தமிழினமே
இழந்தவை இதுவரை போதுமென்று
இணைவோம் ஒன்றாய் அணிதிரண்டு
எதுவரை எம்மால் முடிந்திடுமோ
அதுவரை ஆர்ப்பாட்ட வலுத் தொடுப்போம்

அகிலத்தின் முன்றலில் தமிழினத்தின்
அவலத்தின் குரலாய் ஆர்ப்பரிப்போம்.
இதுவரை மௌனத்தை களைந்தெறிந்து
இனத்தினைக் காத்திட தோள் கொடுப்போம்.

# கோடி ... கோடி......



ஆயிரம் கோடி உறவுகள்
வாழ்ந்திட்ட புவிமீது
ஆயிரம் ஆயிரம் அடித்தடம்
பதிந்திடும் தரைமீது
ஆணியின் வேராய் பற்றுகள்
வளர்ந்திடும் உயிர்மீது
அகன்றிடும் கணத்தில்
அம்புகள் தைக்கும் பலர்மீது

ஒளிதரும் கதிரவன்
விடியலைத் தருவது செயலாக்க
உளிதரும் உழைப்பிலே
உருவத்தைப் படைப்பது வடிவாக்க
விழி தரும் காட்சிக்குள்
விந்தையை விதைப்போம் அறிவாக்கி
விளைவுகள் விளையும்
விதைபட்டே எழுந்திடும் புவிமீது

பலகோடி மூளையின்
திறன்களே உழைப்பாக்கம்
பற்பல கோடியாய்
பணங்களாய் பிறப்பாக்கும்
பல்துறை வளர்ச்சியில்
உச்சங்கள் கண்டிடும் முனைப்பாக்கம்
வசதிகள் வாய்ப்புகள்
வருடிடும் வாழ்வாக்கம்

தொழில் நுட்பத்தின் வளர்ச்சியில்
தொடர்புகள் கூடுது
கோடி கோடியாய்
கொண்டாட்டங்கள் நிகழுது

ஊரின் கோடியும் உறவுகள்
வாழ்ந்திடும் வாழ்விடமாகுது
நாதியற்றதாய் நம்மவர் வாழ்விடம்
புதைகுழியாய் மாறுது

அனலாய் எரியும் தீயின் கொழுந்தில்
புழுவாய் வாழ்வு
பூட்டிய கதவை உடைத்திட
புறப்படு தமிழா
கோடிகள் உனக்கு
ஈழத்தின் மண்ணில்
நாடிய தேசம் நமக்கு
விடியலை விரட்டும்
நம்வாழ்வின் கணங்கள்
ரணமாய் புதையும்
தாயகமண்ணே தாயின்மடிபோல்
கோடியில் கோடி
கோபுரக்கலசமாய் தேடிய மாடி.



## பாதைகள் மாறிடலாம்....

அன்பான தோழியவள்
பண்பாகத் தொடுத்த வினா
பாதைகள் மாறிடுமா?
பயணங்கள் தொடர்ந்திடுமா?
கண்மணியாய் காத்திட்டோம்
களிப்புடனே வளர்த்திட்டோம்
பின்னணியில் நாங்கள் எல்லாம்
பெரும் சுமைகள் என்றெண்ணி
காப்பகத்தில் விடுவாரோ?



கையில் பூங்கொத்தும் தருவாரா?
எம்மகத்தில் வருகின்ற
இயல்பான கேள்வியிது



புலத்தின் வாழ்விற்குள்
பூத்தெழுந்த வித்துக்கள்
புறத்தில் நடப்பவற்றை
காண்கின்ற கண்மணிகள்
நம்மினத்தின் பண்பாட்டை
நன்கே உணர்ந்தவர்கள்
வாழும் தடம்பிரண்டு
வாழ்ந்தாக மாட்டார்கள்
தளர்வாகும் வேளையிலே
தள்ளாடும் வயதினிலே
தைரியமாய் துணையாகி
தாங்கி நிற்பார் உறுதுணையாய்

வருகின்ற துணையதுவும்
வாஞ்சையுடன் அணைத்திட்டால்
நேசத்தின் நெருக்கங்கள்
பாசமாய் பெருகிடுமே
அனுபவத்தின் அறுவடைகள்
அவர்களுக்கும் கிட்டிடுமே
உருவாக்கம் தந்தவரை
உயிர்தந்து காத்தவரை
உயிராகப் பேணிடனும்
உழைப்பீந்து காத்திடனும்

மனிதத்தின் முதலுரிமை
மக்களின் பெருங்கடமை
உணர்ந்து வளர்ந்திடும்
இனிதான சேய்களை
மகவாகப்பெற்றிட்டால் ,
காப்பகத்தின் நுழைவாயில்
காணாது வாழ்ந்திடலாம்
மானிடராய் பிறந்திட்ட
மதிப்போடு இறந்திடலாம்.

# குமுறலால் குமுறுகிறேன்

மரணத்தின் ஒலிகள் மனதிலே கனக்குது
மாறாத வடுக்களாய் மனதினை உருக்குது
தகனத்தில் கண்டிட்ட பிணங்களின் குவியல்கள்
தாங்கிட முடியாத இதயத்தின் ரணங்கள்



ஆண்டுகள் மூன்று அகன்றிட்ட போதும்
அனலிடை மெழுகாய் கொதிக்குமே உள்ளம்
நில மகள் நடுக்கத்தால் நீண்டிட்ட துயரிது
நிவர்த்திக்க வழியினைக் கூறுதல் முறைமை

உலகினை உலுக்கிய போதினில் உதவினீர்
உதவிகள் இன்று தான் உயர்வெனத் தேவை
இடி விழுநிலைக்குள் இன்னமும் வாழ்கிறோம்
கடிதெனப்பொழுதைக் கழிக்கவே முயல்கிறோம்

உறைவிடமின்றியே உண்டிக்குத் தவிக்கிறோம்
அவலங்கள் சுமந்து தான் அன்றாடம் வாழ்கிறோம்
ஆண்டொரு தடவையா அவலங்கள் எமக்கு
வெந்தணல் இட்டு வேகின்ற வரைக்கும்
சுனாமியின் சுவட்டுக் காயங்கள் எரியும்
சொல்லொணா வடுக்களில் இதயங்கள் கருகும்
பட்ட துயர்களின் பாதியைக் குறைத்திட
பாரினில் நீங்களே பாதையைக் காட்டுங்கள்
குமுறலால் குமுறும் எங்களைத் தேற்றுங்கள்

இலங்கையின் யாழ்மாவட்டத்திலுள்ள நெடுந்தீவு என்னும் ஊரைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

ஜேர்மனியில் ஹவிச்பெக் **(Havixbeck)** நகரில் வாழ்ந்து வருபவர்.

## திருமதி.மேரி அகத்தா ஜெயபாக்கியம் நடேசன்

(ஜெயாநடேசன்)

# எப்போது விடிவு கிடைக்கும்

பத்துமாதம் பாரச்சுமை தாங்கி
பக்குவமாய் பெற்றெடுத்து
பாலூட்டிச் சீராட்டி
வளர்த்த தாயை இழந்தோம்
பாசமுடன் தோளிற் சுமந்து
அணைத்த தந்தையை இழந்தோம்
ஒரு கோப்பையில் உண்டு உறவாடிக்
கூடி வாழ்ந்த சகோதரர்களை இழந்தோம்
வகுப்பறையில் ஒன்றாகப்
படித்துப் பரீட்சை எழுதிய
பல நண்பிகளை இழந்தோம்
பிறந்து வளர்ந்த தாய் மண்ணை இழந்தோம்
அன்போடு அறிவு புகட்டிய
ஆசிரியர் பலரை இழந்தோம்
அடியெடுத்து வைக்கும் இடமெல்லாம்
கண்ணி வெடிகள்
கொடி பிடித்துச் சென்றவர்களும்
குண்டுக்கு இரையாகினர்
அழுதோம் அவலமானோம்
ஒப்பாரி வைத்தோம்
சிறகொடிந்த பறவைகளாக
கூண்டுக் கிளிகளாக சிரிப்பிழந்து
முடங்கிய குழந்தைகளாக
துவண்டு கிடக்கும் முதியோர்களின்
கோலங்களின் நினைவாக
அனுதினமும் ஏக்கத்துடன் அழுகின்றோம்
மரணத்தின் பிடியில்
கம்பிவேலிக்குள் சிறையானோம்
விடியலுக்காய் தினமும்
காத்திருந்து காத்திருந்து
இரத்தக் கண்ணீரை மட்டுமே
மிச்சமாக்கி கடந்து செல்கின்றன
எம் ஊனக் கால்கள்
வலியோடும் ஏக்கத்தோடும்
எம் குண்டுபட்ட இதயங்கள்



முள்வேலிக் கம்பிக்குள்
முனகல் ஓசைகள்
எம்மவரின் வாழ்வுக்கு
எப்போது விடிவு கிடைக்கும்
வீதி விளக்குகளின் ஒளியில்
இரவு பகலாய் சிரித்துப் படித்து
விளையாடிய பள்ளிச் சிறார்களும்
சிந்தித்து மகிழ்ந்து
செயலாற்றும் மின் விளக்குகளும்
ஏக்கத்தோடு பெருமூச்சுவிட்டு வருந்துகின்றன
நாளும் கல்வி கிடைக்குமென
கனவு கண்டோம்
கம்பி வேலியின் கம்பிகளை
எண்ணிக் கொண்டு – கனவுகளை
பொய்யாக்கிக் கொண்டு
முடங்கிக் கிடக்கின்றோம்
பிரிந்துபோன எம் உறவுகள் ஒன்றுசேர
உறவுகளின் உள்மனதில்
ஆழம் புரிந்திட
உயிர்களின் பெறுமதியை
அறிந்து வாழ்ந்திட
எம்மண்ணிற்கு எப்போது
விடியல் கிடைக்கும்
எப்போது முட்கம்பி வேலிகள்
திறக்கப்படும்?
எம்தேசத்தில் எம் அடிச்சுவடுகள்
கால் பதிக்கும்
மனம் தளரவில்லை
நம்பிக்கை என்ற ஒன்றுண்டு
விடிவு கிடைக்க - இனி
இறைவன் பதில் தரட்டும்
ஏங்குகிறோம் எம் மக்களின்
விடிவுக்காய் இறைஞ்சுகிறோம்
தொடர்ந்தும் இறைவனிடம் வல்லமைக்காய்
இரங்குமய்யா எம் அப்பாவி மக்கள்மேல்
இரங்குமய்யா



# முதுமையின் ஏக்கம்

வாழ்க்கையின் முதுமையை
நினைத்து வருந்துகின்றாயா?
வாழ்க்கை என்பது
வாழ்வில் பெரும் போராட்டம்தானே
பிறப்புக்கு முடிவு கட்டுவது
இறப்பு என்பது தெரியாது போலும்
அதுவும் முதுமைப் பருவம்
அடைந்து விட்டால் ஏக்கம்தானே
இளவயசில் கிட்டிப் புள்
விளையாட தடி முறித்தவர்
பட்டிக்குத் தீனியாய்
பச்சைக் குழை ஒடித்தவர்
முற்றத்து மண்ணில்
கெந்தி விளையாடி உருண்டவர்
வேண்டா வெயில் காற்று மழை
மேனியில் சிலிர்க்க ஊருலகமெல்லாம்
உலகம் சுற்றும் வாலிபனாக
ஓடியாடி திரிந்து
பருவத்தில் வளர்ந்து பெருத்து
வசீகரமாக இருந்து - இன்று
கூனிக்குறுகி சிறுகுழந்தையானார்
இவையெல்லாம் தரை தட்டியதாக
போச்சு இன்று
படிக்கட்டில் ஏறி ஏறி தள்ளாடி இறங்கி
தடியொன்றை ஊன்றலாகி
முக்காலாகிப் போனார்
காலாட்டி வாழ்ந்து
கலகலப்பாக கண்மூடித் திரிந்தார்



அவராடித் திரிய பார்த்து மகிழ்ந்தவர் பலர்
இன்று காவோலைச் சருகாகி
குருத்தோலை சிரிக்கலானார்
வாக்கும் நினைவும் வழிமாறிப் போச்சு
பேச்சும் போக்கும் குறிதவறிப் போச்சு
பார்வையும் பழுதாகிப் போச்சு
வாழ்ந்து வளந்துயர்ந்து
வளம் சேர்த்த அவர் இன்று
மூலையில் முடங்கி
முதுமையாகி விட்டார்
சூப்பிய பனம்பழத் தும்பு போல
முடி வெள்ளை நரையாகி
தசையும், சுருங்கிய தோலும்
ஒடுங்கிச் சுருங்கி விட்டார்
காலனின் கேட்டைவரை
அதை உணரவில்லை
நிலவாய் தேய்கிறது ஆயுள்
நினைத்துப் பார்க்க முடியவில்லை
பொல்லாத அந்தக் காலன்
எப்போதும் வரலாம்
அறிவிப்பு இல்லாமல் போகும்
இன்றோ நாளையோ
என்றோ ஒரு நாள்
மனித உயிர் பிரிவது உண்மை
அது இறைவனின்
கடைசித் தீர்ப்பு எனலாம்
பிரிவையிட்டு அழுவார் பலருண்டு
ஒப்பாரியும் வைப்பார்
இரு நாட்களோ இருபது நாட்களோ
மறந்திடுவர்
சாவு வரும் வேளைகளில்





யாவும் சருகாகி விடும்
மண்ணுக்கு உரமாகிவிடும் அந்த உடல்
பச்சைப் பசேலென புற்கள்
தன் வளர்ச்சி காட்டும்
அவர் வாழ்ந்த சுவடுகளும்
முற்றாக மறைந்து விடும்
எப்போ மடிந்தாலும் அப்பெயர்
எப்போதும் இறவாமல் வாழும்
ஆயிரந்தான் இறை வேண்டுதல்
அயராது செய்தாலும்
இறை விருப்பம் இல்லையென்றால்
வயோதிபம் இவ்வுலகின் நிலைபெயரா
அழியா வாழ்வுதானே
மரணத்துக்கு அஞ்சாதவனுக்கு
மரணம் இல்லை



## புலம் பெயர்ந்து வந்ததினால்....



இயற்கையிலே மாற்றம் வரும்
பறவைகளோ புலம் பெயரும்
எவரளித்த மாற்றத்தினால்
நாம் இங்கு புலம் பெயர்ந்தோம்
அழகொளிரும் தாய்நாடு

எமக்கில்லை அது சோகம்
எதிரிகளின் சதிகளினால்
விதியரசி வேவுகின்றாள்
பயங்கர ஆயுதப்போர்
பிணம் பிணமாய் தெருவோரம்
அன்னை அவளே எழுப்புகின்றாள்
அவலக்குரல் அவ்வோரம்
வெடிச்சத்தம் கேட்டதுமே
சிதறிவிடும் பறவைகளாய்
உலகமெல்லாம் பரவியோடும்
எம்மவரின் வாழ்வினிலே
அகதி என்ற போர்வையிலே
அடைக்கலமும் புகுந்து விட்டோம்
நாடு இழந்து மொழி இழந்து
நிற்கும் நிலை இங்கே
மதம்மாறித் தவிக்கின்ற
மனித இனமும் இங்கே
சமயங்கள் வாழ்வுக்கு
வழிகாட்டும் நிலையினிலே
பற்பல கொள்கைகளினால்
வாழ்வினிலே பெரும் போராட்டம்
பகுத்தறிவுத் தமிழனுக்குப்
பாதியிலே திண்டாட்டம்
பணத்தையும் பலத்தையும்
பார்த்துவிட்ட சிலர்
மானிடர் தம் வாழ்வினிலே
பிளவுபட்டது என்னே
நம்மொழியைச் சிலர் பயில வெட்கம்
பிறமொழியில் ஆர்வம்
இருக்கின்ற நிலையினிலே
எது செய்தால் மரம் பிழைக்கும்





எடுக்கின்ற முயற்சியிலே
எம்மொழியும் வேர் பிடிக்கும்
படிக்கின்ற முழுமையிலே
பிஞ்சுகளும் கனியாகும்
சேர்ந்திடுவோம் எமதுள்ளம்
வீழ்ந்திடுமோ மறத்தமிழும்
சாய்த்திடவோ நினைக்கின்றார்
சரித்திரத்தை மறக்கின்றார்
உற்றாரை உடமைகளை விட்டுவிட்டு
ஓடிவந்த எமக்கு
உரைத்தானே சில இடங்கள்
பாதியிலே ஓடு என்று
ஆனைக்கொரு காலமென்றால்
பூனைக்கும் ஒரு காலம் வரும்
அந்நியநாட்டின் அகதி வாழ்வும்
நமது கதையும் தொடர்கதையே
நாம் வாழ்ந்த தாய்நிலந்தான்
தஞ்சம் என்று உணர் நெஞ்சே
நீதிதனைச் சாகடிக்கும்
நிலையினிலே மாற்றம் வரும்
பெண்ணினத்தை அடிமையென்று
கொண்டு நின்ற தமிழனே
பெண்ணினத்தின் தீரமதை
ஈழமண்ணில் காணுவாய்
விண்ணிலவர் வெடிக்கிறார்
உன்னைச் சுட்டிச் சொல்கிறார்
தங்கத்தமிழ் ஈழமக்கள்
இதயவேட்கை சுதந்திரம்
எங்களுக்கும் இதயங்களின்
அந்த எண்ணம் இருக்குமோ
இன்று இந்த நாடுகளில்

ஆண்மை வெட்கி நிற்கவே
விடிவு தேடி வந்து நின்று
வாழுகின்ற நாங்களோ
அகதியாகி அடிமையாகி
நாடுநாடாய் அலைகின்றோம்
எமக்கென்று தனியுலகம்
உருவாகும் காலம்வரை
இறையரசின் கனவுகளை
மனதிலே நிலைநிறுத்தி
இன்றுவரை மறவாத
புதுஉலகம் படைத்திடவே
உறவுகளின் சங்கமத்தில்
உண்மையன்பு பெற்றிடுவோம்
கடமையுள்ள தமிழ்மகனாக
தலைதூக்கி நின்றிடுவோம்.


# ஐரோப்பாவில் பெண்கள்

குடும்பத்தின் குத்துவிளக்காம் பெண்கள்
அகல்விளக்காகக்கூட மதிக்கப்படாத காரணத்தினால்
தெருவிளக்காகிவிட்ட அவலங்கள்
கருச்சிதைவாகிய பெண்கள்
சீதனம் சீர்வரிசை அற்ற பெண்கள்
பெண்களாகப் பிறந்து விட்டதனால்



முப்பது வயதாகி நரைமுடியோடு சிலர்
அடுப்பூதும் பெண்ணுக்குப் படிப்பெதற்கு
என்று அடிமை உணர்வுடன்
காலத்தைக் களைந்தெறிந்து சுதந்திரமாய்
விடுதலை கிடைத்து ஏங்கி நிற்கும் தன்மையில்
பெண்மை கண்டேன் பெருமகிழ்வு கொண்டேன்
உழைப்பினும் ஆணுக்குப் பெண் நிகர் என
விறுவிறுப்புடன் விரைகின்ற வேகம் கண்டு
விழிப்புற்று வியந்து போனேன்
அன்று மூலையிலே முடங்கிக் கிடந்த பெண்ணினம்
இன்று வீறுநடைபோட்டு வெளியில் செல்வதை
விழிப்புற்று ஐயப்பாடின்றி அறிந்து கொண்டேன்
பள்ளிப் படிப்பிலும் வாகனங்கள் ஓட்டுவதிலும்
சென்ற இடமெல்லாம் சிறக்கின்றார் பெண்கள்
என்றுகூடச் செருக்குற்று இருந்தேன்
சிரித்தபடி திரும்பிப் பார்த்தேன் திடுக்குற்றேன்
அழகான பெண்ணாக அமுதான கண்ணாக
எழிலான உருவோடு எளிமையான நடையோடு
யன்னலற்ற சட்டையும் சேலையோடும் வந்தவள்
அரையும் குறையுமாக அலங்கோல உடையோடு
அலங்காரப் பொருளாக அவசரமாக வந்தாள்
குறுகியபடி கூந்தலையும் கட்டையாகக் குறைத்திருந்தாள்
கோலம் மாறி முடிக்கும் பலநிறமிட்டு முன் வந்தாள்
கண்ணகி போற்றும் கற்புக்கரசிகளோ
கண்ணை மூடும் விதியில் வாழ்வைத் தொலைத்தும்

சோகங்களைச் சுமந்து கொண்டு போலி வாழ்வில்
வாழ்விற்காய் கோடேறும் அளவில் விவாகரத்து
விவகாரங்களில் அலைந்து திரிவதைக் கண்டேன்
ஐரோப்பிய நாடுகளில் வளர்ந்து வரும் சந்ததிக்கு
கலாச்சார அடையாளத்தைக் காட்டிக் கொடுக்க
முகவரிகளைத் தொலைத்தவர்களாய் ஓடி ஒதுங்கி
சோகங்களை மடியில் சுமந்து கொண்டும்
நாடுவிட்டு நாடாய் அலைவதை அறிந்து கொண்டேன்
பெண்பெருமை பாடுவதற்கு பெருமிதம் அடைய
அடுத்ததோர் பிறவி எடுத்து ஐரோப்பாவில் பிறக்க
அருந்தவம் செய்து ஆறுதலாய் பிறக்க வேண்டும்
நாங்கள் நாங்களாய் பண்புடன் வாழ வேண்டும்.


சங்கமம்
கவிதைக் குவியல்
தமிழ் எழுத்தாளர் சங்கம் - ஜேர்மனி